# சுடரொளி
# 2011



## யாழ்.செங்குந்த இந்துக்கல்லூரி
## திருநெல்வேலி

# சுடரொளி

## 2011

யா / செங்குந்த இந்துக்கல்லூரி

திருநெல்வேலி

| | | |
|---|---|---|
| நூல் | : | சுடரொளி |
| வெளியீடு | : | மலர்க்குழு |
| காப்பாளர் | : | திரு. R. பாலகுமார் (அதிபர்) |
| ஆலோசகர்கள் | : | திருமதி ரு. இராஜரட்ணம்.<br>திரு. வி. ஜெயராஜ் |
| இதழாசிரியர்கள் | : | திருமதி க. முத்துக்கிருஸ்ணன்<br>திருமதி உ. ஜெயராசா |
| இணையாசிரியர்கள் | : | திரு. கிருபாகரன்<br>திரு. சி. சசீலன்<br>திருமதி. அ. நிஷாகரன் |
| வெளிக்கள நிர்வாகம். | : | திரு. இ. செல்வமகேசன்<br>திருமதி. பூ. சத்தியன் |
| முகவரி | : | யாழ். செங்குந்த இந்துக்கல்லூரி,<br>திருநெல்வேலி. |
| பதிப்பு | : | குரு பிறிண்டேர்ஸ்,<br>39/2, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.<br>021 222 8266 |

உ

ஓம் கணபதியே நமக



திருச்சிற்றம்பலம்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கைதணி விப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து

திருச்சிற்றம்பலம்



# ஸ்ரீ பாலகதிர்காம தேவஸ்தான குருக்களின்

# ஆசிச்செய்தி

**பிரம்மஸ்ரீ கு. குமாரக்குருக்கள்,**
ஸ்ரீ பாலகதிர்காம தேவஸ்தானம்
நல்லூர், யாழ்ப்பாணம்.

செங்குந்த இந்துக் கல்லூரி 01.10.1934ம் ஆண்டு தொடக்கம் முதலாம் ஆண்டு தொடங்கி 13ம் ஆண்டு வரை பாடசாலையாக இயங்கி மாணவர்களுக்கு பல வழிகளிலும் கல்வியை போதித்து வந்தது. பல அதிபர்கள் பதவியேற்று பாடசாலையையும் இளைஞர்கள் கல்வியையும் மேம்படுத்தி வந்தனர். 1971ம் ஆண்டில் அயற் பாடசாலைகளில் மாணவர்கள் குறைவாக இருந்தமையால் எமது பாடசாலை மாணவர்கள் அப்பாடசாலைகளுக்கு பரிமாற்றம் செய்யப்பட்டனர். அதன் பின்னர் எமது பாடசாலை 6ம் ஆண்டிலிருந்து 13ம் ஆண்டுவரை கற்றல் செயற்பாடுகளுக்காக செயற்படத்தொடங்கியது. திரு. இரத்தினம் பாலகுமார் என்பவர் ஆரம்பப்படிப்பை இங்கு மேற்கொண்டார். இப்பாடசாலையில் படித்து தனது விடாமுயற்சியாலும், கல்வியில் கொண்ட ஆர்வத்தினாலும் இன்று இக்கல்லூரியின் அதிபராகக் கடமையைப் பெறுப்பேற்றார் இவர்காலத்திலே கல்லூரியில் படித்த சகமாணவர்களும் ஆசிரியர்களாகக் கடமையாற்றி வருகின்றனர். அங்கு பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள் அனைவரும். அதிபரின் ஆலோசனைக்கு இணங்க செயற்பட்டு வருவது பாராட்டுக்குரியது. மேலும் மாணவர்களை பல துறைகளிலும் சிறந்த முறைகளில் பயிற்றுவித்து வழிநடத்தும் ஆசான்களாக செயற்படுத்துகின்றனர். இன்றைய காலகட்டத்தில் பெயர் பெற்ற கல்லூரிகளில் ஒன்றாக செங்குந்த இந்துக்கல்லூரியும் திகழ்வது பெருமைக்குரிய விடயம். இயல், இசை, நாடகம் உயர்கல்வி ஆகியவற்றில் இங்கு கல்வி கற்ற மாணவர்கள் முன்னேறி எமது நாட்டிலும், வெளிநாடுகளிலும் டாக்ட்ராகவும், என்ஜினியராகவும், பேராசிரியர்களாகவும், வேறு பல துறைகளில் முகாமைத்துவம் வகுத்து வருவது இக்கல்லூரியின் பெருமைக்கு சான்றாகும். அண்மைக்காலங்களில் மாணவர்கள் விளையாட்டுப்போட்டியில் தேசிய மட்டம் வரை சென்று பாராட்டைப் பெற்றுள்ளனர். பாடசாலையின் வளர்ச்சிக்கு சிறந்த முறையில் வழிநடத்தும் அதிபரையும், அவருடன் ஒத்துழைக்கும் தோழமை கொண்ட ஆசிரியர்களையும் ஆர்வத்துடனும் ஊக்கத்துடனும், செயற்பட்டு பெருமைதேடிக்கொண்டிருக்கும் இன்றைய மாணவர்களையும் வாழ்த்துவதோடு ஸ்ரீ பாலகதிர்காமப் பெருமானின் அருளும்பெற்று வாழ என் ஆசிகளையும் வழங்குகிறேன்.

*கற்க கசடற கற்பவை கற்ற பின்*
*நிற்க அதற்குத் தக.*

வணக்கம்




# கல்லூரிக்கீதம்

வாழ்திடுவோம் எங்கள் கல்லூரித்தாயை
வளமுடன் மாணவர் நாமே

செங்குந்த இந்துக்கல்லூரியை என்றும்
எங்களுக்கு கல்வி அளித்து
பொங்கும் புகழுடன் வாழ்ந்திட நாமே
திங்கள் முடியோனைத் துதிப்போம்

கன்னல் சுவைதரும் தமிழ் மொழி யுடனே
அன்னிய ஆங்கிலம் சேர்த்து
இன்னிசை யோடுயர் இலக்கியம் பலவும்
என்றுமே அளித்திடும் அன்னாய்!

இத்தல மீதினில் மாணவர் எல்லாம்
உத்தமராய் வாழவேண்டி
. சத்தியம் ஒழுக்கம் எனுமுயர் பண்பை
எத்தினமும் ஊட்டும் தாயே!

வறுமையாய் வாடினும் வளமுற்று வாழினும்
மறந்திட மாட்டோம் உன்நலனை
குறைகள் இன்றி உனைக் குவலயம் போற்றிட
இறைவனை வேண்டுவோம் நாமே.

எந்தை போல் வந்தெமக் கறிவுரை கூறும்
இராசரெத்தினம் என்றும் வாழ்க.
சிந்தையில் இந்துக்கள் கல்வியை நிறைத்த
"இந்துபோட்" ஸ்தாபனம் வாழ்க

வாழிய வாழிய எங்கள் கல்லூரி
வாழிய வாழிய என்றும்.
வாழ்க! வாழ்க!! வாழ்க!!!
வளம் பல பெருக்கி என்றும்
வாழிய எங்கள் கல்லூரி

இயற்றியவர்:
சிற்பி எஸ். சிவசரவணபவன்

# தமிழ்மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!

வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினுந் தண்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே!


எங்கள் தமிழ்மொழி! எங்கள் தமிழ்மொழி!
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!

தொல்லை வினை தரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ் நாடே!

வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழி!
வாழ்க தமிழ்மொழியே!

வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே.



உயர்திரு. சு. இராசரட்ணம்



உயர்திரு.ச. இளையதம்பிசாத்திரியார்

# பாடசாலை தலைமைத்துவம்

மனிதவள முகாமைத்துவத்தில் நெறிப்படுத்தல் என்பது மிகவும் வேண்டப்படுகின்ற தொழிற்பாடாக மாறியுள்ளது. எந்தவொரு மேலதிகாரியும் தான்பணியாற்றும் நிறுவனத்தினது இலக்கினை அடைந்து கொள்வதற்கு தனக்குக் கீழ் பணியாற்றும் நபர்களை நெறிப்படுத்த வேண்டிய கடமைப்பாட்டைக் கொண்டிருக்கிறார்.

| | |
|---|---|
| தூரநோக்கு | Vision |
| இலட்சிய நோக்கு | Mission |
| நோக்கம் | Object |
| குறிக்கோள் | Goal |

மகுட வாசகம் : உள்ளுவதெல்லாம் உயர்வு உள்ளல்

தூரநோக்கு : எதிர்கால சவால்களுக்கு முகம் கொடுக்கக்கூடிய மாணவ சமுதாயத்தைக் கட்டியெழுப்புவோம்.

பணிக்கூறு :
1. கணினி அறிவை விருத்தி செய்தல்
2. இடைநிலைக் கல்வியை வினைத்திறன் அடையதாக்கல்.
3. உயர்கல்வி மூலம் தேசிய குறிக்கோளை அடையச்செய்தல்.
4. மாணவர்களை சுய வாழ்விற்கும் பொது வாழ்விற்கும் பொருத்தப்பாடு உடையவராக்கல்.

## கல்லூரி அதிபர்




திரு. இ. பாலகுமார் (S.L.P.S.1)




# வாழ்த்துச் செய்தி

**இ. இளங்கோவன்,**
செயலாளர்,
கல்வி, பண்பாட்டலுவல்கள்,
விளையாட்டுத்துறை அமைச்சு,
வடமாகாணம்.

யா/செங்குந்த இந்துக் கல்லூரி நீண்டகால கல்விப் பாரம்பரியம் கொண்ட ஒரு கல்விக் கோயிலாகும். புகழ்பூத்த ஆசிரிய குழாமைக் கொண்டு கல்விப்பணி செய்து பலரை ஆளாக்கிய பெருமை கொண்டது. பலரை பல்கலைக்கழகத்திற்கு புகச் செய்து புகழ் சேர்த்த ஆற்றல் இக் கல்லூரிக்கு உண்டு.

"சுடரொளி" சஞ்சிகை நீண்ட காலம் தொடக்கம் கல்லூரியினால் வெளியிடப்பட்டு வந்தது. இடைக்காலத்தில் அவ் வெளியீடு இடையறுந்து போயிருந்தது. தற்போது கடந்த மூன்று ஆண்டுகளாக வெளிவந்து கொண்டிருக்கும் இச் சஞ்சிகை இந்த ஆண்டும் மாணவர்களின் ஆக்கங்களை மட்டும் தாங்கி வெளிவருவது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

மாணவர்களின் படைப்பாற்றல் பெருகுவதற்கு இவ்வகை வெளியீடு உதவும் என்பது கண்கூடு. "சுடரொளியை" வெளியீடு செய்வதற்கு பின்புலமாக நின்ற அதிபர், ஆசிரியர் குழாத்தினருக்கு பாராட்டுக்களைத் தெரிவிப்பதுடன் "சுடரொளி" தொடர்ந்து ஒளிர்ந்து பயன் பெற வாழ்த்துகிறேன்.



# வாழ்த்துச் செய்தி

**ப. விக்னேஸ்வரன்,**
மாகாணக்கல்விப் பணிப்பாளர்,
மாகாணக் கல்வித்திணைக்களம்.
வடமாகாணம்,
சுன்னாகம்.

புகழ் பூத்த யா/செங்குந்த இந்துக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவினை முன்னிட்டு வெளியீடு செய்யப்படும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்வடைகிறேன். நீண்ட ஒழுக்கமுள்ள கல்விப் பரம்பரையை உருவாக்கிய இக் கல்லூரி தனது சீரிய பணியைத் தொடர்கிறது.

இச் சிறப்பு மலர் தற்போது கல்விகற்கும் மாணவர்களை உற்சாகப் படுத்துவதுடன் பெற்றோர், பழைய மாணவர்களையும் கல்லூரியுடன் இணைக்கும் பாலமாகத் திகழும் என்பதில் ஐயமில்லை கல்வியிலும் இணைபாடவிதான நிகழ்சிகளிலும் மாணவர்களை வழிப்படுத்தும் அதிபர், ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான சேவையை பாராட்டுகிறேன்.

இக்கல்லூரி தொடர்ந்து பல வளங்களைப் பெற்று வளர்ச்சி பெற வாழ்த்துகிறேன்.

நன்றி



# வாழ்த்துச் செய்தி

**யோ. ரவீந்திரன்**
வலயக்கல்விப் பணிப்பாளர்,
வலயக்கல்வி அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

யா/செங்குந்த இந்துக் கல்லூரியின் பரிசில் நாள் நிகழ்வுக்கு எனது வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். இக்கல்லூரி தனது நீண்ட காலப் கல்விப் பணியில் மாணவர்களது பன்முக ஆளுமைத்திறன்களை விருத்தி செய்யும் நோக்கில் தனது செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. அந்த வகையில் மாணவர்களது திறன் விருத்திக்குக் களமமைத்துக் கொடுத்து அவர்களது ஆளுமைப் பண்புகளை சமூகத்துக்கு அளிக்கை செய்யும் ஒரு நாளாக இப் பரிசில் தினம் அமைகிறது. பாடசாலைகளின் செயற்பாடுகளில் இது முக்கியமான ஒரு செயற்பாடும் கூட இன்றைய தேர்ச்சிமையக் கல்வியின் கருப்பொருளான மாணவர்களின் ஆக்கத்திறன் வெளிப்பாட்டுக்கும், தரமான அடைவினை நோக்கிய பயணத்துக்கும் களமமைத்துக் கொடுக்கும் நன்நாளாக இத்தினம் அமைய எனது வாழ்த்துக்கள்

கடந்த காலங்களில் இக் கல்லூரி கல்வி, ஆன்மீகம், விளையாட்டு, தலைமைத்துவப்பாங்கு, கலை இலக்கிய ஆக்க முயற்சிகள் எனப் பல்துறைசார் ஆற்றல்களை மாணவரிடையே வளர்த்து வீரியம் மிக்க சமூக உருவாக்கத்துக்கு அளப்பரிய பணியினை ஆற்றியதை நான் அறிவேன் இத்தகைய சமூகப் பணியினை மேலும் முன்னெடுத்துச் செல்ல இக்கல்லூரிச் சமூகத்தினை வாழ்த்துவதுடன், இப்பரிசுத்தினம் சிறப்புற நடைபெற எனது நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.



# வாழ்த்துச் செய்தி

**பா. செந்தில்நந்தன்.**
பிரதேச செயலர்,
பிரதேச செயலகம்,
நல்லூர்.

யாழ்ப்பாணத்து மக்களின் பெரும் சொத்தாக அன்றும், இன்றும், என்றும் விளங்குவது கல்வியாகும். இத்தகைய அழிவில்லாத ஒப்பற்ற கல்விச் செல்வத்தை எம்மவருக்கு வழங்கியவை யாழ்பாணத்துப் பாடசாலைகளும், கல்லூரிகளும் ஆகும். அந்த வகையில் நல்லூர்ப் பிரதேச செயலகப் பிரிவுக்குள் அமைந்து மக்களுக்கு கல்விச் செல்வத்தை வாரி வழங்கிய யா/செங்குந்த இந்துக்கல்லூரி குறிப்பிடத்தக்கதாகும்.

ஆரம்பத்தில் ஒரு சில நல்ல உள்ளங்கொண்டவர்களால் “சங்க மடம்” என்ற பெயருடன் ஆரம்பிக்கப்பட்ட இக் கல்லூரி சைவ அபிமானிகளாலும், ஊர் பெரியவர்களாலும் வளர்த்தெடுக்கப்பட்டு இன்று மாடிக்கட்டடங்களில் வகுப்பறைகளை கொண்டமைந்த கல்லூரியாக எம் முன்னே காட்சி அளிக்கின்றது. மேலும் பல வைத்தியர்களை, பொறியியலாளர்களை, பட்டதாரிகளை உருவாக்கித்தந்த இக் கல்லூரி கடந்த 2009 வருடம் தனது பவளவிழாவைக் கொண்டாடியமை குறிப்பிடத்தக்கதாகும். அத்துடன் இக்கல்லூரி ஆரம்பித்த காலம் முதல் இற்றை வரை இக்கல்லூரியில் கற்பித்த ஆசிரியர்கள் இக்கல்லூரியை வழிநடத்திய ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் போன்றவர்களின் பணியும், சிறப்பித்துக் குறிப்பிட வேண்டியதாகும். இவர்களின் உழைப்பினால் தான் இன்று இக்கல்லூரி யாழ்ப்பாணத்தில் உள்ள ஏனைய கல்லூரிகளுடன் போட்டியிட்டு கல்வி மற்றும் கல்விசாரச் செயற்பாடுகளிலும் பிராகாசிக்கின்றது. மேலும் இக்கல்லூரியின் பழைய மாணவர்கள் உலகெங்கும் வாழ்ந்து வருவதோடு இவர்கள் தங்கள் கல்லூரிக்கு மகத்தான சேவையாற்றி வருகின்றனர். அந்த வகையில் இக்கல்லூரியினால் ஆண்டு தோறும் வெளியிடப்படும் கல்லூரி மலருக்கு வாழ்த்துத் தெரிவிப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். நல்லூர்க் கல்விக் கோட்டத்தில் இக் கல்லூரி மென்மேலும் சிறப்படைந்து மாகாணமட்டத்தில் நல்ல பெறுபேறுகளை பெற வேண்டும் என இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.



# வாழ்த்துச் செய்தி

**சி. மாணிக்கராஜா,**
கோட்டக் கல்விப் பணிப்பாளர்,
கோட்டக்கல்வி பணிமனை,
நல்லூர்.

ஆண்டு தோறும் யா/செங்குந்த இந்துக் கல்லூரியானது "சுடரொளி" சஞ்சிகையினை வெளியிட்டு வருவது, குறிப்பிட்ட பாடசாலையின் மாணவர்களின் ஆக்கத்திறன் வெளிப்பாடுகளில் பாடசாலை நிர்வாகம் கொண்டுள்ள அதீத அக்கறையினை வெளிப்படுத்துவதாக உள்ளது.

பல பாடசாலைகள் மாணவர்களுக்கு கல்வி கற்பித்தல் மட்டும் போதும் என்ற நினைவில் இருக்கும் போது இப் பாடசாலை மாணவர், ஆசிரியர்களின் சுய ஆக்கங்களை வெளியிட்டு அவர்களை சமுதாய சிற்பிகளாக வெளிக்காட்டுவது பாராட்டுக்குரியதொன்றாகும்.

உலகின் பல வளர்ந்த நாடுகளில் நாளொன்றுக்கு ஆயிரக்கணக்கான வெளியீடுகள் இடம்பெறுகின்ற இக் காலத்தில் இது போன்ற சஞ்சிகைகள் சிலவற்றையாவது இப் பாடசாலை வெளியிட்டுக்கொண்டிருப்பது கல்வியுலகிற்கு ஆற்றி வரும் மிகப் பெரிய பணி என்றே கூற வேண்டும். இன்று வெளியிடப்படும் இச் சஞ்சிகை நவீன காலத்தின் தேவைகளை நிறைவு செய்யத்தக்க வகையில் அமைவதோடு எதிர்காலத்திலும் எது வித சோர்வுகளும் இன்றி வெளியிடப்பட இறைவன் அருள் புரிய வேண்டும் என வேண்டி வாழ்த்துகின்றேன்.

நன்றி



அவுஸ்திரேலியகிளை, யாழ் / செங்குந்த இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கத்தின் முன்னாள் தலைவரின்

# வாழ்த்துச் செய்தி

**தம்பி இராசலிங்கம்**
(முன்னாள் தலைவர்)
அவுஸ்திரேலியா
பழைய மாணவர் சங்கம்.


அன்புடையீர்,

எமது யாழ். செங்குந்த இந்துக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு உயர் செல்வமாகிய கல்விச் செல்வத்தை வளர்த்தெடுப்பதில் பவளமாகி, தனது 77வது வருடத்தைப் பூர்த்தி செய்வதையிட்டு, நாம் பெருமகிழ்ச்சி அடைகிறோம். இவ்வேளையில் நடத்தப்படுகின்ற அதன் பரிசளிப்பு விழாவையிட்டு, எமது பாடசாலை தொடர்ந்தும் சிறப்பான கல்விச் சேவையை மாணவர்கட்கு வழங்கி, மாணவர்களை கல்வி முன்னேற்றப் பாதையில் வீரநடையுடன் இட்டுச்செல்ல வேண்டுமென அவுஸ்திரேலிய பழைய மாணவர் சங்கம் சார்பாக எமது மனமார்ந்த வாழ்த்துகளையும், நல் ஆசிகளையும் தெரிவிப்பதில் நாம் மிகப் பெருமையும், மட்டற்ற மகிழ்ச்சியும் அடைகிறோம்.

யாழ் / செங்குந்த இந்துக் கல்லூரியின் 15வது அதிபராக மதிப்பிற்குரிய திரு. இ.பாலகுமார் அவர்கள் சேவைபுரியக் கிடைத்தது எமது பாடசாலைச் சமூகம் செய்த நற்பலனாலேயாகும் என்பதை பெருமையுடன் குறிப்பிட விரும்புகிறேன். எமது பாடசாலையின் கடந்தகால சில அதிபர்கள் நீண்டகாலமாக தமது சேவையை சிறப்பாகவும், வேறு சில அதிபர்கள் குறுகிய காலத்தில் தமது சேவையை மிகச் சிறப்பாகவும் எமது கல்லூரிக்கு வழங்கியுள்ளனர் என்பதனைப் பலரும் அறிவர். அந்த வகையிலே தற்போதைய எமது அதிபர் மதிப்பிற்குரிய திரு. இ. பாலகுமார் அவர்கள் தமது கடமைகளை ஏனைய ஆசிரியர்களின் முழு ஒத்துழைப்புடன் சிறப்புற ஆற்றிவருவது யாவரும் அறிந்ததே.

ஒரு பாடசாலையின் கல்வி முன்னேற்ற வளர்ச்சி சிறப்புற, அதன் அதிபர், ஏனைய ஆசிரியர்கள், மாணவர்கள், அவர்களது பெற்றோர்கள், நலன் விரும்பிகள் ஆகியோர் கடுமையாக உழைக்கவேண்டும் என்பதனை நாம் நன்கு உணரவேண்டும்.
தனது 77ம் ஆண்டில் எமது கல்லூரி பரிசளிப்பு விழாவை கொண்டாடும் இச் சந்தோஷமான வேளையில் மீண்டும் எமது உளம்கனிந்த நல் வாழ்த்துக்களையும், நல் ஆசிகளையும் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

*எண்ணுவது உயர்வே!*



# வாழ்த்துச் செய்தி

**இ. பாலகுமார்,**

அதிபர். யா/செங்குந்த இந்துக் கல்லூரி

பவள விழாவில் பவனி வந்த எம் கல்லூரி அன்னை அகவை எழுபத்தியேழில் எழிலாக எழுந்து நிற்கின்றாள். அன்னைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மைந்தன் என்ற வகையில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். 1934ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட எம் கல்லூரி இன்று வரை கல்வியிலும், கலையிலும் சிறந்த கல்விமான்களை பிரசவித்த பெருமையுடன் நிற்கிறது. ஆரம்பம் தொடக்கம் பதின் மூன்று அதிபர்களால் கட்டிக்காத்த பெருமையை உடையது. அவர்களது பணியினை நினைவு கூர்ந்து எமது சஞ்சிகையான சுடரொளியில் அவர்களின் புகைப்படங்களை பிரசுரித்துள்ளோம்.

எமது பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட குறுகிய காலத்தில் நிறைந்த கல்வி விளைதிறன்களைப் பெற்றமையினால் விரைவில் கல்லூரித்தரத்திற்கு உயர்த்தப்பட்டது. 1971ம் ஆண்டு காலப் பகுதியில் ஆயிரத்து ஐந்நூறுக்கு மேற்பட்ட மாணவர்களும், தரம் 1–13 வரையிலான வகுப்புகளும் இருந்தமை நோக்கத்தக்கது இக்கல்லூரி திருநெல்வேலியில் கல்லூரித்தரத்துடனும், தனித்துவத்துடனும் மிளிர்கின்றது. எமது பாடசாலைக்கு 1/2 கிலோமீற்றர் சுற்றாடலில் அமைந்துள்ள ஐந்து ஆரம்ப பாடசாலைகளில் ஆரம்பப் பிரிவு வகுப்புக்கள் நிலைபெறுவதற்கும், அதன் வளர்ச்சிக்குமாய் எமது பாடசாலை ஆரம்பப்பிரிவு மாணவர்கள் பகிர்ந்தளிக்கப் பட்டதோடு, அப்பாடசாலைகளுக்கு தாய்ப்பாடசாலையாகவும் விளங்கியது தற்பொழுது எமது கல்லூாயில் தரம் 6 – 13 வரையிலான கல்விச் செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. 1971ஆம் ஆண்டிற்கான காலப்பகுதியில் கட்டட விவசாய விஸ்தரிப்புக்காக பாடசாலையின் மேற்குப்புறமாக குளத்திற்கருகில் ஒரு ஏக்கர் காணி அரசாங்கத்தால் வழங்கப்பட்டது. மாணவர்களின் இணைபாடவிதான செயற்பாட்டுக்காக தனித்துவமான விளையாட்டு மைதானமும் உண்டு.

தகவல் தொழிநுட்பபாடநெறிக்கற்கைக்கு போதிய வசதிகளுடன் கூடிய அறைகளும் ஆசிரியர்களும் உள்ளனர். எமது பாடசாலை தேசிய தகவல் தொழிநுட்ப விருது (2009) போட்டியில் மாகாணமட்டத்தில் 3ம் இடத்திற்கான விருதைச் சுவீகரித்தது. பாடசாலைக்கு 7½ இலட்சம் ரூபா பெறுமதியான கனினி உபகரணங்களும் வழங்கப்பட உள்ளன. கணினி மென்பொருளாக்கப்போட்டியில் எமது கல்லூரி ஆசிரியர்கள் மாகாண மட்டத்தில் பரிசு பெற்றுள்ளனர். மேலும் ஆங்கில அறிவை மேம்படுத்தும் நோக்குடன் இணைய வழி ஆங்கிலக் கற்கைநெறி மேற் கொள்ளப்படுகிறது. இதற்காக வைத்தியகலாநிதி டான் முத்துவேல் என்பவரால் 42" தொலைக்காட்சி அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

எமது கல்லூாயில் இருந்து கல்விச் செயற்பாடுகள் மூலம் பலமாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கும், கல்வியியற்கல்லூரிக்கும் அனுமதிபெற்றுள்ளனர். எமது கல்லூரி மாணவன் செல்வன் க.வர்ஜிகன் தமிழ்த்தினப் போட்டியில்(2010) தனிஇசை தேசிய நிலையில் முதலாம் இடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளான். மேலும் செல்வன். ச.அருட்குமரன் விளையாட்டுப் போட்டியில் (2011, ஓட்டநிலையில்) தேசிய மட்டம்வரை சென்று பங்கு பற்றி சாதனையாளராக அடையாளம் காணப்பட்டுள்ளார். எமது பாடசாலை மாணவர்களின் ஆக்கங்களை மட்டும் தாங்கி வரும் சுடரொளி தொடர்ந்து சுடர் விட வாழ்த்துகிறேன்.

எனது செயற்பாடுகளுக்கு உறுதுணையாக இருக்கும் உபஅதிபர், பகுதித்தலைவர், அர்ப்பணிப்புடன் செயற்படும் ஆசிரிய குழாம், கல்வி சாரா ஊழியர்கள், பெற்றோர், நலன்விரும்பிகள், விசுவாசமான பழையமாணவர்கள், கல்வித்திணைக்களத்தினர் அனைவருக்கும் எனது நன்றிகள். மேலும் அவர்களது ஒத்துழைப்பையும் எதிர்பார்த்து இக்கல்லூரி தரம் உயர்ந்து விளங்கவும். வளம் பல பெற்று வானுற ஓங்கி வளரவும் இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.



# பாடசாலை அபிவிருத்திச் சபை (SDC)

**சி. லட்சுமிகாந்தன்.**
செயலாளர்.

எமது கல்லூரியின் வளர்ச்சியை நோக்கமாக கொண்டு மேற்படி குழு உருவாக்கப்பட்டது. இக்குழுவிற்கு பெற்றோர்கள் சார்பில் கீழ்வரும் உறுப்பினர்கள் தெரிவு செய்யட்டனர். திருமதி. ஜெ.மேகலாதேவி, திரு. க.குமாசுவாமி, திரு. ம.சச்சிதானந்தம், திருமதி. ஜெ. விஜியந்தினி.

பழைய மாணவர் சங்கத்தின் சார்பில் இக் குழுவிற்கு திரு. செ. குகதாசன். திரு. சி. பேரின்பநாதன், திரு. சி. பத்மராஜா, திரு. சி. லட்சுமிகாந்தன் (ஆசிரியர்கள் சார்பில்), திருமதி. பௌ. பஞ்சலிங்கம் திருமதி. ஜெ. கலாதரன், திருமதி. ரூ. இராஜரட்ணம், திருமதி. பூ. சத்தியன் ஆகியோர் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும் இக்குழுவிற்கு வலயக்கல்வி அலுவலக உத்தியோகத்தர் திருமதிமீரா அருள்நேசன் வலயக்கல்வி பணிப்பாளரினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

மேலும் இக்குழுவானது கல்லூரியின் பௌதிக வளர்ச்சியையும், கல்வி, வளர்ச்சியையும் நோக்காக் கொண்டு எதிர்வரும் காலங்களில் செயற்பட உள்ளது. கல்லூரியின் பரிசுத்தின விழாவும், சுடரொளி சஞ்சிகை வெளியீடும் நடைபெற எங்களின் வாழ்த்துக்கள்.



பழைய மாணவர் சங்க

# வாழ்த்துச் செய்தி

**செ. குகதாசன்.**
செயலாளர்.

எம்மை உருவாக்கிய பாடசாலை அன்னையின் வளர்ச்சி கருதி அதிபரின் தலைமையின் கீழ் வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகிறோம். எமது பாடசாலை பல புகழ் பூத்த கல்விமான்களை உருவாக்கிய பெருமைக்குரியது இன்று அதிபராக விளங்கும் திரு. இ. பாலகுமார் அவர்கள் பழைய மாணவர் எனக் கூறிக்கொள்வதில் பெருமையடைகிறோம். அவரின் அர்ப்பணிப்பான சேவைகளை இன்று கண் கூடாகக் காண்கிறோம்.

அதிபரும் ஆசிரியகுழாமும் இணைந்து பாடசாலையின் கல்வித்தர மேம்பாட்டிற்கு உழைக்க வேண்டும் என்று இத்தருணத்தில் அன்பாக வேண்டி தொடர்ந்தும் சுடரொளி சஞ்சிகை சுடர் விட்டுப் பிரகாசிக்கவும். வாழ்த்துகிறோம்.

நன்றி

# இதழாசிரியர்களின் இதயங்களில் இருந்து.......

எமது கல்லூரிப் பரிசுத்தினத்தில் "சுடரொளி" சுடர்விட்டுப் பிரகாசிக்க இருப்பது எமக்கு மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகிறது. புகழ்பூத்த எம்கல்லூரியில் சீர் செய்த சிந்தனையாளர்களின் சிந்தனைச் சிதறலாம் சுடரொளி இடர் இல்லாமல் சுடர்விட இறைவனை வேண்டுகிறோம். எமது கல்லூரி மாணவர்களின் ஆக்கங்களைத் தாங்கி வரும் இச் சஞ்சிகை மாணவர்களின், அறிவை, ஆற்றலை, ஆளுமையை விளக்கி நிற்பதாக அமைகிறது.

எமது அதிபர் பாடசாலை அபிவிருத்தியில் தன்னை முழுமையாக அர்ப்பணிப்பதோடு பல நீண்டகால செயற்றிட்டங்களை நிறைவேற்றி வருகிறார் சஞ்சிகைக்கான ஆலோசனைகளை அவ்வப்போது தந்துதவிய அதிபர், உபஅதிபர், ஆசிரியர்களுக்கும், ஆக்கங்களைத் தந்துதவிய மாணவச் செல்வங்களுகளுக்கும் புலம்பெயர் நாட்டில் வாழ்ந்து கொண்டிருந்தாலும் தமது வாழ்வை வளம்படுத்திய கல்லூரியை நன்றி மறவாமல் நினைவு கொண்டுள்ளோருக்கும் நன்றிகள்.


இம்மலர் சிறக்க ஆசியுரைகளையும் வாழ்த்துச் செய்திகளையும், வழங்கிய பெருந்தகைகளுக்கும் இச்சஞ்சிகைக்கு வேண்டிய புகைப்படங்களை எடுத்துதவிய புகைப்பட ஸ்தாபனத்துக்கும், சஞ்சிகை மலர்க்குழுவுடன் இணைந்து கணினியில் பொறித்த ஆசிரியர்களுக்கும், சஞ்சிகை அச்சிட்டு உதவிய "குரு" பதிப்பகத்தாருக்கும், விளம்பரம் தந்துதவிய ஸ்தாபனங்களுக்கும், மேலும் இம்மலர் சிறப்புற எம்முடன் தோளோடு தோள் நின்ற அனைத்து நெஞ்சங்களுக்கும் எமது மனம் நிறைந்த நன்றிகள் உரித்தாகுக.

**இதழாசிரியர்கள்,**
**திருமதி க. முத்துக்கிருஷ்ணன்,**
**திருமதி உ. ஜெயராஜா**

## கடந்த காலங்களில் சேவையாற்றிய அதிபர்கள்



Mr. N.Kanapathippillai
(B.A, B.Sc. & Dip. in Edu)
1944 - 1967



Mr. K. Muthukumarasamippillai B.A.
1934 - 1943



Mr. S.P.Nadarajah
(B.A., Dip. in Edu)
1968 - 1970



Mr. P.Elanganayagam
(B.A, Dip. in Edu)
1971 - 1972



Mr. K.Nagarajah
(B.A, Dip. in Edu)
1973



Mr. E. Ponnampalam
(B.A.) 1974



Mr. V. Mahadeva
(B.A., Dip. in Edu)
1976 - 1977



Mr. S.Sivaprahasam
(S.L.E.A.S) 1978



Mr. P.Swaminathasarma
(B.A, Dip. in Edu)
1979 - 1985



Mr. M.Shanmugalingam
(B.A., Dip. in Edu)
1986



Mr. V. Ariyanayakam
(B.A., Dip. in Edu)
1987



Mr. M.Parameswaran
(B.A., S.L.P.S-1)
1988 - 1995



Mr. A. Rajakobal
(B.A.) 1995 - 1999



Mrs. S. Visuvalingam
(B.A. & Dip. in Edu)
1999 - 2007

உப அதிபர்



திருமதி ரூ. இராஜரட்ணம் (S.L.T.S. 1)

பகுதித் தலைவர்



திருமதி ஜெ. கலாதரன் (S.L.T.S. 1)

# மலரின் இதழ்களாக...


| | | |
|---|---|---|
| 1. | விநாயகர்துதி | III |
| 2. | ஆசிச்செய்தி | IV |
| 3. | தமிழ்மொழி வாழ்த்து | V |
| 4. | முன்னைய அதிபர்கள் | VI |
| 5. | வாழ்த்துச்செய்திகள் | VII-XV |
| 6. | இதழாசிரியர்களின் இதயங்களிலிருந்து | XVI |
| 7. | முழு நிலவாய் ஒளிரும் தமிழ், A DREAM | 01 |
| 8. | SCIENCE AND TECHNOLOGY | 02 |
| 9. | வாழ்க்கைக்கு இத்தனை அதிசயங்கள் | 03 |
| 10. | EDUCATION, எங்கும் சமத்துவம் மலர வேண்டும் | 04 |
| 11. | THE INTERNET | 05 |
| 12. | சூழல் மாசடைதல், | 06 |
| 13. | To my dear friend | 08 |
| 14. | நீரிழிவு நோய் | 09 |
| 15. | We are Sri Lankans | 10 |
| 16. | பாடசாலையும் இசையும | 11 |
| 17. | மனிதனும் வாசிப்புமு | 12 |
| 18. | Selvasannathy Murugan Temple | 13 |
| 19. | Reading Make the full man | 14 |
| 20. | வேப்பமரத்து தேன் | 15 |
| 21. | அறிவொளி தருவன நூல்களே | 21 |
| 22. | வளிமண்டலத்தில் ஓசோன் சிதைவும் தாக்கங்களும் | 23 |
| 23. | சங்ககால இலக்கியப் பண்புகள | 26 |
| 24. | மானிடத்தை மீளப் பெறுவதற்கான வழிவகைகள் | 29 |
| 25. | எமது பண்பாட்டில் விஞ்ஞான தொழிநுட்பம் ஏற்படுத்தியதாக்கம | 30 |
| 26. | தமிழ்மொழியும் பழமொழிகளும் | 32 |
| 27. | My Birthday Party | 34 |
| 28. | அரசின் தோற்றம் பற்றிய கோட்பாடுகள் | 35 |
| 29. | பொறுமையைப் பேணுவோம் | 38 |
| 30. | உலகை அச்சுறுத்தும் அணுகுண்டுகளும் அணு ஆயுதங்களும | 39 |
| 31. | MY PET, WORRIES | 40 |
| 32. | ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சி | 41 |
| 33. | பாவேந்தர் பாரதிதாசன் | 44 |
| 34. | மக்கள் அரசியல் செயற்பாடுகளிலே ஈடுபடும் வழிமுறைகள் | 46 |
| 35. | முயற்சியாண்மை | 49 |
| 36. | பெண்ணின் பெருமை | 53 |

# முழு நிலவாய் ஒளிரும் தமிழ்

அமுதனைய எங்கள் தமிழ்
இனிய தமிழ் இன்பத் தமிழ்
சங்கம் வளர்த்த தமிழ்
தரணியெல்லாம் போற்றும் தமிழ்

குறளாலே உலகாண்ட தமிழ்
வள்ளுவர் சொன்ன தமிழ்
அறவழியாய் அரசியலாய்
தத்துவமாய்த் தளிர்த்த தமிழ்

கல்வியிலே கலைத்துவமாய்
கனிவுடனே மிளிரும் தமிழ்
முத்தமிழாய் முதிர்ந்த தமிழ்
முழு நிலவாய் ஒளிரும் தமிழ்

தமிழாலே கலை வளர்ப்போம் - இன்ப
கலையாலே தமிழ் வளர்ப்போம்
சங்கத் தமிழ் கவியாலே - எங்கள்
தமிழ் மக்களைத் துதி செய்வோம்.

**சி. டமிலன்,**
10A

# 'A' DREAM

It was a Sunday I came home late in the evening after net ball practices. I had my dinner at about 8'oclock after watching a Tele drama. I went to sleep soon I was in fast sleep I heard someone knocking at the door. Someone said 'we are your father's friends. We want to meet him urgently'.

Then I opened the door. Two tall men entered into the house. They were armed. They threatened me not to shout or wake up others. I obeyed them meekly through far. They asked me for the keys of the cupboard. I said they were with my mother. They asked me not to wake up mother. The two of them went into my mother's room. I too followed them into the room. They asked me to show the place where The keys were kept they got the key and began opening the cupboard. They put my mother's jeweler, saris and cash into two bags. Before leaving they warned me severely not to inform the police, But as they were about to leave, I shouted from the top of my voice, robbers, robbers. The robbers hurriedly left the place My father and mother had heard my shouting. They had come running to my room. They waked me up. They asked me why 'I was shouting'. I said to mother 'two robbers came and robbed your sarees, jewellery and cash. My parents began to laugh. Then only I realized that I had a dream. I too had a healthy laugh. It was 1 o'clock in the night. We all went to sleep again.

**N. Abinaya,**
Gr. - 9

# SCIENCE AND TECHNOLOGY

Science and technology has helped people to gain control over nature. The first people had little control over nature. Science promotes logical thinking. Men had to depend on nature for their living. They had only simple tools. They didn't know how to raise animals or plants. They had no permanent houses. Animals' skins were their only protection against the cold. The sun was their only source of light. With the passage of time, people discovered how to make fire and learnt to raise animals and settlements. Then they discovered new methods to make their work easier, and increase their comforts. Through the ages technology has helped people to build a more comfortable way of life.

Industrial technology began with the invention of the steam engine. The work in factories became faster, the production increased. The working hours were reduced. The radio and the television changed their entertainment habits. Technology helps people to live in greater comfort and security than in the past. Agriculture, medicine and transport technologies have brought many benefits to man.

Today machines do most of the work. Powered machines have increased production and given people more leisure. The needs or the people began to increase. The result is the creation of a world of modern science and technology.

Many modern technical machines are used in transport. Transportation is raised by this modern world. People of the modern world use many machines to travel place to place.

Modern technology develops many sources. Medicine is developed by science & technology.

The practise of medicine is based on diagnosis and treatment. A hundred years ago, the physician felt pulse and came to various conclusions about illnesses.

He had only a few instruments to diagnose a disease. Within the last hundred years, the physician has sophisticated medical instruments to diagnose diseases.

X-ray machine that was invented in 1895 came into regular use. It was invented by Willhelm Rontgen with the help of this machine the doctors were able to see the inside of the body and diagnose diseases. In 1973 the CAT scan machine was invented.

With this invention medical science was revolutionized. The patient is kept inside the machine and the body is scanned by X-rays.

Medical Technology continues to develop very rapidly. Today the changes of the body can be observed and measured. These findings are the key to diagnosing diseases and deciding treatment.

Old people lived there with out modern technology. They didn't have electric light. They didn't do their daily activities in night with electrical machines. They treated the patients with country treatment. Example Junany & Ahulvedic. They didn't use electrical machines. They didn't use airplanes and other technical vehicles for transport. They can do their transport very quickly. They can do their daily activities with electric machines. We can use many modern medical machines for treatments. We can communicate with others using modern machines such as Telephone, fax machine and internet.

Technology helps people to live in greater comfort.

**V. Inkaran,**
Gr 10

# வாழ்க்கைக்கு இத்தனை அதிசயங்கள்

வாழ்க்கை ஓர் அன்பு அனுபவிப்போம்.
வாழ்க்கை ஓர் அழகு அதிசயிப்போம்.
வாழ்க்கை ஓர் ஆன்மா உணர்ந்திடுவோம்
வாழ்க்கை ஓர் இலக்கு எட்டிடுவோம்
வாழ்க்கை ஓர் இரகசியம் வெளிப்படுத்துவோம்
வாழ்க்கை ஓர் உறுதி மொழி நிறைவேற்றுவோம்
வாழ்க்கை ஓர் விளையாட்டு விளையாடுவோம்
வாழ்க்கை ஓர் வாய்ப்பு பயன்படுத்துவோம்.
வாழ்க்கை ஓர் வெகுமதி ஏற்போம்
வாழ்க்கை ஓர் சவால் சந்திப்போம்
வாழ்க்கை ஓர் சாகசம் துணிந்து நிற்போம்
வாழ்க்கை ஓர் துன்பம் வென்று நிற்போம்
வாழ்க்கை ஓர் கடமை செய்து முடிப்போம்
வாழ்க்கை ஓர் பாடல் இசைப்போம்
வாழ்க்கை ஓர் பயணம் நிறைவு செய்வோம்
வாழ்க்கை ஓர் புதிர் விடுவிப்போம்
வாழ்க்கை ஓர் போராட்டம் போராடுவோம்

**மு. தட்சாயினி**
தரம் 8 B

# EDUCATION

Education is the path to our life. Without education we can't progress in our life. In Sri Lanka it is compulsory that every child must have her education from the age of six. Education widens our knowledge. It helps to have access to a high status in society. We must all bear in mind that there is no age limit to study.

In this world only human beings have been created with six senses. With these senses man dominates the world. For all this he must have the basic knowledge. In the process of education, he gets this knowledge. In Sri Lanka the education standards are very high. With the acquired knowledge through Education a lot of people migrate to other countries to get good jobs. This shows how education is important. So we must be benefited from it.

From the ancient days to the present times well educated people have a high status in society. A child must get his education step by step from the primary school to university. Now a days there are many offers to continue our higher Education. By obtaining good results in the ordinary level and advanced level, Students can get scholarships to other countries. Through this we can get a sound education.

Today some students are not interested in entering the university but are interested in other courses which offer good prospects for their future. A well educated person always possesses good behaviour patterns, good manners, self discipline and a sense of decency.

**S. Vigitharan**
Gr. 11

## எங்கும் சமத்துவம் மலர வேண்டும்

உழவும் தொழிலும்
உயரவேண்டும்
உழைப்போர் வாழ்வு
மலர வேண்டும்.

கலையில் மணமும்
கமழவேண்டும்
கருத்தின் முகைகள்
நெகிழவேண்டும்.

அன்பும் அறமும்
வளர வேண்டும்
அகிலம் அனைத்தும்
மகிழ வேண்டும்.

எங்கள் பணியும்
மலர வேண்டும்
எங்கும் சமத்துவம்
வளர வேண்டும்.

**அபினயா**
தரம் 9B

# THE INTERNET

The internet is a computer-based worldwide information network. It is composed of a large number of smaller inter connected networks. These networks link thousands of computers enabling them to share various resources, such as powerful super computers and data bases of information. The internet has made it possible for people all over the world to communicate effectively and inexpensively with each other. Unlike traditional broadcasting media, such as radio and television the internet is a decentralized system. Each connected individual can communicate with anyone else in the internet, can publish ideas and can sell products with a minimum over head cost. The internet has brought new opportunity for businesses to offer goods and services online. In the future, it may have an equal dramatic impact on higher education as more universities offer internet-based courses.

The networks from which the internet is composed are usually public access networks means that the resources of the network can be shared with anyone logging on to or accessing the network.

The internet is an extension of a computer network originally framed in the United States during in the 1960s by the Advanced Research projects Agency (ARPA). This original network the very first computer was called ARPANET. Scientist built ARPANET with the intention of creating a network that would still be able to function efficiently if part of the network was damaged.

As ARPANET grew in the 1970s.With more and more universities and institution connecting to it, user found it necessary to establish standards for the way that data was transmitted over the network to meet the needs of data transmission standards. Computer scientists developed the transmission control protocol and the internet protocol. During the 1970s various government scientific and academic groups developed their own networks. During the early 1990s increasingly large numbers of users who were not part of the scientific or academic communities began to use the internet. Now the internet has become part and parcel of our life.

**R. Sobana,**
Gr 13 Arts.

# சூழல் மாசடைதல்

இன்றைய உலகமானது இன்ரநெற் யுகமாகக் காணப்படுகிறது. இவ் உலகமானது தொழிநுட்பவியலில் மிகவும் முன்னேற்றம் அடைந்து காணப்படுகிறது. உலகம் பாரிய பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றது. அதில் முக்கியமான பிரச்சினையாக சூழல்மாச டைதலே காணப்படுகிறது. மனிதனது எல்லாத் தேவைகளுக்கும் சூழலே இருப்பிடம் ஆகும். எனவே எமது வாழ்க்கையை உருவாக்கி நம்மை வாழவைக்கும் சூழலைப் பற்றி நம்மில் பலர் சிந்திப்பது இல்லை. சூழலானது நிலம், நீர், வளி, ஒலி ஆகிய வழிகளால் மாசடை கின்றது. மற்றும் தொழில்நுட்ப முறையின் மூலம் சூழலானது மாசடைகிறது.

நிலமானது விரிந்து பரந்து காணப் படுவதாகும் அந்நிலத்திலேயே மக்களாகிய நாம் வாழ்கின்றோம். அந்நிலமானது இயற்கை யில் எவ்வாறு இருக்கிறதோ அவ்வாறு இருந் தால் தான் அது நிலையானதாக இருக்கும் இயற்கைக்கு மாற்றமான ஏதாவது ஒரு செயற்பாட்டினை மேற்கொண்டால் அந் நிலமானது பாரிய ஆபத்துக்கு உள்ளாகிவிடும்.

நிலமானது எவ்வாறு மாசடைகின்றது என்பதை பார்த்தோமானால் விவசாயிகளின் சொத்தாக கணிக்கப் படுவது நிலமாகும். விவசாயிகள் நிலத்தில் விவசாயம் செய்து வாழ்க்கையை நடத்துகின்றனர். அவர்கள் நிலத்தில் பயிரிடும் போது களைகள், கிருமிகள் என்பவைகள் இருப்பதால் அதனை அகற்றுவதற்காக கிருமிநாசினிகள், களை நாசினிகள், களை கொல்லிகள் என்பவற்றை விவசாயம் மேற்கொள்ளும் நிலத்தில் வீசுகின்றார்கள். இதன்மூலம் கிருமிகள் அழிந்துபோகும். ஆனால் நிலம் இதில் அதிகம் பாதிப்படைகின்றது. நச்சுப்பொருட்களை விவசாய செடிகளுக்கு இடும் போது அது நிலத்திலே விழும். இதனால் அந்தநச்சுப் பொருளானது நிலத்தின் அமைப்பை குலைத்து விடுகின்றது. இவ்வாறு நச்சுப் பொருட்களை தூவுவதன் மூலம் நிலமானது பயனற்றுப் போய்விடும். நிலத்தில் உள்ள சிறிய நுண்ணுயிர் கூட அழிந்துவிடுகின்றது. இதனால் நிலத்தின் பலம் குறைந்து விடுகின்றது. நிலமானது அணுக்கதிர் வீச்சுக்களாலும் பாதிப் படைகின்றது. இது எவ்வாறென்றால் 2ம் உலக மகா யுத்தத்தின் போது ஹிரோசிமா மீது வீசப்பட்டட அனு குண்டில் வளங்கள் அழிந்துவிட்டன. அந்த வளங்கள் அழிந்து விடுவதனால் நிலத்தின் பலம் குறைந்து நிலம் பயனற்று போகிறது. மற்றும் 1986 சோனோமிடல் அணு உலைக் கசிவினால் மக்கள் பெரிதும் பாதிக்கப் பட்டதோடு தாவரங்களும் அழிவிற்கு உள்ளா கியது. குண்டு வீச்சின் போது நச்சுத் தன்மையுடைய பொருட்கள் நிலத்தை சென்ற டைவதால் சூழல் மாசடைகின்றது. சூழல் மாசடைவதால் இயற்கையான நிலை சமநிலையற்றுப் போகின்றது. இதனால் இயற்கை அனர்த்தம் கூட ஏற்பட வாய்ப்பு உண்டு.

நிலத்தில் உக்கிப் போகின்ற பொருட் களும் உள்ளன. அதே சமயம் உக்கிப் போகாத பொருட்களும் உள்ளன. உக்கிப் போகாத பொருட்களாக பொலித்தீன் காணப்படு கின்றது. இப் பொலித்தீன் மண்ணில் உக்கிப் போகாமல் இருப்பதனால் சூழல் மாசடை கின்றது. தற்போது பொலித்தீன் பாவனை அதிகரித்து வருகின்றது பொலித்தீனில் உணவுப் பொருட்களை வைத்து வீசுவதனால் அதனை மாடு போன்ற உயிரினங்கள் சாப்பிடுகின்றன இதனால் அதன் உயிருக்கு ஆபத்து ஏற்பட வாய்ப்பு உள்ளது. பொலித்தீன் பாவனைக்கு பின் எறிந்தாலும் புதைத்தாலும் உக்காது. மீள் சுழற்சிக்கு உட்படுத்தவும் முடியாது. பொலித்தீனை எரிக்கும் போது

உருவாகும் வளி மூலமும் சூழல் மாசடைகின்றது.

வைத்தியசாலையின் கழிவுகளை வெளியேற்றாமல் வைப்பதாலும் குப்பை கூழங்களை அகற்றாது ஒரே இடத்தில் தேக்கிவைப்பதாலும் சூழல் மாசடைகின்றது சிரட்டை தகரப்பேணிகள் வீதிகளில் எறிவதால் அதில் நீர் நிரம்பி நுளம்பு உருவாகின்றது. இந்த நுளம்பு மூலம் மலேரியா டெங்கு போன்ற நோய்கள் ஏற்படும். இதனால் மனிதன் இறக்கவும் வாய்ப்பு உண்டு.

இயற்கை வளங்களில் காடும் ஒன்றாகும் இக்காடு தொழிற் சாலைகள், வீடுகள் கட்டுவதற்காக அழிக்கப் படுகின்றது. இதனை அழிப்பதன் மூலம் காடுகள் அழிந்து செல்கின்றன. மனிதன் மரங்களின் மூலம் நிறைய நன்மை அடைகின்றான். தளபாடம் செய்வதற்கும் உணவு, மருந்து, ஆடைகள் போன்ற தேவை களுக்காகவும் இம் மரமானது பயன்படுத்தப் படுகிறது. இதனை அழிப்பதன் மூலம் மனிதனது தேவைகள் பூர்த்தியாகாமல் போகலாம். அத்தோடு சூழலும் மாசடைகின்றது. காடழிப்பு என்பது முரணான ஒரு செயற்பாடாகும்.

அடுத்ததாக நீரின் மூலம் சூழல் எவ்வாறு மாசடைகின்றது என்பதை பார்ப்போம். இரசாயன செயற்பாட்டின் போது அதிலுள்ள அமிலங்கள் நீரில் கலக்கின்றன. அதனால் நீரானது மாசடைகின்றது மேலும் தொழிற் சாலைகளில் இருந்து வெளியேறும் கழிவுப் பொருட்கள் நீர் நிலைகளை பெரிதும் பாதிப்பு அடையச் செய்கின்றது. இதனால் மாசுற்ற குடிநீர் மூலம் மக்கள் பல்வேறு தொற்று நோயால் அல்லல் படுகின்றனர். தைபோயிட், வாந்திபேதி, மஞ்சட் காமாலை, இளம்பிள்ளை வாதம் போன்ற நோய்கள் பரவுகின்றன. இதனால் மனித மரணங்களுக்கு வழிசமைத்து வருகின்றது.

சனத்தொகைப் பெருக்கத்தால் மக்களுடைய பாவனையும் அதிகரித்து விட்டது இதனால் மக்கள் தங்கள் வீட்டிலுள்ள கழிவுப் பொருட்களை கால்வாய் வழியே செலுத்துகின்றனர் இதனால் அவ்விடம் அசுத்தமாகவே காணப்படும் துணிகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் கழிவுப் பொருட்களான சாயங்களை அதிகளவில் வெளியேற்றும் அதனையும் நீர் நிலைகளில் விடுகின்றனர். மற்றும் சூடான நீரை நீர்நிலைகளில் பாய்ச்சுவதானால் நீரானது மாசுபடுகிறது. இவ்வாறு நீர் மாசுபடுவதானால் நீரிலுள்ள உயிரினங்களான மீன், நீர்த்தாவரம், என்பன அழிந்து போகின்றன. இது பெரிதும் நஷ்டமாவே அமைகின்றன.

சூழலானது வளியினால் எவ்வாறு மாசுபடுகிறது என்பதைப் பார்த்தோமானால் வளி மாசடைவதனால் சூழல்பாதிக்கப்பட்டு மனித வாழ்வுக்கு இடர் ஏற்படுகிறது. தொழிற் பெருக்கம், போக்குவரத்து என்பன வளி மாசுறக்காரணமாகின்றது. தொழிற் சாலைகளிலிருந்து புகை வெளியேறு கின்றது. இப் புகையானது. காற்றோடு காற்றாக கலப்பதனால் வளி மாசடைகிறது. அணு ஆயுத உற்பத்தியின் போதும் வளி மாசடைகிறது. இவ்வாறாக மாசடைந்த வளியை நாம் சுவாசிப்பதால் சுவாசப்பை நோய், தொண்டை நோய், புற்றுநோய், இதய நோய், கண்பார்வை பாதிப்பு என்பன ஏற்படுகின்றன.

இறுதியாக ஒலியின் மூலம் சூழல் எவ்வாறு மாசடைகின்றது என்பதனைப் பார்ப்போம். தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறுகின்ற ஒலியானது கூடிய அதிர்வு அடையச் செய்கின்றது அது மட்டுமல்லாது வாகனங்களில் இருந்து வரும் ஒலியும் மிகவும் இரைச்சலுடன் வெளியாகின்றது. திடீரென்று ஒலிக்கு அதிர்வு அடைபவரின் இதயமானது ஒரு கணம் நின்றே இயங்கும். இதன் மூலம் அவருக்கு இதய வலி ஏற்படக்

கூடும். மீ ஒலி விமானங்கள் எழுப்பும் மிகை ஒலி, மின்னனுக்களாலும் சூழல் மாசடைந்து சமநிலை பாதிப்படைகின்றது.

சூழலானது பல வழிகளில் மாசடை கிறது இதைத் தடுத்தாற்றான் நாடு வளம் பெறும். "சுத்தம் சுகம் தரும்" "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பன முது மொழிகளாகும். எனவே சூழலை சுத்தமாக வைத்திருப்பதற்கு சில வழிவகைகளாக புகை எழுப்பாத ஆலைகளையும், ஊர்திகளையும் உணடாக்குவது இயலாத செயல் ஆலை யில் இருந்தும், சாலைகளிலிருந்தும். எழும்பும் புகைகளையும், தூசிகளையும் மரங்களின் இலைகள் தடுக்கின்றன. காற்றில் அவை நேராகக் கலக்காதவாறு செய்கின்றன. மேலும் அவை வெளியேற்றும் நீராவியும் காற்று மண்டலத்தைத் தூய்மை செய்கின்றன. ஆகவே காட்டை வளர்ப்போம். கண்ணும் கருத்துமாக சூழலைப் பேணுவோம்.

இலங்கையில் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை சூழல் மாசடைவதால் ஏற்படும் தீய விளைவுகளை தடுக்கச் சட்டங்களை அமுல்ப்படுத்தியுள்ளது. நாட்டின் பல பாகங் களிலும் பரவலாக தொழிற்சாலைகளை அமைப்பதனால் மக்கள் ஓரிடத்தில் செறிவதை ஐதாக்கி சூழல் மாசடைவதைப் தவிர்க்க முடியும்.

ரஷ்யாவின் எவுக்யோனில் அணு உலையில் ஏற்பட்ட அனர்த்தத்தாலும், இந்தியாவில் போபால் தொழிற்சாலையில் கக்கிய நச்சு வாயுவின் விளைவினாலும் பல்லாயிரக்கணக்கான மக்கள் பலியானர்கள். சூழலைப் பேணுவதற்கு சரியான நடை முறைகளை பேணாத தொழிற்சாலைகளை அரசாங்கம் மூட வேண்டும். தெருவில் ஓடும் பாவனைக்குதவாத வாகனங்களின் அனுமதிப் பத்திரத்தை ரத்துச் செய்ய வேண்டும் இவ்வா றான நடவடிக்கை மூலம். சூழலை மாசுபடாமல் பாதுகாக்கலாம்.

நாம் இயற்கை அழித்தால் இயற்கை நம்மை அழிக்கும்.

**தே. சுவேத்தா,**
2013 கலைப்பிரிவு

## To My Dear Friend

May God provide you lots
Of such joys and
Glorious moments
May you live long and
live happy. May worries
thoughts, angers and
bad lucks remain
away from you.

I wish you good luck.
A nice and lovely life to
come. Bright and
joyful future and all
the goods that you
can ever wish or think of.
I wish, may your dreams come alive
and all sad thoughts off.

luck is yours,
wish is mine.
may your life
always shine.....

**B. Shangeetharan,**
Gr. 13, Arts

## பாடசாலை அதிபர், அசிரியர்கள்




**இருப்பவர்கள்(இடமிருந்து வலம்):-** திரு.P.பாலமுகுந்தன், திரு.வி.ஜெயராஜ், திரு.ம.கிருபாகரன், திரு.சி.சசீலன், திரு.இ.செல்வமகேசன், திரு.செ.ரவிச்சந்திரன், திரு.இ.பாலகுமார்(அதிபர்), திருமதி.ரு.இராஜரட்ணம், திருமதி.ஜெ.கலாதரன், திருமதி.தே.பேரின்பராசா, திருமதி.க.முத்துக்கிருஷ்ணன், செல்வி.க.முருகசுந்தரி, திருமதி.தி.இராஜேஸ்வரன்.

**நிற்பவர்கள் முன்வரிசை(இடமிருந்து வலம்):-** திரு.ம.பிரதீபன், திருமதி.வ.சத்தியபாலன், திருமதி.செ.இரட்ணசிங்கம், செல்வி.க.வாசுகி, திருமதி.ம.சதீஸ்குமார், செல்வி.து.அருந்ததி, திருமதி.தே.கிரிதரன், திருமதி.பூ.சத்தியன், திருமதி.க.சயந்தன், திருமதி.கௌ.செந்தில்குமரன், திருமதி.உ.ஜெயராஜா, திருமதி.வா.சுதாகரன், செல்வி.ஆ.ஜெயசீலி, திருமதி.பௌ.பஞ்சலிங்கம், திருமதி.பு.கணேசலிங்கம், திருமதி.த.சிவகுமாரசர்மா, திருமதி.ஸ்ரீ.தனசீலன், திரு.ந.செந்தூரன்,

**நிற்பவர்கள் பின்வரிசை(இடமிருந்து வலம்):-** திருமதி.ச.இரவீந்திரன், செல்வி.ப.ஷியாமளா, திருமதி.மு.மதிவதனி, திருமதி.சி.ஞானதீபன், செல்வி.இ.சுன்ஜா, செல்வி.உ.மிதுஜா, திருமதி.த.சொருபன், திருமதி.அ.நிசாகரன்

# நீரிழிவு நோய்

நீரிழிவு நோய் ஒரு அனுசேபக் கோளாறாகும். அதாவது உடலில் அக உயிர் இரசாயன தொழிற்பாட்டுடன் தொடர்பான சிக்கலாகும் சதையியில் காணப்படுகின்ற இலங்ககான் தீவுகளிலுள் காணப்படும் பீடா கலங்கள் மூலம் உற்பத்தி செய்யப்படும் இன்சுலின் எனும் ஓமோன் குருதி குளுக்கோஸ் மட்டத்தை கட்டுப்படுத்தும் இன்சுலின் குறைபாடு அல்லது இன்சுலின் தொழிற்பாட்டின் குறைபாடு காரணமாக ஏற்படும் நிலை நீரிழிவாகும்.

நீரிழிவு (பல்வேறு முறைகளில் வகைப் படுத்தப்பட்டுள்ளது) முதன் நிலை, துணை நிலை என இருவகைபப்டும்.

நீரிழிவு ஏற்படுவதில் பின்வரும் காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன.

**பரம்பரை:** பரம்பரை அலகு நீரிழிவு ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்தும் என இனங் காணப்பட்டுள்ளது.

**பால் வேறுபாடு:** கட்டிளம் பருவத்தில் பெண் பிள்ளைகளை விட ஆண்பிள்ளைகளில் நீரிழிவு நோய் ஏற்படுத்துவதற்கான வாய்ப்பு அதிகமாகும்.

**அதிக உடற்பருமன்:** நீரிழிவு நோய்க்கும் உடற் பருமனுக்கும் இடையே நேர்கணியத் தொடர்பு காணப்படுகிறது. நீரிழிவு நோயாளிகளில் பெரும்பாலானோர் அதிக உடற் பருமனால் பாதிக்கப்பட்டுள்ளனர். துணை நிலை நீரிழிவு பரவலாக காணப்பட வில்லை. சதையியிற்கு பாதிப்பை ஏற்படுத்தும் சதையி அழற்சி சதையிப் புற்றுநோய் சத்திர சிகிச்சை மூலம் சதையி அகற்றுதல் போன்ற நிலைமைகளுக்கு ஆளாவதால் இன்சுலின் சுரப்பி பாதிப்பு ஏற்படுவதால் இந் நிலைமை ஏற்படலாம்.

**நீரிழிவு நிலையின் சிக்கல்கள்**

1. நீரிழிவுக் கட்டுப்படுத்தாதிருந்தால் மூளை கண்கள் இதயம் சிறுநீரகங்கள், தோல், கால்கள் போன்றவற்றிற்கும் பாதிப்பு ஏற்படலாம்
2. தீவிர நீரிழிவின் போது அமிலத் தன்மை காரணமாக மூர்ச்சைத்தன்மை ஏற்பட்டு கிடோ அசிடோஸிஸ் எனும் மயக்க நிலை ஏற்படலாம்
3. ஈரலில் காணப்படும் கொழுப்பமிலங்கள் உடைக்கப்படும்
4. இக்கடோன் உடல்கள் குருதியுடன் கலப்பதால் குருதியில் அமில நிலை ஏற்படும் இந் நிலை நீரிழிவுக் கோமா எனப்படும்

இவ்வாறு நீரிழிவு நிலையின் சிக்கல்களை அறியலாம் நோயாளியின் உணவில் பின்வருமாறு கலோரி அடங்கலாம்.

| | |
|---|---|
| காலை உணவு | 100 கி. கலோரி அளவு |
| பகல் 10 மணி | 100 கி. கலோரி அளவு |
| பகல் உணவு | 100 கி. கலோரி அளவு |
| மாலைத் தேநீர்த் தேவை | 100 கி. கலோரி |
| இரவு உணவு | 500 கி. கலோரி அளவு |
| | 500 கி. கலோரி அளவு |

**குறிப்பு:** கி. கலோரி = கிலோ கலோரி

நீரிழிவு நோயாளி ஒருவரின் முழுக் கலோரி அளவின் 60% அளவில் சிக்கலான மாப்பொருள் மூலமும் 15% புரதமும் 25% அளவில் கொழுப்பு மூலமும் பெறப்படுதல் சிறந்தது.

நீரிழிவின் போது அனேகமாக கால்களும் பாதிப்புக்களுக்கு உட்படும் கால்களின் நுனிகளில் இப்புண்கள் ஏற்படுவது அதிகமாகும் சுற்றயல் நரம்புகளின் தொழிற்பாடுகள் பலவீனமடைந்து இருப்பதால் கால் நுனிகளின் நரம்புகள் செயலிழக்கும். இதனால் உணர்

திறன் குறையும் சிறு தொற்றொன்று ஏற்பட்டாலும் விளங்காது. இப்புண்கள் மேலும் வளர்ச்சி அடையும். சில வேளைகளில் பாதங்களின் நுனிப்பகுதி வெட்டி அகற்றப் படும்.

**நோய் கண்டறிதல்**

இதற்காக சிறுநீர்ச் சோதனையும் குருதிச் சோதனையும் பயன்படுத்தப்படுகின் றது.

1. எவ்வேளையிலும் விரல்களிலும் குருதி எடுத்து சோதிக்கும் முறை (Randam Blood Sugar) (சுகதேகி)

2. பட்டினியுடன் இருந்து பெறப்பட்ட குருதி மாதிரிகள் சோதனை (Fasting Blood Sugar)

3. வாய்மூல குளுக்கோஸ் சகிப்பு சோதனை (Oral glucose tolerance test)

4. **சிறுநீர் பரிசோதனை**
   சிறு நீர் மாதிரிக்கு குளுக்கோசுக்காக மேற்கொள்ளப்படுத்தும். சோதனையில் விளைவு காட்டப்பட்டால் அது நீரிழிவு உறுதிப்படுத்தும். என்பதன் மூலம் அறிந்து கொள்ளலாம்.

**நீரிழிவு நோயாளி ஒருவர் எடுத்துக் கொள்ளக் கூடிய உணவுகள் சில**

தெரிவு செய்ய வேண்டிய உணவுகள் ஆடைநீக்கிய பால், அவரையுணவுகள், மரக் கறிகள், பழங்கள், தவிடுள்ள தானியங்கள், முட்டைவெண்கரு, சிறு மீன்கள் கொழுப்பற்ற மீன்கள் போன்றன.

**தவிர்க்க வேண்டிய உணவுகள்**

சீனி, இனிப்புச்சுவையுள்ள சிற்றுண்டிகள் கொழுப்புள்ள இறைச்சி, மீன் வகை, பொரித்த உணவுகள், பாற்கட்டி யோக்கற் போன்ற பால் உற்பத்திப் பொருட்கள்.

மேற்கூறிய முறையில் உணவுகளை எடுத்துக் கொண்டால் நீரிழிவு நோயின் தாக்கத்திலிருந்து ஓரளவு விடுபடலாம்.

**செ. ஷர்மினி,**
2013, கலை.

# WE ARE SRI LANKAN

Sri Lanka is our country. It is a beautiful island in the Indian Ocean. it is also called "The pearl of the Indian ocean. Colombo is its business center. Sri Lanka has a population of more than eighteen million people. Our country is a multi racial country. There are four main races living here. They are Sinhalese, Tamils, Muslims and Burghers. The majority is Sinhalese. The Sri Lankan Tamil and the Indian Tamils make up the largest minority. Then there are Muslims and Burghers too. Whether Sinhalese, Tamil, Muslims or Burghers we are all Sri Lankan. We should respect each other's languages and religion. We should learn to live with understanding, compromise and goodwill. We must protect our country and we should love our country very much.

**T. Nitharsana**
Gr. 8B

# பாடசாலையும் இசையும்

ஏழிசையாய் இசைப்பயனாய் இறைவனை ஏற்றித்துதிக்கும் மரபு எமது தங்கத் தமிழர் தம் மரபாகும். இறைவனை இசைவடிவமாய் கண்டுகளிக்கும் மரபு நமது மரபாகும். எமது மானிட வாழ்வின் ஆரம்பம் முதல் இறுதி வரை இசை இரண்டறக்கலந்து வந்து கொண்டே இருக்கிறது. இவ்வாறு எம்மோடு கலந்து விட்ட இசை பாடசாலை களில் கலைத்திட்டங்களில் ஒரு பாரிய இடத்தைப் பிடித்துள்ளது. இதன் செல்வாக்குப் பற்றி நாம் இங்கு சிந்திப்போம்.

பாடசாலை என்பது ஆறுவயதில் உள்ளே நுழைகின்ற மாணவர்களை பூரண ஆளுமை கொண்ட ஒரு முழு மனிதனாக்கும் கலைக்கூடமாகும். மாணவர்களது ஆளுமை வளர்ச்சியில் இசையினதும் இசை ஆசிரியர தும் பங்களிப்பு என்ன? என்பதை நாம் கண்டறிய முயல்வோம்.

இசை என்பது மனிதனின் ஐம்புலன் களையும் வசமாக்கி அவற்றின் இறுக்கல் களைத் தளர்த்தி மென்மையாக்கி மனிதனைச் சாந்த சொரூபியாக்கும் தன்மை வாய்ந்த அற்புதமான சக்தியாகும். இசையைப் பாடுபவனும் இசையை இரசிப்பவனும் புதிய மனிதர்களாக புடம் போடப்படுகிறார்கள். இசை ஒருவனிடத்தில் அமைதியையும் நல்ல பண்புகளையும், நிறைவான அழகையும் நீடித்த ஆயுளையும் உருவாக்குகின்றது. இத்தகைய ஆனந்தமயமான கலையைப் பாடசாலைகளில் ஒரு பாடநெறியாக்கி பயிற்றுவிப்பது மானிட சமுதாயத்தின் மறுமலர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாத ஒன்றாகும்.

ஒரு பாடசாலையின் காலைப் பிரார்த்தனையிலேயே தமிழோடு இசைப் பாடல் ஒலிக்கின்றது வீடு திரும்பும் வேளையி லும் பாடசாலைக்கீதமோ தமிழ் மொழி வாழ்த்தோ இசைக்கப்படுகின்றது. இசையின் ஒவ்வோர் துளியும் எமக்குள்ளே செல்லும் போது நாம் எம்மை இசைவாக்கி கொள்கின் றோம். அறிந்தோ அறியாமலோ நாம் இசையின் வசமாகிக் கொண்டிருக் கின்றோம். இசையை அறியாத மனிதன் கூட இசையைக் கேட்ட மாத்திரத்தில் இசையுடன் ஒன்றிப் போய்விடுகின்றான். இசை கேட்டால் புவி அசைந்தாடும் என்றும் கூறுவார்.

இசையின் உற்பத்திஸ்தானம் என்று நாம் கூறுகின்ற நாட்டார் பாடல்கள் எந்த ஒரு பாமரனையும் இசைஞானியாக்கி விடவல்லது. எளிய சொற்களால் உள்ளத்தைத் தொடும் மொட்டுக்களாய் ஆடிப்பாடி வேலை செய்யத் தூண்டுகின்றன. நாட்டார் பாடல்கள் பாடசாலைக் கலைத்திட்டத்தில் சேர்க்கப் பட்டுள்ளது.

மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரையும் இசை அவனுடன் பின்னிப் பிணைந்துள்ளமையை எம்மால் அனுபவத்தில் உணர் முடிகிறது அதாவது பிஞ்சுக் குழந்தை யின் தாலாட்டு முதல் முதியோரின் ஒப்பாரிப்பாடல்கள் வரை இசையுடன் பாடப் படுவதை அறிய முடிகிறது மனிதனை பூரண ஆளுமை உடையவன் ஆக்கும் இசையை கற்றுப் பயனடைவோமாக.

**ச. ஜெலக்சி,**
2011, கலை.

# மனிதனும் வாசிப்பும்

"அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது" என்று ஔவையார் வியந்து பாராட்டினார். ஆனால் அவர் மனிதராய் பிறத்தலை மட்டும் கருதவில்லை. அதாவது ஒரு பூரண மனிதனாக இருப்பதையே வியந்து கூறினார் வாசிப்பு ஒரு மனிதனைப் பூரணமாக்கும் சமமாகப் பிறந்த மனிதனி டையில் ஏற்றத்தாழ்வு ஏற்படுவதன் பிரதான காரணமாகவும் பாரிய இடை வெளியா கவும் இருப்பது கல்வியே. சாதாரண பாடசாலைப் படிப்பினால் ஒரு மனிதன் பூரணமாவதில்லை. "கண்டதைக் கற்க பண்டிதன் ஆவான்" என்பதற் கிணங்க படிப்பதனாலே அவன் நிறைவு பெறுகி றான்.

வாசிப்பதனால் கிணற்றுத் தவளையாக இருந்த நிலைமாறி வெளியுலகத் தொடர்பு ஏற்படுத்தப்படுகிறது. எம்மில் சில சுயநலத் தன்மைகள் வாசிப்பதால் அற்றுப்போய்விடும். மனிதன் என்பவன் ஏதோ ஒரு வகையில் குறைபாடு உள்ளவனாகக் காணப்படுகிறான். எனவே அவன் வெளித்தொடர்பை தன்னுடன் இணைக்கும் போது மெல்ல மெல்ல அவன் இருளில் இருந்து ஒளிக்கு கொண்டு வரப்படு கிறான். வாசிக்கக் கூடிய நூல்களில் பலரகங்கள் காணப்படுகின்றன. அவற்றை நாம் தராதரத்திற் கேற்ப வாசித்தோமே ஆனால் எம் தரங்கள் மேன்மையடையும். தரக் குறைவானவையை நாம் நோக்கினால் எமது தரங்கள் மேலும் வீழ்ச்சி யடையும்.

"கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு" என்பதை அடிக்கடி நினைவுபடுத்திப் கொள்ள வேண்டும் சுகாதார, விவேக பொதுக் கல்வியின் கலைகள் சம்பந்தமான அரியதும் பெருமைக்குரியதுமான நூல்கள் ஏராளமாகக் காணப்படுகின்றன.

எமது நாட்டில் குழந்தைகள் இறப்பதற்கு பிரதான காரணமாக அறியாமையே விளங்கு கின்றது. இவ் அறியாமை என்பது யாது பெரும பான்மையான எம் அன்னையர்களின் வாசிப்புக் குறைவுகளே ஆகும். எப்படி நாம் வாழவேண்டும் என்பதனை பல நூல்கள் தெளிவு படுத்துகின்றன. இதை அறியாமல் ஒதுக்கி விட்டால் நாம் தவறான தவறான முறையில் வாழ்ந்து இருளில் மறைய வேண்டி ஏற்படும். பல ஆன்மீக நூல்களை ஆழ்ந்து வாசிப்பதனால் கூடாத இயல்புகள் தூக்கி எறியப்பட்டு வாழ்வு தூய்மையாகின்றது. மனிதன் புதுப்புது கண்டுபிடிப்புக்களைக் கண்டுபிடித்து வானிலும், தரையிலும் ஆராய்ச்சிகளை மேற் கொள்வதற்கு நம் முன்னோரின் அரிய குறிப்புக் கள் பலவற்றை அவர்கள் வாசித்துத் தெளிவு கண்டதுதான் முதன்மையான காரணமாக இருக்கிறது.

நமது நாட்டிற்கு எங்களால் முடிந்த சேவையாற்றுவதற்கு நாம் முதலில் ஆரோக்கிய மான மனிதனாக வாழவேண்டும். நம்மில் பலருக்கு ஆரோக்கிய வாழ்வின் அடித்தளங்கள் புரிவதில்லை. புரியாதவற்றை வாசிப்பதனால் விடயங்களைப் புரிந்து கொண்டு நோயற்ற வாழ்வை இவ் வையகத்தில் வாழ்வதற்கு உதவும். நம்மில் அனேகர் வறுமை காரணமாக பாடசாலைப் பருவத்தில் பாடசாலை வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைக்கின்றனர். பலவந்தமாகவே வாழ்க்கைக்கு கொண்டு செல்லப்படுகின்றனர். பள்ளி செல்லாமல் பல நூல்கள் வாசிக்கும் போது அவை கடினமான வாழ்க்கைப் பாதையிலும் இலகுவாக வாழ உதவுகின்றது. இதனால் உற்சாகமாக வாழ்வு செல்கின்றது. வீட்டில் இருந்து கொண்டே கலையார்வம் மிக்க பெண்கள் கலை நூல்கள் வாசிப்பதனால் பலவித கலைகளில் தேர்ச்சியடையலாம். வாசிப்பதால் ஏற்படும் பயன்கள் பல என்பதை சகலரும் ஏற்றுக் கொண்டமையால் பட்டி தொட்டி எல்லாம் நூல் நிலையங்களகளை திறக்கும் கொள்கையை அரசு கடைப்பிடித்து வருகின்றது. அனைவரும் வாசிப் பதால் அஞ்ஞான இருள் அழிந்து விடுகின்றது. அறியாமை எனும் தளை அறுத்தெறியப் படுகிறது. இதனால் சர்வாதிகாரப் போக்குகள் பயனற்று போகிறது. ஜனநாயக நோக்குகள் தலைதூக்கு கின்றன. வாசிக்கும் போக்குகள் பரவலாக்கப்படு வதனால் நாடு எதைச் செய்கின்றது என மக்களும் அவதானிக்க முடிகின்றது. வாசிப்பதால் வெளித் தொடர்புகள் அதிகமாகி பயன் பெறக்கூடியதாய் இருக்கின்றது. எனவே நல்ல நூல்களை வாசித்து நற்பயன் பெறுவோம்.

**பு. உமேஸ்வரன்,**
தரம் 11

# Selvasannathy Murugan Temple

Selvasannathy murugan temple is in Thondaimanaru, a small village in vadamaradchi. Selvasannathy Murugan temple is situated in a beautiful environment. On the north of the temple is the Indian ocean south and the west of the temple are washed by the Thondaimanaru lagoon western part of the lagoon is used by the devotees to bathe on the east are cultivatable lands giving a rich greenery look. Al around the temple are large shady trees giving comfort devotees who come to the temple Selvasannathy has a long history. We had read in many books. We also find certain crafting on the "Ther" (cart) telling us part of the history. In this temple the priests do not chant manthiras as it is done in other temples. The priest ties their mouth with a white cloth and performs the poojas. This is done in accordance with the request by lord Murugan in a dream to layman Kathirkamar long ago.

The annual festival this year began on the 31st of August with the water cutting ceremony falls on the 15th of this month which brings the festival to an end for the year.

The festive season is always grand. Devotees come in thousands from all over the country. Even migrated devotes from all over the world usually make it a point to come during this festival season. Poongavanam festival falls on the 10th day, unlike in other temple which falls on the last day of the festival. Sapparam, Ther, Theertham, and Mouna Thiruvillah takes place in the evening of the Theertha Thiruvillah. Following this, the next day a special festival is held. This is meant for the volunteers who devoted themselves in serving the temple during the festival season. These volunteers are knows as "Pookarar". During the festival season these volunteers stay in the temple premises. The sea, the lajoon and the vegetation around the temple would have been of greater natural beauty.

Hundreds of kavadis come to this temple all sorts of kavadis come dancing chanting holy songs with tears rolling down to the chest spotlighting their sincere request from the bottom of their hearts requesting Selvasannathy Murugan for peace.

**G. Selviya,**
Gr 9.

# Reading Make the full man

Man is loving pleasure. He seeks pleasure in everything. There are many sources of pleasure. But the pleasure got from reading is the best. Great is the blessing of books. Happy is the man who has acquired the habit of reading. He has secured a life long source of pleasure, instruction and inspiration. It is unique in the sense. Whenever is bored and depressed, we can always pick up book and enjoy readings.

The concept of reading is flow of thoughts. Reading is a form of collecting information. But if you give voice to a book reading becomes the most able way of listening.

Good books are store houses of human knowledge and wisdom. The man who never opens a book has a comparatively empty mind. Wise men all over the world have praised the value of reading.

Some books are simply read for pleasure and amusement. For example good novels, comics, story books and magazines. It helps to us know the best of our culture, history and civilization which inspire noble thoughts and develop our characters. Books contain a wealth of knowledge and information on every subject on earth. Reading is an excellent mental exercise. Reading awakens our horizons of out looks-selection of book has vital importance. Books are the most faithful of friends, our friends may change, but our books are always patiently and faithfully waiting to talk to us. There is no aspect of life which is not covered by books and our preferences should be for healthy, moral, ennobling and entertaining reading.

Books are written by learned persons. They contain the best experiences and thoughts of their writers. Literature is said to mirror society. Writers put in their books not only their own ideas and feelings, but also what they observe and find in society. The books of the past reflect the condition of the times in which they were written.

When we are alone, books are our best friends. They entertain us in our spare moments. If we are in depressed mood books console and soothe our troubled minds. They provide us with the best advice and guidance in our difficulties. Books give us sound moral advice. The reading of good books develops and evaluates our character.

It was the English author Bacon who said that reading maketh a full man. No one can question the truth of this saying.

So, to be a Good citizen of the world, one must read a lot, one must learn from companions and one must write. Then one can become a full, ready and exact man.

**S. Sharusha,**
Gr. 10.

# வேப்பமரத்து தேன்

(இது ஓர் உண்மைக் கதை அல்ல.)

அவுஸ்திரேலியாவின் பிரதான நகரங்களில் ஒன்றான சிட்னியிலுள்ள பிரபல வங்கியொன்றின் தலைமைக் காரியாலயத்திலுள்ள வீட்டுக்கடன் பகுதித் தலைவர் துரைசிங்கம், தமது அலுவலக சாப்பாட்டு அறை மேசையில் தனது மதிய உணவுப் பெட்டியை வைத்துவிட்டு, ஏற்கனவே அங்கே தனியே சாப்பிட்டுக்கொண்டிருந்த அழகிய இளம் பெண் மாதுமைக்கு எதிராக உட்கார்ந்து சாப்பிட ஆரம்பித்தவர், சிறிது நேரத்தின் பின்னர் அவளிடம் பேசத் தொடங்குகிறார். அன்று திங்கட்கிழமை ஆதலினால் வழமை போல அவளது சாப்பாட்டு வாசம் இவரது மூக்கைத் துளைக்க அதை ரசித்தபடியே "மாதுமை, நீங்கள் போன வெள்ளிக்கிழமை என்னிடம் ஏதோ மிக முக்கியமான கேள்வி கேட்கப்போவதாகச் சொன்னீர்களே. அப்படி என்ன என்னிடம் கேட்கப் போகிறீர்கள்?" என்று பகுதித் தலைவர் துரைசிங்கம் மாதுமையிடம் ஆங்கிலத்தில் கேட்டார்.

குஜராத்தில் இரண்டு மூன்று சந்ததியாக வாழ்ந்த தமிழ்நாட்டுப் பெண்ணாகிய அந்த அழகிய இளம் பெண் மாதுமை, அந்த வங்கித் தலைமைக் காரியாலயத்தில் சுமார் ஒன்றரை வருடத்திற்கு முன்னர்தான் புதிதாக வேலைக்குச் சேர்ந்தாள். சில நாட்களில் அவள் சேலை உடுத்தும், அனேகமான நாட்களில் ஆங்கிலேயர் உடை அணிந்தும் வேலைக்கு வருவாள். வெள்ளிக்கிழமைகளில் காலை உணவு உண்ணமாட்டாள். கேட்டால் தான் கடவுளை நினைந்து ஒரு நேர உணவைத் தவிர்க்கிறேன் என்பாள். அவளும் இந்து சமயத்தையே பின்பற்றுபவள் என்று பகுதித் தலைவர் துரைசிங்கம் அறிந்திருந்தார்.

கடன் பகுதித் தலைவர் துரைசிங்கம் அமெரிக்க நாட்டின் வாஷிங்டனில் உள்ள உலக வங்கியில் ஓர் மிக உயர் பதவிக்கு விண்ணப்பித்து, சிட்னியிலேயே நடாத்தப்பட்ட ஒரு எழுத்து சோதனை, இரண்டு தொலைபேசியூடான நேர்முகப் பரீட்சைகள், அமெரிக்காவில் நடாத்தப்பட்ட ஒரு நேர்முகப் பரீட்சைக்கும் தோற்றி, பல சிரமங்களுக்கு மத்தியில் அவ்வுயர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டிருந்தார். அவர் அப் பதவிக்கு தெரிவு செய்யப்பட்ட பின்னர், ஒரு வருடம் கழித்து அந்த உயர் பதவியை பொறுப்பேற்கலாம் என்று இவர் கொடுத்த மனுவிற்கு உடனடியாக வந்து பதவியை ஏற்கவேண்டும் என்றும், ஒரு மாதகால அவகாசம் தருகிறோம். அதற்குள் வராவிட்டால் தாங்கள் வேறு ஒருவரை தேர்ந்து எடுக்கப்போவதாகவும் பதில் போட்டிருந்தார்கள். அவர்களுடைய அந்த காலக்கெடு முடிய இன்னும் மூன்று கிழமைகள்தான் இருந்தன.

சென்ற மாதம் தனது 55வது பிறந்த நாளை வெகு விமரிசையாக தனது சகோதரி வீட்டில் கொண்டாடிய தலைவர் துரைசிங்கம், அங்கு வந்த பல பெண்களை சேலையில் கண்டதும், அவருக்கு மாதுமையின் நினைவு வந்தது. தனது பிரிவில் புதிதாக வேலைக்கு சேர்ந்த அந்த குஜராத்திப் பெண் மாதுமையை சேலையில் பார்க்கும்போது 30 வயதிருக்கும் எனவும் அவளை ஆங்கிலேயர் உடையில் பார்க்கும்போது 25 இற்குள் இருக்கும் எனவும் எண்ணுவதுண்டு. பெண்களிடம் வயதைக் கேட்பது நாகரிகம் அல்ல என்பதனால் அவரால் அவளின் வயதை அறிய முடியவில்லை. இங்கிலாந்தில் குடும்பத்துடன் வாழும் தனது இரண்டாவது மருமகளின் வயதிற்கு கிட்ட இருக்கும் எனவும் நினைத்துக் கொண்டார்.

தனது மனைவி புற்று நோயால் அவுஸ்திரேலியாவில் காலமாகிய பின்பு கடந்த ஐந்து வருடங்களாக சிட்னியிலேயே

உள்ள தனது சகோதரி குடும்பத்தாருடன்தான் துரைசிங்கம் வாழ்ந்து வருகிறார். இங்கிலாந்தில் குடும்பத்தாருடன் நிரந்தரமாகக் குடியேறி விட்ட அவரது இரண்டு மகன்மார்களும் அவருடன் அடிக்கடி தொலைபேசியில் கதைத்து சுகம் விசாரிப்பார்கள். நான்கு வருடங்களிற்கு முன்னர் ஒருமுறை இங்கிலாந்திலிருந்து அவர்கள் தங்கள் குடும்பத்தாருடன் அவுஸ்திரேலியா வந்து ஒரு மாதம் தங்கிவிட்டுப் போனார்கள். அதன் பின்பு இதுவரை வரவில்லை. ஆனாலும் அடிக்கடி தொலைபேசியில் கதைத்துக் கொள்வார்கள்.

எப்பொழுதாவது துரைசிங்கமும் அந்த அழகிய குஜராத்திப் பெண் மாதுமையும் கந்தோர் சாப்பாட்டு அறையிலே தனியே சாப்பிடும்போது மட்டும், மாதுமை அவரிடம் மனம்விட்டுப் பேசுவாள். (இவர்கள் எப்பொழுதும் ஆங்கிலத்திலேயேதான் கதைப்பார்கள். ஆனாலும் முழுக் கதையையும் நான் உங்களுக்கு தமிழிலேயே தருகிறேன்.) சில வேளைகளில் இருவரும் தமது உணவுகளை தமக்கிடையே பகிர்ந்துகொள்வார்கள். அனேகமான நாட்களில் மாதுமைதான் அவருக்கு தன் சாப்பாட்டில் ஒரு பகுதியைக் கொடுப்பதுண்டு. அவளது சாப்பாட்டில் இருக்கும் கடுகு எண்ணை மணமும் ஏனைய சரக்கு மணமும் இவருக்கு நன்கு பிடிக்கும்.

மாதுமை அவ் வங்கித் தலைமைக் காரியாலயத்தில் புதிதாக வேலைக்கு சேர்ந்து ஏறத்தாழ ஒரு வருடத்தின் பின்னர் ஒருநாள், இருவரும் கந்தோரில் தனியே உணவருந்திக் கொண்டிருக்கையில் பொது விடயங்களைப் பற்றி கதைத்துக் கொண்டிருந்தார்கள். மாதுமை திடீரென "என்னைப்பற்றி என்ன நினைக்கிறீங்கள் துரைசிங்கம்?" என்று கேட்டதும் துரைசிங்கம் திக்குமுக்காடிப் போனார். இந்த குஜராத்திப் பெண் என்ன கருத்தில் இப்படியான ஒரு கேள்வியை கேட்டிருப்பாள் என்று யோசித்துக்கொண்டு, "நீர் நல்ல குணமானவர். இந்து சமயத்தை மிக்க ஆசாரமாக கடைப்பிடிப்பவர். மிக அக்கறையுடன் சுறுசுறுப்பாக கெட்டித்தனமாக வேலை செய்பவர் நீரும் என்னை மாதிரியே வங்கித் துறையில் Ph.D. எல்லாம் முடித்திருக்கிறீர். நீர் மிகவும் அன்பானவர். வளவள என்றில்லாமல் அளவோடு கதைப்பவர். மேலும் சொல்வதென்றால் நீர் ஒரு அழகான பெண். உம்முடைய அகன்ற கறுத்தக் கண்களும், நீண்ட கூந்தலும் உமக்கு ரொம்ப அழகு." என்று சொல்லி லேசாக புன்முறுவல் செய்தார்.

அதன் பின்பு இப்படித்தான் ஒரு நாள் நான் மதிய உணவருந்த செல்வதைக் கவனித்துவிட்டு, மாதுமை தானும் உணவருந்த உடனே சாப்பாட்டு அறைக்கு வந்தாள். வந்தவள் சிறிது நேரம் பொதுவாக கதைத்துவிட்டு, என்னைப் பற்றியும் என் குடும்பத்தைப் பற்றியும் படபடவென அன்புடனும் அக்கறையுடனும் விசாரிக்கத் தொடங்கினாள். இளம் பெண் மாதுமை ஒவ்வொரு வினாவாகக் கேட்கக் கேட்க, மகுடிக்கு அடங்கிய நாகம் போல நான் எனது மனைவி 5 ஆண்டுகளுக்கு முன் புற்று நோயால் காலமாகியது, என் இரு மகன்களும் திருமணம் செய்து குடும்பத்துடன் இங்கிலாந்தில் வசதியாக வாழ்வது, நான் என் சொந்த பெரிய வீட்டை வாடகைக்கு கொடுத்துவிட்டு தற்போது எனது சகோதரி குடும்பத்துடன் வாழ்ந்துவருவது, இரண்டாம் முறை உறவினர்கள் திருமணம் பேசி வந்தபோது மனைவியை இழந்த துக்கத்தில் இருந்த நான் அதற்கு மறுத்தது, இறுதியாக என் 50வது பிறந்தநாள் பரிசாக என் மனைவி எனக்கு அன்பளித்த சுமார் ஏழு அங்குல உயரமான மிக அழகிய இரு நீண்ட கொம்புகளுடன் கூடிய அற்புதமாக மினுக்கப்பட்ட பளபளப்பான காளை மாட்டு வெள்ளிச் சிலையை இன்னும் அவளின் ஞாபகமாகவே என் கந்தோர் மேசையிலேயே வைத்திருப்பது, என் அறைக்கு வரும்போது நீரும் அதைக் கண்டிருப்பீர் என நினைக்கி

றேன் என்றுஎல்லாவிடயங்களையும் சாப்பிட்டுக்கொண்டேஅவளிடம் கூறினேன். ஆனால் அவள்என்னைப்பற்றியும் என் குடும்பத்தைப் பற்றியும்விசாரித்த உடனேயே நானும் அவளைப்பற்றியும் அவள் குடும்பத்தைப்பற்றியும் விசாரிப்பது அவ்வளவு நாகரிகம் இல்லை என நினைத்ததாலும், எமது சாப்பாட்டு நேரம் முடிந்து விட்டபடியாலும் நான் அவளைப் பற்றியும் அவள் குடும்பத்தைப் பற்றியும் ஏதும் விசாரிக்க முடியவில்லை. பின்பு ஆறுதலாக எல்லாவற்றையும் விசாரிக்கலாம் என்று மனத்திற்குள் நினைத்துக்கொண்டு என் வேலை அறைக்குத் திரும்பினேன்.

இன்றைய நாட்களில் வெளிநாடுகளில் கந்தோரில் வேலை செய்யும் பெண்கள் தாலிக்கொடியை அணியாமலும், திருமதி, செல்வி என்பதற்குரிய Mrs.,Miss. என்ற ஆங்கிலப் பதங்களை பாவியாமல் பொது வான ஆங்கிலப்பதமாகிய Ms. என்று பாவிப்பதனாலும், கந்தோரில் வேலை செய்யும் ஒரு பெண் திருமணமானவரா இல்லையா என்று அறிவது சற்றுக் கடினம். இவ்வாறே மாதுமையைப்பற்றியும் என்னால் ஒன்றும் அறிய முடியாமல் இருந்தது.

சென்ற மாதம் ஒரு நாள் நானும் அந்த குஜராத்திப் பெண் மாதுமையும் கந்தோரில் தனியே உணவருந்திக்கொண்டிருந்தபோது, இன்று Mothers' Day உங்களுக்கு உங்கள் பிள்ளைகள் என்ன பரிசு தந்தார்கள் என்று நான் மாதுமையிடம் கேட்டேன். அதற்கு அவள் மிக அழகாக சிரித்துவிட்டு "எனக்கு இன்னும் கலியாணமே ஆகவில்லையே பிள்ளைகள் பரிசு தருவதற்கு" என்று கூறிவிட்டு, என் பதிலுக்காக என்னையே கூர்ந்து பார்த்தாள். எனக்கு அவளது அன்பான அப் பார்வை மிகவும் இதமாக இருந்தது.

அன்று இரவு எனக்கு நித்திரை வர மறுத்தது. மாதுமை இன்னும் திருமணம் செய்யவில்லை என்ற செய்திதான் என்னைக் குழப்பத்தில் ஆழ்த்தியது. அந்த அழகிய குஜராத்திப் பெண்ணை, இல்லை அந்த தமிழ் நாட்டுப் பெண்ணை நான் முதலில் பார்த்த போது திருமணம் ஆனவள் என்றல்லவா நினைத்தேன். அவள் இன்னும் திருமணம் செய்யவில்லையாமே! அப்படியென்றால் அவருக்கு ஆகக்கூடியது 25 வயதுதான் இருக்கும். ஏன் அவருக்கு 30 வயது என்றுதான் வைத்துக்கொள்வோமே. தூங்கியது எனக்குத் தெரியாது. அலாம் மணி காலையில் அடித்த போது எழுந்து குளித்துவிட்டு குசினிக்குள் வந்தபோது எனது தங்கச்சி குசினியினுள் பொங்கிக்கொண்டிருப்பதைப் பார்த்தவுடன் தான் அன்று தைப்பொங்கல் என்ற ஞாபகம் வந்தது. அன்று வெள்ளிக்கிழமை என்றபடி யால் நான் வேலைக்கு சென்றேன் மாதுமை நிச்சயம் பொங்கல் கொண்டுவருவார் என்ற எதிர்பார்ப்புடன்.

மதியம் ஏனைய உத்தியோகத்தர்கள் உணவருந்துமட்டும் காத்திருந்துவிட்டு, வழமைபோல நாங்கள் இருவரும் மதிய உணவு உண்பதற்கு சாப்பாட்டு அறைக்கு சென்றோம். நான் எதிர்பார்த்தபடியே மாதுமை தான் கொண்டு வந்த பொங்கலின் ஒரு பகுதியை எனக்கு தந்தார். சிறிது நேரம் பொதுவாக கதைத்துக் கொண்டிருந்துவிட்டு, "இரண்டாம் திருமணத்தைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" என்று மாதுமை என்னிடம் கேட்டாள். எனக்கு உங்கள் கேள்வி சரிவரப் புரியவில்லையென்று நான் அவரிடம் கூறினேன். அதற்கு அவள் "மனைவியை இழந்த ஒரு ஆண் தனக்கு பொருத்தமான ஒரு பெண்ணை இரண்டாம் முறையாக மணப் பதைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" என்று தெளிவாகக் கேட்டாள். "தன் சோடியை பறிகொடுத்த ஒருவர் இரண்டாம் முறை திருமணம் செய்துகொள்வதை எதிர்ப்பவ னல்ல நான்" என்று கூறினேன். அதற்கு அவள் உடனே நன்றி என்று ஆங்கிலத்தில் இனிமை

யாக கூறினாள். அப்பொழுது அவளின் முகத்தில் இருந்த மகிழ்ச்சியையும், சந்தோஷத்தையும் என்னால் அவதானிக்க முடிந்தது. "இன்று வெள்ளிக்கிழமை. வருகிற திங்கட்கிழமை நான் உங்களிடம் ஒரு மிக முக்கியமான கேள்வி கேட்பேன். நீங்கள் உடனே எனக்கு பதில் கூறவேண்டும். உங்கள் பதிலில்தான் எல்லாமே தங்கியுள்ளது" என்று கூறிவிட்டு வெளியே செல்ல எழுந்தவளை வழிமறித்து "என் பதிலில் என்னவெல்லாம் தங்கியுள்ளது?" என்று மாதுமையிடம் கேட்டேன். அதற்கு அவள் "உங்கள் பதிலில்தான் என் வாழ்க்கையும் தங்கியுள்ளது." என்று கூறிவிட்டு நழுவி அவ் அறையைவிட்டு வெளியே சென்றுவிட்டாள். (வாசகர்களே! கவனமாக இறுதிவரை இக் கதையை தொடர்ந்து ஒருமுறை வாசித்துத்தான் பாருங்களேன்.)

சனியும் ஞாயிறும் எனக்கு இரண்டு மாதங்களாக மிக மெதுவாகச் சென்று திங்கட்கிழமை பிறந்து, இப்பொழுது நாம் இருவரும் எமது அலுவலகத்தில் மதிய உணவு அருந்திக்கொண்டிருக்கிறோம். எனக்கு மாதுமையிடம் என்ன பேசுவதென்றே தெரியவில்லை. மாதுமையும் என்னிடம் ஒன்றும் பேசாமல் மிக மெதுவாக உணவு அருந்திக்கொண்டிருந்தார். சிறிது நேரம் பொறுத்திருந்துவிட்டு நானே அவளிடம் பேச்சைத் தொடங்கினேன். "மாதுமை, நீங்கள் போன வெள்ளிக்கிழமை என்னிடம் ஏதோ மிக முக்கியமான கேள்வி கேட்கப்போவதாகச் சொன்னீர்களே. அப்படி என்னிடம் என்ன கேட்கப்போறீங்கள்?" என்று நான் அவளிடம் மெதுவாகக் கேட்டேன்.

நான் சொல்வதை கவனமாகக் கேளுங்கள் என்று மாதுமை அன்பான மெல்லிய குரலில் மெதுவாகப் பேசத்தொடங்கினாள். "குஜராத்தில் என் அப்பா டாக்டராக எட்டு வருடம் வேலை செய்துவிட்டு, 12 வருடத்திற்கு முன்னர் குடும்பத்துடன் அவுஸ்திரேலியாவிற்கு நாங்கள் குடிபெயர்ந்தோம். இரண்டு வருடங்களிற்கு முன்னர் விக்டோரியா மாநிலத்தில் இந்தியர்களை அவுஸ்திரேலியர்கள் தாக்கிவருவதை எதிர்த்து ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் என் அப்பா தலைமை தாங்கிச் சென்றதனால், எதிராளிகள் அவரை கவனித்து வைத்திருந்து மறுநாள் அவர் வேலை முடிந்து வைத்தியசாலையைவிட்டு இரவு வீட்டிற்கு வரும்போது யாரோ இனம் தெரியாதவர்கள் அவரது காரை இடைவழியில் மறித்து அவரை சுட்டுக்கொன்றுவிட்டார்கள். அம்மாவும் அதே ஆஸ்பத்திரியில் தான் டாக்டராக வேலை செய்கிறார். ஆனால் அன்று அம்மாவிற்கு லீவு நாளாக இருந்தபடியால் அம்மா அன்று வேலைக்கு சென்றிருக்கவில்லை." என்று கூறியவள் தொடர்ந்தாள்.

"எனக்கு இப்பொழுது 27 வயதாகியும் இன்னும் திருமணம் நடைபெறவில்லை. எத்தனையோ நல்ல வரன்கள் எல்லாம் பேசி வந்தன. ஆனாலும் எனக்கு அப்பா இல்லை என்ற ஒரே காரணத்தினால் அத் திருமணங்கள் எல்லாம் சரிவராமல் தவறிப் போய்விட்டன. இனி என் வாழ்க்கையே உங்கள் கைகளில்தான் தங்கியுள்ளது" என்று அவள் கூறியபொழுது, எமது சாப்பாட்டு அறைக்கதவு தட்டப்படும் சத்தம் கேட்க, "Yes, come in." என்று நான் கூற, உள்ளே வந்த எமது உதவி முகாமையாளர் Mr. துரைசிங்கம், உங்களிற்கு வாஷிங்டனிலுள்ள உலக வங்கி அலுவலகத்தில் இருந்து அவசர தொலைபேசி அழைப்பு வந்துள்ளது. நீங்கள் வந்து கதைக்கிறீங்களா? என்று கேட்க, நான் தவிர்க்க முடியாமல் எழுந்து சென்று தொலைபேசியை கையில் எடுத்தபோது, Mr. துரைசிங்கம் நீங்கள் உங்கள் புதிய பதவிக்கு வருகிறீர்களா இல்லையா என்று எங்களுக்கு இன்னும் 3 நாட்களுள் உங்கள் முடிவைக்கூற வேண்டும். அப்பதவியை ஏற்பதாயினும் இன்னும் இரண்டு கிழமைக்குள் வந்து புதுப் பதவியை

ஏற்றுக்கொள்ள வேண்டும். தவறினால் நாங்கள் வேறு ஒருவரை அப் புதிய பதவிக்கு நியமித்துவிடுவோம். இதை உங்களுக்கு அறிவிக்கவே போன் செய்தேன். உங்கள் இடைஞ்சலுக்கு வருந்துகிறோம் என்று உலக வங்கி நிர்வாகப் பொறுப்பாளர் கூறினார். நான் அவருக்கு 3 நாட்களுக்குள் எனது முடிவைத் தெரிவிக்கிறேன் என்று கூறி அவருக்கு நன்றியும் தெரிவித்து போனை வைத்துவிட்டு சாப்பாட்டு அறைக்கு திரும்பி சென்றபோது, மாதுமை சாப்பிட்டு முடிந்து வெளியே செல்ல ஆயத்தமாகிக் கொண்டிருந் தார். நான் அவரிடம் "மாதுமை உங்கள் பேச்சு இடையில் தடைப்பட்டதற்கு மன்னிக்கவும். நீங்கள் கூற வந்ததை கூறுங்கள்." என்று சொன்னேன். அவள் தொடர்ந்தாள். "ஒரு வருடத்திற்கு மேலாக உங்கள் குணநலன் களை அவதானித்து வருகிறேன். உங்கள் உயர்ந்த குணம், இனிய பண்பு, அழகிய உயர்ந்த தோற்றம், உயர் கல்வித்தகைமை, சமயப்பற்று, பிறர்க்கு உதவும் மனப்பாங்கு, உங்கள் நேர்மையான குணம் எல்லாமே என்னைக் கவர்ந்துள்ளன. நீங்கள் நிச்சயம் பொருத்தமானவர்தான் என்று முடிவுசெய்து விட்டேன். இதற்காக பல மாதங்களாக நான் பட்ட கஸ்டங்கள் இருக்கே அது உங்களுக்குப் புரியாது. எப்படியோ ஒருவாறு என் அம்மாவிடமும் சம்மதம் பெற்றுவிட்டேன்." என்று கூறிய மாதுமை சிறிது நேரத் தயக்கத்தின் பின் "என் அழகிய அம்மாவிற்கு 49 வயதுதான் ஆகிறது. தயவு செய்து நீங்கள் என் அம்மாவை மறு மணம் செய்துகொள் கிறீர்களா?" என்று கேட்டுவிட்டு உடனே மிக விரைவாக வெளியேறி தன் இருப்பிடத்திற்குச் சென்றுவிட்டாள்.

அன்று அதன் பின்னர் மாலை காரியால யம் பூட்டும்வரை நான் மாதுமையுடன் கதைக்கவேயில்லை. அன்று வேலை முடிவ தற்கு சில நிமிடங்கள் இருக்கையில் நான் சிறுநீர் கழிக்கச் சென்றுவிட்டு எனது அறையை நோக்கி சற்று தூரத்தே வரும்போது, மாதுமை எனது அறையைவிட்டு வெளியேறிச் சொல் வதை நான் அவதானித்தேன். ஆனால் அவள் என்னைக் கவனிக்கவில்லை. அவள் என் பதிலுக்காக என்னைத் தேடித்தான் வந்திருப் பாள் என நான் எனக்குள்ளேயே நினைத்துக் கொண்டேன்.

மதிய உணவு உண்டவேளை, மாதுமை என்னை அந்தக் கேள்வி கேட்ட நேரத்தி லிருந்து வங்கிக் காரியாலயம் பூட்டும்வரை எனக்கு இருந்த மன நிலையை வார்த்தை களினால் என்னால் வர்ணிக்க முடியாது. ஒருவேளை நான் கவிஞனாயின் ஒருவேளை முடிந்திருக்குமோ தெரியாது என எண்ணு கிறேன்.

அன்று இரவு நித்திரை வராமல் கட்டிலில் படுத்திருக்கிறேன். என் மன எண்ண அலைகள் காற்றில் மிதந்து நர்த்தனமாடி கரையில் தரைதட்டி மோதுகின்றன. எனக்கு 55 வயது முடிந்துவிட்டது. தலைமை வங்கியின் கடன் பகுதித் தலைமைப் பொறுப் பாளர். மாதுமையின் தாயோ 49 வயது நிரம்பிய ஒரு டாக்டர். இரு குடும்பங்களும் ஒரே இந்து சமயம்தான். இறுதியாக இலங்கை முள்ளிவாய்க்கால் பகுதியில் நடைபெற்ற உக்கிர சண்டையிலே மழையெனப் பொழிந்த தடைசெய்யப்பட்ட அதிசக்திவாய்ந்த அரசின் குண்டுகளிற்குப் பலியாகிய முப்பதினாயி ரத்திற்கு மேற்பட்ட மக்களில் ஒருவராகிய எனது சகோதரனின் இரு பிள்ளைகளில் மூத்தவள் டாக்டருக்கும் இளையவன் கம்பியூட்டர் எஞ்சினியருக்கும் இந்தியாவி லுள்ள ஒரு தனியார்பல்கலைக்கழகத்திலே படிக்கிறார்கள்.நான்தான் அவர்களுக் கானஎல்லாச்செலவுகளையும் பார்த்துக் கொண்டிருக்கிறேன். நானோ என் தங்கச்சி வீட்டில் தங்கியுள்ளேன். தங்கச்சியின் 3 பிள்ளைகளில் மூத்த இருவரும் திருமண வயதை ஓரளவு எட்டிவிட்டார்கள். எனது இரு ஆண் பிள்ளைகளின் குடும்பங்கள் இங்கிலாந்தில் உள்ளார்கள். இங்கு நான் ஒரு

தொண்டு நிறுவனத்தை ஆரம்பித்து அதனூடாக இலங்கைத் தமிழ் மக்களின் பல சமூக சேவைகளுக்கு உதவி வருகிறேன். உலக வங்கியில் கிடைத்த வேலையை ஏற்றுக் கொண்டால் தற்போதைய சம்பளத்தின் 4 மடங்கு சம்பளம் பெற்றுக்கொள்ள முடியும். எனது அக்கா குடும்பமோ கனடாவில் வசிக்கிறார்கள். அக்காவும் தன் இரண்டாவது மகளுக்கு வரன் பார்க்க ஆரம்பித்துவிட்டார். காலை அலாம் மணி அடித்ததும் எழுந்து நேரத்துடன் அலுவலகத்திற்கு வந்துவிட்டேன். வாஷிங்டனில் உள்ள உலக வங்கி நிர்வாகத் தினருக்கு நான் இன்னும் ஒரு கிழமையில் புது வேலையை ஏற்க வருகிறேன் என்று ஈமெயில் செய்தி அனுப்பிவிட்டு, எனது தற்போதைய வேலையின் ராஜினாமாக் கடிதத்தை கம்பியூட்டரில் தயார்செய்து கடித உறையில் வைத்து ஒட்டிவிட்டு, என் கந்தோர் அறையி லுள்ள ஓரிரு என் சொந்தப் பொருட்களை வீட்டிற்கு எடுத்துச் செல்லும் நோக்குடன் திரும்பியபோது காலம்சென்ற என் மனைவி எனக்கு அன்பளித்த வெள்ளிக்காளை சிலைக்குக் கீழே ஒரு கடிதம் இருப்பதை அவதானித்து அதை எடுத்து வாசிக்கிறேன். அது மாதுமையின் ராஜினாமாக் கடிதம். அன்று அவள் வேலைக்கு வராததால், அவளது வீட்டிற்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்த தொலைபேசியை எடுக்க முயன்றபோது, தவறிவிழுந்த தொலைபேசி, மேசையில் இருந்த அந்த வெள்ளிக் காளைச் சிலையை சரித்து விழுத்திவிட்டது. காளைச் சிலையின் அடித்தளத்தில் தயாரிப்பு கம்பனியினரால் ஒட்டப்பட்டிருந்த வெள்ளைத் தாளில் புதிதாக ஏதோ சிவப்பு பேனாவால் எழுதப்பட் டிருப்பதைக் கண்டு, சிலையை கையில் எடுத்து, சிலையை தலைகீழாகப் புரட்டி நான் அதை வாசித்தபோது, “இரட்டைக் கொம்பு போட்ட காளை” இப்படிக்கு மாதுமை என்று அழகிய தமிழில் மிகத் தெளிவாக எழுதப் பட்டிருந்தது.

முற்றும்.

கதையின் முடிவு விளங்குகிறதா? மாதுமை என்ன எழுதி வைத்தார் என்று ஒரு சொல்லில் பதில் தாருங்கள். (கதாசிரியர்முதலில் கதை கூறுவதுபோல் ஆரம்பித்து பின்னர் தானே கதாநாயகன்போல் கதைப்பதாக தன்பாணியில் கதையை முடித்துள்ளார். இதை தவறாக எண்ண வேண்டாம்.

**ஆக்கம்: தம்பி இராசலிங்கம்.**
(Sydney - Australia)

Think in the Morning
act in the noon,
eat in the evening,
sleep in the night

*- William Blake*

*Books are keys to wisdom's treasure;*
*Books are gates to lands of pleasure*
*Books are paths that upward lead;*
*Books are friends come, let read*

*- Emilie Poulsson*

## சாதனையாளர்கள்



செல்வன் ச.அருட்குமரன்
(மாகாண மட்டத்தில்
சுவட்டு நிகழ்ச்சியில்
தெரிவு செய்யப்பட்டு
தேசிய மட்டத்திற்கு
இடம் பிடித்தவர்)



செல்வன் க. வர்ஜிகன்
(தனி இசையில்
தேசிய மட்டத்தில்
முதலாம் இடம்)

## மாணவ முதல்வர் சபை



# அறிவொளி தருவன நூல்களே

**"கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு**
**புண்ணுடையர் கல்லாதவர்"**

என்ற வள்ளுவர் வாய்மொழிப் பொருளை உலகம் ஒரு முகமாக ஒப்புக் கொள்ளும் நிலை மலர்ந்து விட்டது. அவ்வாய் மொழி ஊனக் கண்ணினும் ஞானக்கண்ணே சிறந்தது என்ற கருத்தினைத் தெளிவுறக் காட்டுகின்றது. ஊனக்கண்ணின் காட்சிக்கு ஒரு எல்லையே உண்டு. அவ்வெல்லைக்கு அப்பாற்பட்ட எதனையும் அது காணல் அரிது. அன்றியும் அது நோயாலும மூப்பாலும் கூர்மை குன்றிக் காட்சிப்பண்பை இழத்தல் கூடும். ஆயின் அறிவுக் கண்ணோ எதனாலும் தடைப்படாது கண்காணாத் தேசங்களில் நிகழ்வனவற்றையும் எதிர்காலத்தில் நிகழ்வன வற்றையும் காணும் ஆற்றல் பெற்றது. அது நோயாலோ மூப்பாலோ ஒளியிழப்பதில்லை. அதனாலேயே கல்வி கற்று அறிவு படைத்தோர் "கண்ணுடையவர்" எனச் சிறப்பிக்கப்படுகின்ற னர். கல்லார் அறிவிலராய் ஊனக்கண்ணா லும் பயன்கொள்ள முடியாமல் "முகத்திரண்டு புண்ணுடையர்" என இழிக்கப்படுகின்றனர். இக்குறளொன்றே அறிவு வளர்ச்சிக்கு உபகாரப்படும் கல்வியின் சிறப்பையும் பயனையும் எடுத்துக்காட்டப் போதியதாகும்.

இத்தகைய கல்வியைப் பெற்று பயன் கொள்வதற்கு இன்றுள்ள உலகில் பலபல சாதனங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் நூல்கள், வானொலி, பேசும் படக்காட்சி, தொலைக்காட்சி, சித்திரம், பிரயாணம் என்பன குறிப்பிடத்தக்கன. எனினும் கல்வி எனும் தீபம் உலகில் ஏற்பட்ட அன்று தொட்டு இன்று வரை அதனை அணைய விடாது நெய்யிட்டு ஒளிகாலச் செய்த பெருமை நூல்களுக்கே உண்டு. மற்றைய சாதனங்கள் கல்வி அறிவு வளர்ந்த போது கண்டு பிடிக்கப்பட்டவை. எனவே கல்வியைப் பரப்பற்கமைந்த கருவிகள னைத்தினுக்கும் தாயாக விளங்குவது நூலாகும். அன்றியும் வானொலி, பேசும் படக்காட்சி போன்றன ஓரளவு வாழ்க்கை வசதி படைத்தவர்களாலேயே பயன்படுத்தப்படுவன. பாமரர்களின் கைக்கெட்டாதன. அவை கல்வித் துறைகளனைத்தையும் அறிவிக்கக் கூடியன வல்ல. ஆனால் நூல்கள் பாமர மக்களாலும் பயன் கொள்ளத்தக்க வகையில் உள்ளன. கல்வித்துறைகளனைத்தையும் திறம்பட அறிவிக்க வல்லன. எனவே கல்விப் பெருஞ் செல்வத்தை உலகுக்கு வரையாது வழங்கும் திறமை நூல்களுக்கன்றிப் பிறிதெதற்கு மில்லை.

இன்றுள்ள நிலையில் உலகிலுள்ள நூல்களனைத்தையும் ஒன்று விடாது எரியூட டியோ. கடலிலிட்டோ அழித்து விட்டால் என்ன நிகழும் என்பதைக் கற்பனைக் கண்கொண்டு கூடக் காண விரும்பாத அளவுக்கு அவை மக்கள் வாழ்வோடு இணைந்து விட்டன. நூல்களால் மக்கள் காலங்காலமாக அளப் பரிய நற்பயன்கள் பெற்று வந்தமையே அப் பிணைப்புக்கு காரணமாகும். அந் நற்பயன் களை மனிதனாலே தேடற்பாலனவாய பெரும் பொருட்கள் என ஆன்றோர் கூறுவார். அவை அறம், பொருள், இன்பம், வீடு என நால் வகைப்படும். அவற்றையே புருடார்த்தங்கள் எனவும் அழைப்பர். மனிதன் முழுமையான வாழ்வு வாழ்வதற்கு அவை இன்றியமை யாதனவாகையால் அவ்வாறு புகழ்ந்துரைக் கப்பட்டன. தனிமனித வாழ்வுக்கும் சமூக வாழ்வுக்குமாகத் தீயன நீக்கி நல்லன கொள் ளும் அறங்கள் பலவும் மனிதனுள்ளத்தில் வளர்தல் வேண்டும். இந்த அறிவுணர்வே உலக நல்வாழ்வு முளைகொள்ளுமிடம். அறவுணர்வு மிக்கவன் அறவழி நடந்து தீவினை விட்டுப் பொருளீட்ட விளைவான். அவ்வித பொருளை நுகர்தலே மேலான இன்பம். இன்பத்தின் நிலையாமை உணர்ந்து உலகப்பற்றை நீக்கி தவஞ்செய்து விடுதலையடைய முயலுதலே வீடு எனப்படும். இத்தகைய நெறிமுறை

நல்வாழ்வினைப் கருப்பொருளாகக் கண்டு ணர்தற்கேற்ற வாழ்க்கைச் சட்டகம் எனவும் கருதப்படும். நாற்பொருட்களில் ஒவ்வொன்றி னையும் விரிவாகவும் மனங்கொள்ளத்தக்க வகையிலும் பற்பல முறைகளினால் நூல்கள் அறிவுறுத்துகின்றன. "அறம், பொருள், இன்பம், வீடடைதல் நூற்பயன்களே" என்ற சூத்திரம் நூல்களின் பயன்களைக் கூறுவதிலிருந்து இவ்வுண்மை புலனாகும். எனவே இவ்வாழ் வுக்கும் பரவாழ்வுக்கும் துணை புரியும் வகையில் மனிதனின் பூரண வாழ்வுக்கு வழிகாட்டியமைவதே நூல்களின் முதற் பயனும் பெரும் பயனுமாகும்.

வேதங்களும் வேதகாலத்து மகரிசிகள் கண்ட ஆழ்ந்தகன்ற தத்துவ தரிசனங்களும் செவிவழியாக கேட்கப்பட்டும் மனதிற் பதிக்கப் பட்டும் பின்னர் ஏடுகளில் பொறிக்கப் பட்டும் பிற்காலத்தில் நூல்களாக்கப்பட்டும் காக்கப் பட்டு வந்துள்ளன.

மனித வாழ்வுக்கு மிக இன்றியமையாத கல்வியென்னுஞ் செழுஞ்சுடரை உலகின் மூலைமுடுக் கெல்லாம் பரவச்செய்யும் ஒப்பற்ற கருவிகளாக நூல்கள் மதிக்கப் படுகின்றன. அவை மனிதன் பூரண வாழ்வு வாழ்வதற்கு வழிகாட்டிகளாய் அமைகின்றன. அறிவெனும் பெரும் நிதியத்தை விரும்பிய வர்கள் விரும்பிய வேளையில் விரும்பிய அளவு பெற்று அனுபவித்து இன்புறுதற்கமைந்த களஞ்சியங்களாய் அவை விளங்குகின்றன. நல்ல நண்பர்களிலும் பார்க்க பேருதவி புரிகின்றன. அவப்பொழுதையுந் தவப் பொழுதாய் கழித்தற்கேற்ற அருமருந்தன்ன கருவிகளாய் மிளிர்கின்றன. சுருங்கக் கூறின் இன்றுள்ள நிலையில் நூல்கள் ஆருயிர் போன்று மிக அருமையாகப் போற்றிப் பயன்கொள்ளப்பட வேண்டியனவாகும்.

**சூ. சகானா,**
தரம் 10B

---

*Teaching is nothing, but creating interest in the subject*

- Anonymous

*Blessed are the meek ;for they shall inherit the earth.*
*Blessed are the pure in heart ; for they shall see God*

- Bible

# வளிமண்டலத்தில் ஓசோன் சிதைவும் தாக்கங்களும்

இன்றைய இருபத்தோராம் நூற்றாண்டின் நவீன விஞ்ஞான உலகிலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற மனிதனானவன் சூழலிலே அறிந்தும் அறியாமலும் மேற்கொள்கின்ற நடவடிக்கைகளினால் பலதரப்பட்ட வழிகளிலும் பல்வேறுபட்ட பிரச்சினைகளை எதிர் நோக்கிய வண்ணமே உள்ளான். மனிதன் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் அவர்களுககுச் சாதகமாக இருந்தாலும் புவிக்கும் அதன் கூறுகளுக்கும் பாதகத்தையே விளைவிக்கின்றது என்பதனை யாரும் புரிந்து கொள்வதில்லை. புவியின் ஒரு கூறாக விளங்கும் வளிமண்டலத்தில் மனிதனது ஆக்கிரமிக்கும் செயல்களினால் பல சிதைவுகள் ஏற்பட்டு வருகின்றன. அவற்றுள் முக்கியமானதாக விளங்கும் ஓசோன் சிதைவையும் அவற்றால் ஏற்படுகின்ற தாக்கங்கள் பற்றி நோக்குவதற்காகவுமே இப்பகுதி வரையப்படுகின்றது.

பூமிக்கும் அதனைச் சூழவுள்ள வளிமண்டலத்திற்கும் அங்கு காணப்படும் உயிருள்ள உயிரற்ற கூறுகளுக்கு இடையிலான பரஸ்பர தொடர்புகளின் காரணமாக விளங்கும் புவித்தொகுதியானது முக்கியமான நான்கு கூறுகளைக் கொண்டது. அவற்றுள் புவியினைச் சூழ நைதரசன் (N2), ஒட்சிசன் (O2), காபனீரொக்சைட் (CO2), கீலியம் (He), ஆகன் (Ar), நீராவி (H2O) எனப் பல வாயுக்கள் தூசித் துணிக்கைகள் என்பவற்றினால் உருவாக்கப்பட்டுள்ள ஓர் வாயு நிலைக் கவசமே வளிமண்டலம் ஆகும். இது புவியின் மேற்பரப்பிலிருந்து 900 – 1200 km வரையான தடிப்பினைக் கொண்டுள்ளது. வாயுக்களின் செறிவு, வெப்பநிலை போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு பல படைகளாகப் பிரிக்கப்பட்டு அவற்றுள் ஒன்றான படை மண்டலத்திலேயே இவ் ஓசோன் படை அமைவுற்றுள்ளது.

வளிமண்டலத்தின் சேர்க்கையிலே இவ்வாயு ஒரு சிறிய பங்கினையே வகித்தாலும் உயிர் காக்கும் பணியை மேற்கொண்டு வருகின்றது. சூரியனிலிருந்து வரும் கதிர்வீச்சிலுள்ள புற ஊதாக் கதிர் வீசலை புவி மேற்பரப்பினை நோக்கிச் செல்ல விடாது இவ்வாயு உறிஞ்சுகின்றது. உள்வரும் புற ஊதாக்கதிர் வீசலின் பெரும் விகிதாசாரத்தினை சிறிய அளவில் காணப்படும் இவ்வாயு உறிஞ்சுவதன் காரணமாக புவியின் உயிர் வாழ்வு பாதுகாக்கப்படுகின்றது.

ஓசோன் வாயு ஒரு நிறமற்ற, எரிச்சலூட்டும், அரிக்கும் தன்மை கொண்டது. மின்சார வயர் எரியும் போது ஏற்படும் மணத்தினை ஒத்த மணம் கொண்டது. படை மண்டலத்தில் காணப்படுகின்ற உயர் வெப்பத்துடன் ஒட்சிசன் அணுமூலக்கூறு ஒட்சிசன் வாயு மூலக்கூற்றுடன் தாக்கம் புரிவதன் மூலம் ஓசோன் (O3) மூலக்கூறு உருவாகின்றது. புவியைச் சூழ்ந்து காணப்படும் இவ்வாயுவின் தடிப்பு இடத்துக்கிடம் வேறுபடும் தன்மை கொண்டுள்ளது. மத்திய கோட்டில் இதன் தடிப்பு 2.4 – 2.6 mm ஆகவும் 700 வடக்கு மற்றும் தெற்கு அகலக்கோட்டில் 3.1–43 mm ஆகவும் இருக்கின்றது. புவி மேற்பரப்புக்கு மேலே 10–50 km உயரத்தில் இவ்வாயுவின் செறிவு காணப்பட்டாலும் அதிகூடிய செறிவு 20 – 25 km உயரத்தில் காணப்படுகின்றது.

ஓசோன் செறிவில் படை மண்டல சல்பேட் தூசுப்படலம், படைமண்டலக் காற்றுக்கள், பச்சை வீட்டு வாயுக்கள், சூரியப் புள்ளி வட்டம், படைமண்டலக் குளோரின் என்பன செல்வாக்குச் செலுத்துகின்றன. இத்தகைய ஓசோன் படையில் அண்மைக காலங்களில் ஏற்பட்டு வரும் சிதைவடைதல் காரணமாகத் துளைகள் உருவாகியுள்ளன. இவ்வாறு துளைகள் ஏற்பட்டு ஓசோன் படை தேய்வடைந்து செல்வதற்கான காரணிகளை நோக்குவோமேயானால்,

**1. மீ ஒலி விமானங்களின் பயன்பாடு**

மீ ஒலி விமானங்கள் படை மண்டலத்தில் பறக்கும் போது நைதரஸ் ஒக்சைட், நைத்தரேற்று போன்ற வாயுக்களை வெளிவிடுகின்றது. இவை ஓசோனுடன் தாக்கமுற்று

அதனை உடைக்கச் செய்கின்றது. அதாவது ஒட்சிசன் அணுவாகவும் ஒட்சிசன் மூலக் கூறாகவும் மாற்றுகின்றது.

**2. குளோரோ புளோரோ காபனின் பயன்பாடு**

குளோரோ புளோரோ காபன் வளி மண்டலத்தில் குளோரின் அணுக்களைத் தோற்றுவிக்கின்றது. ஒரு குளோரின் அணுவானது 100,000 ஓசோன் அணுக்களை அழிக்கவல்லது. ஒவ்வொரு வருடமும் ஏறத்தாழ 750 மெற்றிக் தொன் குளோரோ புளோரோ காபன் வளிமண்டலத்தில் விடப்படுகின்றது. இதில் பொதிகள் செய்வதன் மூலம் 24%மும் குளிரூட்டப்பட்ட வாகனங் களிலிருந்து 20% மும் சுத்தம் செய்யும் கருவிகளில் இருந்து 24%மும் குளிர்சாதனப் பெட்டிகளில் இருந்து 15%மும் வளித்தெறிப புக்களில் இருந்து 15%மும் ஏனைய சந்தர்ப்பஙகளிலிருந்து 2%மும் வெளிவிடப் படுகின்றது. இவ்வாயுவின் அதிக பாவனை யாலே ஓசோனின் சிதைவிற்கு முற்று முழுதாக மனிதர்களே காரணம் என 1974 இல் கலிபோர்ணியா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மரியோ, ஜே.மோலினா ஆகிய இருவரும் குறிப்பிட்டுள்ளனர்.

**3. சுவட்டு எரிபொருட்களின் தகனம்**

சுவட்டு எரிபொருட்களான நிலக்கரி, பெற்றோலியம் போன்றன வாகனங்களிலும், கைத்தொழிற்சாலைகளிலும் எரிக்கப்படுகின்ற போது வெளியேறும் வாயுக்களில் நைதரசன் ஒக்சைட்டானது ஓசோனுடன் தாக்கமுற்று அதனைச் சிதைக்கின்றது.

**4. அணுகுண்டுப் பரிசோதனை**

அணுகுண்டுப் பரிசோதனையின் போது வெளியேறும் கதிர்வீச்சும் ஓசோன் படையின் தேய்விற்கு காரணமாக அமைகின்றது. 1960 களில் வல்லரசு நாடுகளினால் மேற்கொள் ளப்பட்ட அணு குண்டுப் பரிசோதனைகள் ஓசோன் செறிவினைக் குறைப்பதற்கு காரணம் என உறுதியான சான்றுகளை விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர்.

**5. எரிமலைச் செயற்பாடு**

எரிமலைச் செயற்பாட்டின் போது வளி மண்டலத்திற்கு அதிகளவு சல்பர் ஒக்சைட் எறியப்படுவதனால் ஓசோன் படை சிதைவடை கின்றது. அது மட்டுமல்லாது எரிமலை வெடிப்பினால் ஏற்படும் வாயுக்களில் கந்தகவீரொட்சைட்டு ஓசோனைச் சிதைக்கின் றது. மேலே கூறப்பட்ட காரணங்கள் மூலம் ஓசோன் படை சிதைக்கப்படுகின்றது.

"தினை விதைத்தவன் தினை அறுப்பான் வினை விதைத்தவன் வினை அறுப்பான்" எனும் கூற்றுக்கிணங்க ஓசோன் சிதைவடை வதற்கு முக்கியமான காரணமாக இருக்கின்ற மனிதர்களே அதன் தாக்கத்தையும் அனுப வித்து வருகின்றார்கள். வளிமண்டலத்தில் ஓசோன் படை அழிக்கப்படுவதினால் ஞாயிற் றின் அகச் சிவப்புக் கதிர்கள் பெருமளவில் புவியை வந்தடைகின்றது. இது உயிரினச் சூழ லிற்குப் பாதகமாக அமைகின்றது. அவ்வாறான பாதக விளைவுகள் பின்வரு மாறு,

**1. தோல் புற்றுநோய், தோல் எரிவு என்பன ஏற்படுகின்றது.**

படை மண்டலத்தில் காணப்படும் ஓசோன் குறைவடைவதினால் 320 நனோ மீற்றர்களுக்கு கீழ் அகச்சிவப்புக் கதிர் வீசல் அதிகரிக்கிறது. இதன் காரணமாக தோற்புற்று நோய், மூப்படைதல் மற்றும் தோலுடன் தொடர்பான பல நோய்கள் ஏற்படும். உலகின் பல்வேறு பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் மூலம் இது நிரூபிக்கப்பட்டுள் ளது. ஓசோனில் ஏற்படும் 5% குறைவு தோற்புற்று நோயை 20%மும் அதிகரிக்கும் எனக் கூறப்படுகின்றது.

**2. கண்கள் பாதிக்கப்பட்டு கண் பார்வை குன்றுதல்**

ஊதா கடந்த கதிர்களினால் கண்ணில் விழித்திரையை மூடி மெல்லிய சவ்வு வளர்வதால் கண் பார்வை பாதிக்கப்படு கின்றது. வளி மண்டல ஓசோனில் ஏற்படும் ஒவ்வொரு 1.0 சதவீத வீழ்ச்சிக்கும் 100,000 மக்கள் கண் பார்வை இழப்பர் என முன்மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

**3. கடல் பிராந்தியங்களின் உற்பத்தி வீழ்ச்சியடைகின்றது.**

அகச் சிவப்புக் கதிர்கள் நீரில் 20m

ஆழத்திற்கு ஊடுருவிச் செல்லும் தன்மை கொண்டதாகையால் சமுத்திரப் பிளாங்தன் பாதிக்கப்படும். இதனால் கடலில் பிளாங்ரனின் உற்பத்தி வீழ்ச்சியடைவதால் கடல்வாழ் உயிரினங்கள் அழிவடைகின்றன.

### 4. புவியில் வெப்ப அதிகரிப்பை ஏற்படுத்துகின்றது.

இதனால் முனைவுப் பனிக்கட்டி உருகி கடல் மட்டம் உயருதல், சமுத்திரங்களில் வெப்ப அதிகரிப்பு, காலநிலை மாற்றங்கள் என்பன ஏற்படுகின்றன.

ஓசோன் சிதைவினால் இததகைய வல சூழலியல் தாக்கங்கள் ஏற்பட்டு வருகின்றன. அன்ராடிக்காவின் ஓசோனின் துளைகள் அவதானிக்கப்பட்ட பின்னர் உலகளாவிய ரீதியில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. 1987 இல் கனடாவில் மொன்றியல் நகரில் இடம் பெற்ற கூட்டத்தில் பூகோளத்தைப் பாதிக்கக் கூடிய பிரதான சூழலியல் பிரச்சினை ஏற்படுத் தக்கூடிய மாசாக்கிகளின் வெளியேற்றங் களைக் கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. குளோரோ புளோரோ காபன் பல தசாப்தங்களுக்கு வளிமண்டலத் தில் நிலைத்திருக்கக் கூடிய ஒரு வாயுவாகும். ஓசோனின் தேய்விற்கு முக்கியமான கா்ரணியாக விளங்குவது இவ் வாயுவே எனக கண்டறியப்பட்டுள்ளது. 1987 இல் விமானங் கள் மூலம் செய்யப்பட்ட சோதனையின் முடிவில் ஓசோன் 50%ம் குறைவடைந்துள்ள மைக்கு இவ்வாயுவே காரணமென அதே ஆண்டு ஒக்டோபரில் இருந்து இவற்றினைத் தடை செய்யும் சர்வதேச உடன்படிக்கை அமுலுக்கு வந்தது.

எனவே ஓசோன் படையைப் பாதுகாப் பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மிகவும் அவசியமானதாகும். அந்த வகையில்,

- ஓசோன் படையில் ஆய்வுகளை மேற் கொள்ளல்
- ஓசோன் படை குறைந்து செல்லும் விகிதத்தினை அறிந்து கொள்ளல்
- மனிதனின் ஆரோக்கியத்தை எவ்வாறு பாதிக்கின்றது என அறிதல்
- குளோரோ புளோரோ காபனின் உற்பத்தி யைக் குறைத்தல்
- சுவட்டு எரிபொருட்களின் பாவனையைக் குறைத்தல்
- மீ ஒலி விமானங்களின் பயன்பாட்டைக் குறைத்தல்
- சர்வதேச ஒப்பந்தங்களை மேற்கொள்ளல்
- மக்களிடையே ஓசோன் படை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தல்

போன்ற காரணிகளிலே நாம் கவனம் செலுத்துவோமாயானால் ஓசோன் படை சிதைவடைவதைத் தடுத்துக் கொள்ள முடியும்.

ஓசோன் படை சிதைவடைதலை மக்கள் அறிந்து அதற்கேற்ற பாதுகாப்பு நடவடிக்கை களை என்றும் செய்ய வேண்டும் என்பதற்கா கவே வருடந்தோறும் செப்டெம்பர் மாதம் 16ம் திகதி உலக ஓசோன் தினமாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. இத்தினத்தைக் கொண் டாடுவதன் நோக்கம் ஓசோன் படைக்கு தாக்கத்தை விளைவிக்கும் எந்த ஒரு காரியத்தையும் செய்யாது அதனைப் பாதுகாப்பதே ஆகும்.

ஓசோனை அழிவடையச் செய்யும் இரசாயனங்கள் பதிலீடுகள் மூலம் மாற்றப்பட் டுள்ளதினால் சூழலில் ஏற்படும் பாதிப்புக்கள் குறைவடைந்துள்ளன. எதிர் காலத்தில் ஓசோன் படையானது மீள் வளர்ச்சி பெறும் வாய்ப்புள்ளது. மொன்றியல் பின்னேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள முன்னேற்பாடுகள் தொடர்ச் சியாக பூர்த்தி செய்யப்பட்டால் 1980 களுக்கு முன்னர் உள்ள மட்டங்களுக்கு ஓசோன் செறிவானது 21ம் நூற்றாண்டின் நடுப் பகுதியில் மாற்றமடையும்என நம்பப்படுகின் றது. எனவே மனிதர்களாகிய நாம் இன்றைய நாட்களில் ஓசோன் படைக்கு தீங்கானவற் றைத் தவிர்த்து அதனைப் பாதிப்புக்கு உள்ளாக் காமல் இப் பூகோளததில் ஆரோக்கியம் மிக்கவர்களாக வாழ்வோம்.

**இ. தர்சிகா,**
கலை, 2013

# சங்ககால இலக்கியப் பண்புகள்

தமிழ் இலக்கிய வரலாற்றில் இலக்கியம் வளர்ந்த காலப்பகுதிகள் பல்வேறு கட்டங்களாக வகுக்கப்பட்டு அவற்றுள் முதற்காலமாக விளங்குவது சங்ககாலம் ஆகும். கி.பி 1ம் நூற்றாண்டு தொடக்கம் 3ம் நூற்றாண்டு வரையான காலப்பகுதியில் அரசர்கள் சங்கம் அமைத்து தமிழை வளர்த்தனர். இக்காலப்பகுதியில் செந்தமிழாம் தமிழ்மொழியை வளர்ப்பதற்கு எட்டுத் தொகை, பத்துப்பாட்டு போன்ற இலக்கியங்கள் தோற்றம் பெற்றன. அவ் இலக்கியங்கள் பல தனித்துவமான பண்புகளைத் தன்னகத்தே கொண்டுள்ளன. இவ்வாறான சங்ககால இலக்கியப் பண்புகளை அவற்றின் பொருள் மரபு, இலக்கிய வடிவம், எடுத்துரைப்பு முறை, யாப்பு, அணி, மொழிநடை போன்ற அம்சங் களை ஆராய்வதனூடாக உய்த்தறிவோம்.

சங்கச் செய்யுட்களில் காணப்படும் பொருள் மரபு அக்காலத்து மக்களின் வாழ்வியலை ஆதாரமாகக் கொண்டு எழுந்துள்ளது. மானிடத்தில் இயல்பாக எழும் உணர்ச்சிகளான காதல், வீரம் என்பனவே அவர்களது வாழ்க்கையில் முதன்மைப்பட்டது. இதனையே அகத்திணை, புறத்திணை என இரண்டாக வகைப்படுத்தி நோக்கினர்.

சங்க கால அகத்திணை இலக்கியங் களின் பொருள் மரபை நோக்குகையில் நில இயற்கைக்கேற்ப குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகை நிலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவ்வகை நிலங்கள் ஒவ்வொன்றும் புணர்தல், இருத்தல், ஊடல், இரங்கல், பிரிதலும் உடன்போதலும் ஆகிய அக ஒழுக்கங்கள் பேசப்பட்டன. இவ்வொழுக் கங்கள் அன்பின் ஐந்திணை அதாவது தூய காதல் ஒழுக்கம் என அழைக்கப்பட்டது. இவ் ஒழுக்கத்திற்கு புறம்பாக கைக்கிளை, பெருந்திணை ஆகிய இரு ஒழுக்கங்கள் அகத்திணையில் பேசப்பட்டது. இக்கால புறத்திணையை நோக்குகையில் போர் நடவடிக்கைகளையே மக்கள் தமது புற ஒழுக்கமாக கருதினர். ஐவகை நிலங்களிலும் வாழ்ந்த மக்கள் போருக்குச் செல்லும் போது குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய நிலங்களுக்கு உரித்தான வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை ஆகிய பூக்களைச் சூடிச் செல்வதால் புறத்திணை ஒழுக்கம் சூடிச் செல்கின்ற பூக்களின் பெயரால் அழைக்கப்பட்டது. அத்துடன் மக்களின் வாழ்வியல் அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு மேலும் காஞ்சித்திணை, பாடாண்திணை ஆகிய இரு ஒழுக்கங்கள் பேசப்பட்டன. சங்க காலத்தைப் போன்று தமிழ் இலக்கிய வரலாற்றில் வேறு எக்காலத்திலும் காதலும் வீரமும் முதன்மைப்படுத்தப் படவில்லை. உதாரணமாக போரினைப் புகழ்ந்து பாட புறநானூறும் காதலைப் விதந்து போற்ற அகநானூறும் தனித்தனி நூல்களாகத் தோற்றம் பெற்றது.

மேலும் அறிவொழுக்கங்களில் சிறந்த யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற உளப்பாங்குடைய சங்கப்புலவன் பொருள் மரபுகளுக்கேற்ப செய்யுளைப் பாடுகின்ற போது அவற்றைத் துறைக்கு ஒரு செய்யுளிலே பாடுவார். இவற்றைத் துறைச்செய்யுள் அல்லது தனிநிலைச் செய்யுள் குறும் செய்யுள் எனவும் அழைப்பர். துறைச்செய்யுள் என்பது ஒரு சம்பவத்தினை ஒரு செய்யுளிலே பாடுவதைக் குறிக்கும். அத்துடன் நெடும் பாடல் என்று அழைக்கப்படும் ஆற்றுப்படை எனும் இலக்கிய வடிவத்தைக் கையாண்டு ஒவ்வொரு துறைக ளின் கருத்துக்களை நீண்ட செய்யுட்களில் பாடுவதை அவதானிக்கலாம். ஆற்றுப்படை என்பது ஆற்றுப்படுத்தல்/ வழிப்படுத்தல் எனப் பொருள்படும். இவ் இலக்கிய வடிவம் தமிழ் இலக்கியத்திற்கே தனித்துவமானதாகும்.

இவ்விலக்கியமே பிற்காலத்தில் எழுந்த காவியங்கள், காப்பியங்கள் எனப் பல இலக்கியங்களின் தோற்றங்களுக்கு அடிப் படையாக அமைந்தது எனலாம்.

சங்கச் செய்யுட்களை அவற்றின் எடுத்துரைப்பு முறைமூலம் நோக்குகின்ற பொழுது சில விசேடமான பண்புகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. அந்த வகையில் அகத்திணைச் செய்யுட்களை எடுத்துக் கூறுகின்ற போது முதல், கரு, உரி என்ற கோட்பாட்டின் அடிப்படையில் எடுத்துச் சொல்வதை அவதானிக்கலாம். ஐவகை நிலங்களும் அவற்றுக்குரிய காதல் ஒழுக்கம் நடைபெறும் பொழுதும் முதற் பொருளாகக் கொள்ளப்படும் மரம், பூ, மிருகம், போன்ற இயற்கைப் பொருட்களை கருப்பொருளா கவும் ஒவ்வொரு நிலங்களிலும் பேசப்படும் காதல் ஒழுக்கம் உரிப்பொருளாகவும் கொள்ளப்பட்டன.

மேலும் அகத்திணையில் புலவன் பாடுபொருளைத் தன் கூற்றாக அன்றிப் பாத்திரங்களின் கூற்றாகவே பாடுவான். அதாவது தலைவன், தலைவி, செவிலி, தோழி போன்ற யாராவது ஒருவரின் கூற்றாகப் பாடப்பட்டிருக்கும். ஆனால் புறத்திணை இலக்கியங்களை எடுத்துக் கூறுகின்ற போது இன்னொரு பாத்திரமாக நின்று பாடாது தன்கூற்றாகவே பாடுவான். இது இலக்கியத் திற்கு சிறப்பு சேர்ப்பதாக அமைகின்றது.

அத்தோடு சங்க அகத்திணைச் செய்யுட்களில் புலவர் பாத்திரங்களின் பெயர் சுட்டிப் பாடாத பண்பை எடுத்து விளக்குகிறார். இதனையே தொல்காப்பியர்,

*"மக்கள் நுதலிய அகனைந்திணையுள்*
*சுட்டி ஒருவர் பெயர் கொளப் பெறார்"*

என்ற நூற்பா மூலம் எடுத்துக்காட்டி யுள்ளார். ஆனால் புறத்திணை இலக்கியங் களின் பொருள் மரபைப் பொறுத்த வரையில் பாத்திரங்களின் பெயர் சுட்டியே பாடப்பட் டிருக்கும்.

சங்கப் புலவன் தான் எடுத்துக் கொண்ட பொருளை விளக்குவதற்கு அணிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பாடப்பட்டிருப்பது குறிப்பிடத்தக் ஒரு பண்பாகும். இந்த வகையில் அணிகளுக்கு தாயாகிய உவமை யணியைக் கையாண்டு தான் கூற வந்த கருத்துக்களை வெளிப்படுத்தி உள்ளமை யாலே டாக்டர் மு.வரதராஜன் சங்க இலக் கியங்கள் ஓர் உவமைக் களஞ்சியம் எனச் சுட்டியுள்ளார்.

*"செம்புலப் பெயல் நீர் போல்*
*அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே"*

என்ற வரிகள் மூலம் தலைவனும் தலைவியும் மனம் ஒன்றி காதல் கொள்ளும் நிலையினை செந் நிலத்தில் வீழ்ந்தோடும் மழை நீர் போல என்ற உவமை அணியை உதாரணமாக எடுத்து நோக்கலாம்.

இதை விட உள்ளுறை, இறைச்சி ஆகிய வற்றையும் கையாண்டுள்ளார். உள்ளுறை என்பது உள்ளுறுத்திச் சொல்வதாகும். அதாவது வெளிப்படையாக நிகழ்வதொன்றை குறிப்பதற்கான அதே வேளை இன்னொன்றை யும் சுட்டி நிற்றல் உள்ளுறை உவமையாகும். உதாரணமாக தலைவி தலைவனது பிரிவுத்து யரை ஆற்றாது வருந்தும் நிலையினை தலைவனுக்கு உரைத்து அவனை விரைந்து வரைந்து கொள்ளுமாறு வற்புறுத்திய தோழி சிறிய கொப்பில் பெரிய பலாப்பழம் தொங் குவதை உள்ளுறையாக வெளிப்படுத்துவதை அவதானிக்கலாம்.

*"வேரல் வேலி ..........*
*சிறு கோட்டுப் பெரும் பழம் தூங்கியாங்கு*
*அவன் உயிர் தவச் சிறிது காமமோ பெரிது"*

என்ற குறுந்தொகைப் பாடல் மூலம் விளக்கலாம். இறைச்சிப் பொருள் என்பது

சொல்லுகின்ற முறையால் சொல்லிற்கு அப்பால் ஆன ஒரு விடயத்தை வெளிப்படுத்தி நிற்பதாகும். இங்கு உவமையை விட பொருளே அர்த்தம் பெற்றிருக்கும்.

உதாரணமாக

*பெருங்கடல் பரப்பின் இரு புறம் தோய*
*சிறு வெண் காக்கை பலவுடன் ஆடும்*
*துறை புலம்பு உடைத்தே தோழி பண்டும்*

என்ற நற்றிணைப் பாடலடி மூலம் வரைவு விரைவாக நடக்க வேண்டும் என்பதை இறைச்சிப் பொருளாக எடுத்துச் சொல்லும் போது சிறிய நீர்க்காகம் நீராடுவதைப் போல தாங்களும் நீராடவில்லையே என்ற உணர்வு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

மேலும் புலவன் தான் கூற வந்த விடயத்தை விளக்குவதற்கு தொகை சேர்த்தும் அடை செய்தும் பாடி உள்ளதை அவதானிக்க லாம். அத்துடன் சுருங்கக் கூறி விளங்க வைக்கும் செய்யுளாகவும் நேரிலே கண்டு தரிசிப்பது போன்ற பாடல்களாகவும் பாடி யிருப்பது அக்கால இலக்கியங்களில் காணக் கூடியதாக உள்ளது.

மேலும் இக்கால இலக்கியங்களைப் பாடுவதற்கு பயன்படுத்திய யாப்பு வகைகளை நோக்குகின்ற பொழுது இலக்கியங்களில் ஆசிரியப்பா, வஞ்சிப்பா ஆகிய இரண்டுமே ஆரம்பத்திலிருந்து பெரு வழக்காக இருந்தன. எனினும் பிற்காலத்தில் கலிப்பாவும் பரி பாட்டும் இலக்கியங்களில் பயின்று வந்ததை அவதானிக்கலாம். ஆசிரியப்பா அகவல் ஓசையிலும் வஞ்சிப்பா தூங்கல் ஓசையிலும் கலிப்பா துள்ளல் ஓசையிலும் பாடப்பட் டுள்ளது. சங்க கால அகத்திணை இலக்கியம் பெரும்பாலும் அகவற்பாவில் பாடப்பட்டது. சங்க இலக்கியங்கள் யாப்பு அடிப்படையில்

| | |
|---|---|
| *அகவற்பா* | *- அகநானூறு, புறநானூறு* |
| *வஞ்சி* | *- மதுரைக்காஞ்சி* |
| *கலிப்பா* | *- கலித்தொகை* |
| *பரிபாடல்* | *- பரிபாட்டு* |

என்ற வகையில் நோக்கலாம்.

இக்கால இலக்கியங்களின் மொழி நடையினை நோக்குகின்ற போது பிறமொழிச் சொற்கள் கலவாத தூய தமிழ் மொழிநடை யையே அவதானிக்க முடிகிறது. இதனால் தான் இக்காலத்தை தனித்தமிழ்க் காலம் என்பார் மறைமலை அடிகளார். இவ்வாறு தூய தமிழ் மொழியிலான மொழிநடை காணப்பட்ட மையினால் இறுக்கமான மொழிநடை கொண்ட செய்யுளாக இக்கால செய்யுட்கள் விளங்குவதை அவதானிக்கலாம்.

இவ்வாறாக சங்ககால இலக்கியங் களைஅவற்றின் பொருள் மரபு, இலக்கிய வடிவம், யாப்பு, மொழிநடை முதலிய அம்சங் களில் பல தனித்துவமான பண்புகளைத் தன்னகத்தே கொண்டு அடுத்து வந்த இலக் கியங்களின் வளர்ச்சிக்கும் வழிகாட்டியாக இருந்தது என்பதை மேற்கூறிய வற்றிலிருந்து அறியக் கூடியதாக இருக்கின்றது.

**து. சோபனா**
கலை, 2013

## பாடசாலை கல்விசாரா ஊழியர்கள்



திரு. க.ஸ்ரீசண்முகநாதன், திரு. ந.அமிர்தலிங்கம், திரு. இ.பாலகுமார் (அதிபர்)
திரு. எஸ்.ரஞ்சன், திரு. மு.தியாகேசன், (1998-2011)

## பாடசாலை அபிவிருத்திச் சங்கம்



இ. வலம் : திரு. சி.தியாகராசா, திரு. செ.சேமானந்தன், திரு. ஆ.குமாரசாமி, திரு. சி.சசீலன், திரு. இ.செல்வமகேசன், திரு. ம.சச்சிதானந்தம், திரு. இ.பாலகுமார் (அதிபர்), திருமதி ரூ.இராஜரட்ணம், திருமதி ஜெ.கலாதரன், திருமதி ஜெ. மேகலாதேவி, திருமதி ஜெ.விஜியந்தினி

# மானிடத்தை மீளப் பெறுவதற்கான வழிவகைகள்

குரு சேத்திரத்திலே பரமாத்மாவாகிய கிருஷ்ணன் கர்ணனிடம் போகின்றார். யாசகம் கேட்டு அதே பரந்தாமன் பாமரரான குசேலர் தரும் ஒரு பிடி அவலுக்காக ஆவலுடன் காத்திருக்கின்றார் துவாரகையில். எல்லாம் தெரிந்தவனே ஏதும் இல்லாதது போல் யாசகம் கேட்டு காத்திருக்கும் போது மனிதரே மானுடம் தேடி அலைவதும் வேடிக்கையில லைத்தான். ஆனால் இது சிந்திக்கப்பட வேண்டிய விடயம். ஓசோன் ஓட்டையாவது போல பிளாஸ்டிக்கும் பொலித்தீனும் பெருகுவது போல இது தீர்க்க முடியாத பிரச்சனையல்ல. ஆனால் அகிலமெல்லாம் உள்ள ஆயிரம் கோடிப்பேரும் சேர்ந்து காண முடியும் இதற்கு ஒரு தீர்வு.

மானிடத்தை தொலைத்து விட்டு எங்கே? என்று கேட்டு விடாதீர்கள். அதற்குத் தனியாக ஒரு பட்டியலிட வேண்டும். விண்ணிலே விண்மீன்கள் எத்தனை? என்று எண்ணுவது முடியுமா? மற்றவர்களைப் பற்றியே விமர்சித்துப் பழகிவிட்ட எங்களுக்கு எங்களைப் பற்றி விமர்சிக்கக் கற்றுத்தர வில்லை யாரும் இன்றைக்கு. அதனால் தான் தவறுகள் பெருகுகின்றன. மனிதம் மரித்துக் கொண்டிருக்கிறது. இன்றைக்கு வீதியிலே ஒருவன் விழுந்து கிடக்கிறான் என்றால் அவன் விரலிலே மோதிரம் இருக்கிறதா? கழற்ற முடியமா? என்று யோசிக்கும் கயவர்கள் தான் உண்டு. காப்பாற்றலாம் என்ற சொல்லக் காந்திகள் இங்கில்லை.

அநாதையானவர்கள், ஊனமுற்றோர் கள், பிச்சைக்காரர்கள், முதியவர்கள் என்று நம் நாடு முன்னேறிக் கொண்டிருக்கின்றது. எதனால்? மனிதர்கள் எல்லோரும் இயந்திரங் களாகி விட்டார்கள். ஆகிக் கொண்டிருக் கிறார்கள். நாய் எலும்புத் துண்டுக்கு அலைவது போல அலைகிறார்கள். எதற்கு? எல்லாம் அந்த வெறும் காகிதக் கற்றை களுக்காக. இங்கே பாசம் பெரிதாகத் தெரிய வில்லை. பணம் தெரிகின்றது. பெற்றதாய் தந்தை கூடத் தேவையில்லை. அவர்களை வெறும் கரும்புச் சக்கைகளாக உறிஞ்சி முடிந்துவிட்டது. இனி எதற்கு அவர்கள்? அந்திம காலத்தில் அன்புக்காக ஏங்கி அநாதரவாய் இறப்பதா அவர்கள் நிலை? பதில் சொல்லுங்கள் மரத்துப் போன மனிதர்களே?

ஊனம் பெரிதில்லை ஞானம் தான் வேண்டும். அந்த ஞானம் தான் மனிதம். ஆனால் ஊனக் கண் கொண்டு தான் நாம் உலகைப் பார்க்கிறோம். அது தான் "ஊனமுற்றோர்" என்று உதறிவிட முடிகிறது. அவர்களுக்குள்ளும் ஞானம் உண்டென்று புரியும் காலம் எப்போதோ அப்போதே மனிதம் மலரும்.

இப்போது கொலை, கொள்ளை, கடத்தல் எல்லாம் சகஜம். வீதியில் வாழைப் பழத் தோல் எறிவது போல நாம் மனிதநேயப் பண்புகளைச் சுலபமாய் தூக்கி எறிய முடிகிறது. மனித மாண்புகளும் சிதைவடை கின்றன. இவற்றையெல்லாம் நிச்சயம் ஒரு மனிதன் மரண வலியிலும் மறக்கக் கூடாது. அப்பொழுது தான் அவன் மனிதன் இல்லை என்றால்...........?

மாவீரன் அலக்சாண்டர் அடங்காத குதிரையை அடக்கியவன். ஒத்துக் கொள்கிறேன். நெப்போலியன் பயம் என்ற சொல்லே தெரியாதவன். ஏற்றுக் கொள்கி றேன். இவர்களெல்லாம் சரித்திர நாயகர்கள். இவரகளின் பேராசையும், வீரமும், கோபமும், வெறியும் அகிலத்தில் அகிம்சையை உடைத்து போரை மையம் கொள்ளச் செய்து உதிரத்தை யும் உடல்களையும் சேர்த்தே தாரை வார்த்தது பூமிக்கு. அந்தக் கொலைக் கலாசாரத்தை இன்று வரை நாம் கையாளுகின்றோம். சந்ததி சந்ததியாய் அமெரிக்கா – ஈராக் போர், இஸ்ரேல் – பலஸ்தீன யுத்தம் இலங்கையில் உள்நாட்டுப் பிரச்சினை, காஷ்மீரில் சண்டை, காசாவில் இரத்தம் என்று கதை தொடர்கி றதே.... எப்போது வைப்பீரகள் முற்றுப்புள்ளி?

எனவே அன்பு, அகிம்சை கொண்ட மனிதத்தை மீளப் பெறுவோம். மாண்புகள் நிறைந்த மனித சமுதாயத்தை வளர்ப்போம். 22ம் நூற்றாண்டில்லல இன்றே நிறைவேற்று வோம்.

**ஸ்ரீ. விஜிதரன்**
தரம் 11A

# எமது பண்பாட்டில் விஞ்ஞான தொழிநுட்பம் ஏற்படுத்தியதாக்கம்

பண்பாடு என்பது குறிப்பிட்ட இடத்து மக்களின் கலைகளும் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும் சிந்தனையை வெளிப்படுத தும் முறைகளும் ஆகும். சுருங்கக் கூறின் மக்களின் சிந்தனை வெளிப்பாட்டை பண்பாடு எனலாம். தமிழர் தம் பண்பாடு உலக அரும் பெரும் பண்பாடுகளுள் ஒன்றாகப் பலராலும் போற்றப்படுகின்றது. இத்தகைய எமது பண்பாட்டில் விஞ்ஞான தொழிநுட்பம் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது எனப் பார்ப்போம்.

உலகம் வேகமாக இயங்கிக் கொண் டிருக்கின்றது என்பதனை உலகில் நடைபெறும் நிகழ்வுகள் பாறைசாற்றிக் கொண்டிருக் கின்றன. கணினி, இணையம், உலகமயமாக் கல் எனப் பல புரட்சிமிகு நிலைகள் உண்டாக் கப்பட்டதன் விளைவாக உலகமே ஒரு குக் கிராமமாய் உருவெடுத்துள்ளது என்பதனை எவருமே புரிந்து கொள்வர். இதற்கெல்லாம் காரணம் விஞ்ஞான தொழிநுட்பமே. இத்தகைய விஞ்ஞானத் தொழிநுட்பமானது தமிழர் தம் பண்பாட்டில் பல்வேறு தாக்கங் களை ஏற்படுத்தியுள்ளதைக் காண முடிகின் றது.

வேலைப் பளுவைக் குறைக்கவும், நேரத்தை மீதப்படுத்தவும் விஞ்ஞான தொழிநுட்பத்தால் விளைந்த பொருட்களை நாம் பயன்படுத்துகின்றோம். இத்தகைய நன்மைகளை எமக்குத் தரும் விஞ்ஞான தொழிநுட்பம் பல்வேறு பாதகமான தாக்கங் களை தமிழர் தம் பண்பாட்டில் ஏற்படுத்து வதைக் காண்கின்றோம்.

வந்தாரை உபசரித்து வாழ வைப்பது தான தமிழனின் பண்பாடு. ஆனால் இன்று நாம் அந்தப் பண்பாட்டை செவ்வனே நிறைவேற்று கின்றோமா என்பது கேள்விக்குரிய விடயமே. குடும்பத்துக் குத்துவிளக்குகள் எனப்படும் இல்லத்தரசிகள் இன்று விஞ்ஞான தொழிநுட்ப விந்தையால் விளைந்த தொலைக்காட்சியை போட்டு விட்டு வீட்டிற்கு வந்தவரை அதனைப் பார்க்கும் படி கூறி விட்டு தமதலுவல்கள் பார்க்கச் சென்று விடுகின்றனர். ஆனால் பண்டைய காலத்தில் இன்முகம காட்டி வரவேற்று சுகநலம் விசாரித்து இன்முகத்துடன் அனுப்பி வைத்தார்கள். இன்று விருந்தினர் களை உபசரிப்பதற்குக் கூட நேரமில்லாது திண்டாடும் மக்களையே நாம் காண முடிகின்றது. அன்றைய தமிழன் பண்பாடு இன்று எங்கே? ஆகவே விஞ்ஞான தொழிநுட் பம் எமது பண்பாட்டில் எந்தளவு பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதை நாம் இதன் மூலம் அறியலாம். அது மட்டுமல்ல அன்றைய இளஞ்சந்ததியினர் பெற்றோ ருக்கும் பெரியோருக்கும் ஆசிரியருக்கும் கீழ்ப்படிந்து மதிப்பளித்து நடந்தார்கள். ஆனால் இன்று..... எம்மவர்கள் பெற் றோருடனும் பெரியோருடனும் சரிசமமாக இருந்து மது அருந்துவதையும் புகைப் பிடிப்பதையும் பார்த்தால் தலையே சுற்று கின்றது. கேட்டால் நாகரிகம் என்கிறார்கள். இது தான் தமிழன் பண்பாடா?

நாதஸ்வரம், தவில் என்பன மங்கள கரமான, வரவேற்புக்குரிய தமிழ்ப் பண்பாட்டுச் சின்னங்களாகும். அன்று ஆலயங்களில் நாதஸ்வரம், தவில் ஆகியவற்றின் மங்கள ஒலியின்றி பூசைகள் நடைபெறா. ஆனால் இன்று ஒலி நாடாவில் மங்கள ஒலியைப் பதிவு செய்து ஒலிக்க விடுகின்றார்கள். அன்று கல்லும் கனிந்துருக பக்திப்பாடல்களைப் பாடிய போது இறைவன் மனமுவந்து அருள் பாலித்தான். இன்று ஆன்மாவுக்கும் இறைவனக்குமுள்ள நெருக்கமான உறவு அறுபட வாய்ப்பு ஏற்படுதோடு வளரும் பல கலைஞர்களின் வளர்ச்சியையும் இவ் விஞ்ஞானத் தொழிநுட்பம் தடுக்கின்றது.

முன்னைய காலங்களில் ஆலயங்களில் விசேஷ திருவிழாக்களின் போது பஜனைகள், கூத்துக்கள், நாடகங்கள், இசைக்கச்சேரிகள் எனப் பல கலை, கலாசார நிகழ்வுகள் பண்பாட்டைப் பிரதிபலிப்பவையாக அரங் கேறுவது வழக்கம். அவை அக்கால மக்களின் அமைதியான வாழ்வையும் தமிழர் தம் பண்பாட்டுக்கு அவர்கள் கொடுத்த மதிப்பை யும் பிரதிபலிப்பன. ஆனால் இன்று ஆலயங் களில் விசேட திருவிழாக்களின் போது கலை, கலாசார நிகழ்வுகள் அரங்கேறுகின்றன தான். ஆயினும் அவை மக்களின் பண்பாட்டைப் பிரதிபலிப்பவையாக அமைவதில்லை. "இசைக்கச்சேரி" என்றால் அன்று நாதஸ்வரம், மிருதங்கம், வீணை, வயலின், தவில், புல்லாங்குழல் எனப் பல மங்கள வாத்தியங் களின் இனிமையான நாதமும் பக்திப்பாடல் களுமே மனதை மயக்கும். இன்று விஞ்ஞான தொழிநுட்ப விந்தையால் விளைந்த பல்வேறு இசைக்கருவிகளின் மூலம் ஆலயங்களில் திரையிசைப் பாடல்களையே கேட்க முடிகின் றமை வருந்தத் தக்கது.

எமது மூதாதையர்கள் எமது தமிழ்ப் ப்ண்பாட்டை சிறப்பாகக் கடைப் பிடித்தார்கள். இதற்கு எடுத்துக்காட்டாக அன்று போர்த்துக் கேயர் ஆட்சிக் காலத்தில் எமது சைவ சமயத்திற்கு எதிராக பல்வேறு அடக்கு முறைகள் காணப்பட்ட போதும் அவர்கள் விரத நாட்களில் வாழையிலையில் சாப்பிடும் வழக்கத்தை கைவிடவில்லை. ஆனால் இன்று நாம் விஞ்ஞான தொழிநுட்பம் வளர்ந்து கொண்டு வருகின்றது என்று கூறிக்கொண்டு வித விதமான தட்டுக்களிலல்லவா உணவை உண்ணுகின்றோம். விஞ்ஞான தொழிநுட்பம் எந்தளவுக்கு பாதகமான தாக்கத்தை ஏற் படுத்தியுள்ளது என்பது இதிலிருந்து தெரிகின் றது.

அன்றைய மக்கள் பெண்கள் பூப் படைந்து விட்டார்கள் என்றால் ஓரு விழாவாக எடுத்து மங்கள வாத்தியங்கள் ஒலிக்க பலரும் அப் பெண்ணுக்கு ஆசீர்வாதம் வழங்குவர். ஆனால் இன்றைய மக்கள் நாகரிக மோகத்தில் திளைத்து பெண்களின் பூப்புனித நீராட்டு தலின் போது குளியலறையில் குளிப்பதைக் கூட நவீன விஞ்ஞான தொழிநுட்ப புகைப்படக் கருவிகளைக் கொண்டு பதிவு செய்து பலரும் கூடியிருக்க திரையிடுகிறார்கள். இது தமிழர் பண்பாட்டுக்கே இழுக்கானதொரு செய லாகும்.

இவ்வாறாக பல நன்மைகளையும் அதே வேளை பல தீமைகளையும் இவ் விஞ்ஞானத் தொழிநுட்பம் தமிழர் பண்பாட்டில் ஏற்படுத்து வதைக் காணலாம்.

ஆகவே நாம் எமது பண்பாட்டை எதற்காகவும் விட்டுக்கொடுக்கக் கூடாது. விஞ்ஞானத் தொழிநுட்பம் வளர்ச்சியடைந்த நாடாகிய பிரித்தானியா இன்றும் பழைமை போற்றும் பண்பைக் கைவிடவில்லையே. அவர்கள் நவீன உலகிற்கேற்ப மாறிக்கொண்டு இருந்தாலும் தமது பண்பாட்டை என்றுமே கைவிட்டதில்லை. மாறாக தமிழர்கள் மட்டுமே பண்பாட்டைத் தொலைத்து நடு வீதியில் நிற்கின்றோம்.

எனவே முடியாது என்று எதுவுமே இல்லை. விஞ்ஞானத் தொழிநுட்பத்தை நன்மை தரும் வகையில் பயன்படுத்திக் கொண்டு எமது பண்பாட்டை அழிய விடாது பேணுவோம் என உறுதி பூணுவோமாக.

**ச. பிரசாங்கா**
**கலை, 2011**

# தமிழ்மொழியும் பழமொழிகளும்

நமது முன்னோரது அனுபவத்திலும், அறிவிலும கனிந்த ஆழ்ந்த கருததுக்கள் பொதிந்த தமிழ்ச் சொற்றொடர்களே "பழமொழிகள்" எனப்படும். அவை தமிழில் ஆயிரக் கணக்கில் உள்ளன. முன்னோர்கள் நமக்களித்த அருஞ்செல்வங்களில் இதுவும் ஒன்று எனக் கொள்ளலாம். இவை தமிழர் நாகரிகத்தின் சான்றுகளாகவும் தமிழரின் தொன்மையான நாகரிகச் சிறப்பிற்கும், அதன் செழுமைக்கும் சான்றுகளாகவும் மிளிர் கின்றன. தமிழ்ப் பழமொழிகள் பற்றி விரிவாக ஆய்வு செய்யப்படுதல் அவசியமாகும்.

நமது மூத்த பாட்டன், பாட்டிமார் தமக்கிடையே நடைபெறும் உரையாடல் களிலும், எமக்கு ஏதாவது செய்திகளைத் தரும்போதும் அடிக்கடி தேவை நோக்கி சரளமாக பழமொழிகளைப் பயன்படுத்துவதை நாம் பல்வேறு சந்தர்ப்பங்களில் கேட்டிருக் கின்றோம்.

இவ்வாறு அவர்கள் சொல்வது மட்டும் தான் பழமொழிகள் என்று சிந்தனை எங்களிடத்திலும் இருக்கத்தான் செய்கிறது. எப்படியிருப்பினும் அவ்வாறான பழமொழி களை, அவற்றின் சரியான கருத்துக்களை ஆராய்ந்தறிவது நமது பண்பாட்டுக் கருவூலங் களை இன்னும் ஆழமாக விளங்கிக் கொள்ள வாய்ப்புக் கிடைக்கும், பழந்தமிழுக்கும் தற்போது நம்மால் பேசப்படும் தமிழுக்கும் வேறுபாடு இருப்பதை உணரலாம். கற்றவர், கல்லாதவர் ஆகிய இரு பிரிவினருக்கும் பொதுவானதாகப் பழந்தமிழ் இருக்கின்றது.

தற்காலத்தமிழ் பல்வேறு தாக்கங் களுக்கு உட்பட்டுப் பெரும்பாலும் செயற்கைத் தன்மை உடையதாகவே காணப்படுகின்றது என்று கூறலாம். அதாவது உணர்வுகளுக்கு மதிப்பளிப்பது பழந்தமிழ் என்றால் புலமைக்கு மதிப்பளிப்பது தற்காலத் தமிழ் என்று கூறலாம்.

பழமொழி என்றால் என்ன என் பதற்குத் தொல்காப்பியம் பின்வருமாறு வரைவிலக்கணம் கூறியுள்ளது.

*"நுண்மையும் சுருக்கமு மொளியு முடைய மெண்மையு மொன்றினை விளங்கத் தோன்றிக் குறித்த பொருளை முடித்தற்கு வரூஉ மேது நுதலிய முதுமொழி யென்ப"*

இதன்படி தொல்காப்பியர் பழ மொழிக்கு ஏழு கூறுகள் இருத்தல் வேண்டும் என்று கூறுகின்றார்.

1. நுண்மை
2. சுருக்கம்
3. ஒளி
4. உடைமை
5. எளிமை
6. குறித்த பொருளை முடித்தல்
7. ஆதாரம் (ஏது நுதலும்)

இதனை விட வேறு வகையில் பழமொழிகளின் இயல்புகளை எடுத்துக் காட்டு வதனால் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

- எளியோராலும் எடுத்துக் கூறக் கூடிய தன்மையைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- ஓசை நயம் மிக்கதாயிருத்தல் வேண்டும். அதன் கருத்தை நேரடியாகத் தரல் வேண்டும்.
- உண்மைத்தன்மை மிக்கதாய் இருத்தல் வேண்டும்.
- அனுபவப்பட்ட கருத்தைக் கூறுதல் வேண்டும்.
- சுருக்கமான எளிய சொற்களில் அமைதல் வேண்டும்.
- உணர்வு பொங்க அமைதல் வேண்டும்.
- உலக வழக்ககாக ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.
- அழுத்தமான நடை இருத்தல் வேண்டும்.

- ஏதேனும் ஒரு நோக்கைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.
- பழமையானதாக இருத்தல் வேண்டும்.

இவை போன்ற பண்புகளால் நிரம்பியதே பழமொழிகள் என்று நாம் கொள்ளலாம். பழமொழிகளை நாம் ஆராய்ந்தால் அவை ஒவ்வொன்றும் இரண்டிரண்டு கூறுகளாகக் காட்சியளிப்பதைக் காணலாம்.

எடுத்துக்காட்டாக:

- ஐந்தில் வளையாதது – ஐம்பதில் வளையுமா?
- அடுத்துக் கெடுப்பவன் கபடன் – தொடுத்துக் கெடுப்பாள் மடந்தை.
- எளியாரை வலியார் கேட்டால் – வலியாரைத் தெய்வம் கேட்கும்.

பழமொழிகள் எந்தக் காலத்தில் எழுந்தவை என்று திட்டவட்டமாகக் கூற முடியாது. பழமொழி என்னும் பண்புக்கு காலங் கூறுவது கடினம். ஆயினும் குறிப்பிட்ட சில பழமொழிகளுக்கே காலம் கூற முடியும்.

*"குண்டு பட்டுச் சாகாதவன் வண்டு கடித்துச் செத்தானாம"*

இந்தப் பழமொழி உலகில் வெடி மருந்து கண்டுபிடிக்கப்பட்டதன் பின்னரே தோன்றியிருக்க வேண்டும். இவ்வாறு சில பழமொழிகளுக்குக் காலம் கூற முடியும். ஆனாலும் பெரும்பாலான பழமொழிகளுக்குக் காலத்தைக் கூறுவதற்குச் சான்றுகள் இல்லை என்றே கூற வேண்டும்.

இனி பழமொழிகள் சிலவற்றை நோக்குவோம்.

### கல்வி

1. இளமையிற் கல்வி சிலையில் எழுத்து
2. விளையும் பயிரை முளையிலே தெரியும்
3. இறைத்த கிணறே ஊறும் இறையாத கிணறு நாறும்
4. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?
5. அடியாத மாடு படியாது.

### மருத்துவம்

1. உப்பில்லாப் பண்டம் குப்பையிலே
2. சுத்தம் சோறிடும் எச்சில் இரக்க வைக்கும்
3. நொருங்கத் தின்றால் நூறு வயதிருப்பாய்
4. மருந்தாயினும் விருந்தோடு உண்
5. மருந்தும் விருந்தும் மூன்று நாள்
6. சுக்குக்கு மிஞ்சிய மருந்தில்லை
7. மாதா ஊட்டாத சோற்றை மாங்காய் ஊட்டும்
8. போன சுரத்தைப் புளிவிட்டு அழைக்காதே

### வாழ்வு முறை

1. அழையாத விருந்திற்குள் நுழையாதே
2. ஆழமறியாது காலை விடாதே
3. ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு
4. ஆனைக்கொரு காலம் பூனைக்கொரு காலம்
5. உண்மை சொல்லிக் கெட்டார் இல்லை.

### இறைவனின் இரக்கம்

1. அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும்
2. அரகரா என்பது பெரிதோ ஆண்டிக்கு இடுவது பெரிதோ
3. உயிரைக் கொடுத்த சாமிக்கு மயிரைக் கொடு
4. எளியாரை வலியார் கேட்டால் வலியாரைத் தெய்வம் கேட்கும்
5. கொடுக்கின்ற தெய்வம் கூரையைப் பிய்த்துக் கொடுக்கும்.

### சேமிப்பு

1. அழகுக்கு அணியும் ஆபரணம் ஆபத்திற்கு உதவும்
2. அழகேசனானாலும் அளவறிந்து செலவு செய்
3. எழுதி வாழாதான் வாழ்க்கை கழுதை புரண்டகளம்
4. எலி வளையானாலும் தனிவளை வேண்டும்

5. ஒரு காசு பேணின் இரு காசு தேறும்

**தர்மம்**

1. இட்டுக் கெட்டார் எவருமில்லை
2. இறைத்த கிணறு ஊறும் இறையாத கிணறு நாறும்
3. உண்ணாச்சொத்து மண்ணாய்ப் போகும்
4. எட்டி பழுத்தென்ன ஈயாதோர் வாழ்ந்தென்ன
5. தர்மம் தலை காக்கும்

**பணவலிமை**

1. ஈட்டி எட்டிய மட்டும் பாயும் பணம் பாதாளம் மட்டும் பாயும்
2. பணமென்றால் பிணமும் வாய் திறக்கும்
3. பணம் பந்தியிலே குணம் குப்பையிலே

**விடாமுயற்சி**

1. அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்
2. அழுத பிள்ளை பால் குடிக்கும்
3. இருந்த கால் மூதேவி நடந்தகால் சீதேவி
4. பாடின்றிப் பட்டமில்லை
5. வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்

**ஒற்றுமை**

1. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு
2. எத்தால் வாழலாம் ஒத்தால் வாழலாம்
3. ஒன்று பட்டால் உண்டு வாழ்வு

**காலம் தவறாமை**

1. ஐயர் வருமட்டும் அமாவாசை காத்திருக் குமா?
2. கண்கெட்டபின் சூரிய நமஸ்காரமா?
3. காற்றுள்ள போதே தூற்றிக்கொள்
4. கண்கெட்ட பின் சூரிய நமஸ்காரமா

**தகாதவை**

1. அற்ப ஆசை கோடி தரித்திரம்
2. அடாது செய்தவன் படாது படுவான்
3. ஆசை வெட்கமறியாது
4. ஆத்திரகாரனுக்குப் புத்தி மத்திமம்
5. இன்றைக்கு இலையறுத்தவன் நாளைக்குக் குலையறுப்பான்

தமிழ் மொழியில் காணப்படும் அருஞ்செல்வங்களில் ஒன்றான பழமொழி களைப் பேணிப் பாதுகாத்தல் நம் கடனாகும்.

**பு. மீரா**
**கலை, 2012**

# My birthday Party

On the 22nd of February. I was 11 years on that day. I had a small party. I went to house in the evening. My birthday cake was a teddy bear. My mother made some birthday sweets. My grandma gave me a birthday Frock.

My father's parents gave me a gold bangle. I got a few other presents. My mother placed eleven candles on the birthday cake and lighted them. Then we all sang the birthday song and clapped hands eleven times.

I put out the candle lights and cut the cake. My brother took some photos. My birthday party ended about 6 p.m. It was a very happy day for me.

**M. Thadshagini**
Gr 8B

# அரசின் தோற்றம் பற்றிய கோட்பாடுகள்

அரசின் தோற்றம் பற்றி அரசியல் அறிஞர்கள் பல கோட்பாடுகளை முன்வைத் துள்ளனர். அக்கோட்பாடுகளில் காலத்தால் முற்பட்டது தெய்வீக உரிமைக் கோட்பாடு. அக்கோட்பாடு பற்றி நோக்குவோம்.

**தெய்வீக உரிமைக் கோட்பாடு**

அரசின் தோற்றம் பற்றிய கோட்பாடு களில் மிகவும் பழமையான கோட்பாடாக இது காணப் படுகின்றது. இக்கோட்பாட்டின் சாராம்சம் யாதெனில் "அரசு என்பது இறைவனால் படைக்கப்பட்ட ஒரு நிறுவனம்" என்பதாகும். அரசர்கள்! ஆட்சியாளர்கள் இறைவனின் பிரதிநிதி என்பதனையும் வலியுறுத்தி நிற்கிறது. இறைவனின் பிரதிநிதியான மன்னன் மட்டுமே சட்டம் இயற்ற முடியும். மக்கள் இச்சட்டத்திற்கு கீழ்படிய வேண்டும் மன்னனை எதிர்ப்பது பாவம் என்கின்றது.

இக்கோட்பாடு பின்வருவனவற்றை வலியுறுத்துகின்றது.

- அரசனே இறைவனின் பிரதிநிதி, கடவுளே அரசனுக்கு சகல அதிகாரங்களையும் கொடுத்தான்.
- அரசன் கடவுளுக்கு மட்டுமே பொறுப்புச் சொல்ல வேண்டியவன். அதாவது ஆட்சி யாளர்கள் மக்களுக்கு பொறுப்புச் சொல்லத் தேவையில்லை.
- தந்தைக்குப் பின் மகனுக்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும்.
- இந்துக்களின் மகாபாரதத்திலும் கிறிஸ் தவர்களின் புனித நூலான திருமறையிலும் இக் கோட்பாடானது காணப்பட்டது. இக் கோட்பாடானது சில நாடுகளின் மத நம்பிக்கையின் அடிப்படையில் செயற் படுவதனை காணலாம்.

**தந்தை வழிக் கோட்பாடு**

புராதன காலத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த அரசின் தோற்றம் பற்றிய கோட்பாடுகளில் ஒன்றாக இத் தந்தை வழிக் கோட்பாடு என்பது காணப்படுகின்றது. சேர் ஹென்றிமெயின் என்னும் அறிஞரால் புராதன சட்டங்கள் ஆரம்பகால வரலாற்று நிறுவனங் கள் என்பவற்றின் வாயிலாக இக்கோட்பாட் டினை இவர் கட்டியெழுப்பி உள்ளார். இதன் சாராம்சம் யாதெனில் "ஆண்கள் பெற்று இருந்த அதிகாரத்தின் வாயிலாக தோற்று விக்கப்பட்ட நிறுவனமே அரசு" ஆகும். சொத்து ரிமை, வாரிசுரிமை ஆண்கள் மூலமே நிர்ணயிக்கப்படும். பிரான்சிய அறிஞர் டியூசின் இக்கோட்பாட்டை ஆதரிக்கின்றார். "குடும்பத்தின் விரிவே அரசு" எனக் கூறியவர் அரிஸ்ரோட்டில் ஆவார்.

**தாய்வழிக் கோட்பாடு**

ஆரம்ப காலத்தில் சமுதாயத்தில் பெண்களிடம் தலைமைத்துவம் காணப் பட்டதாக இக்கோட்பாடு கூறுகின்றது. அவுஸ்ரேலியாவின் ஆதி சமுதாய அமைப்பு ஆதாரமாக கூறப்பட்டுள்ளது. ஒரு குலத்தை சேர்ந்த ஆண் வேறு குலத்தைச் சேர்ந்த பெண்களை மட்டும் தான் திருமணம் செய்ய வேண்டும். ஒரு பெண்ணைத் திருமணம் செய் தால் அக்குலத்தில் உள்ள எல்லாப் பெண்களை யும் திருமணம் செய்வதற்கு சமனாகும். இங்கு சொத்துரிமை, வாரிசு உரிமை என்பவற்றைத் தீர்மானிக்கும் பிரதான சக்தி மிக்கவராக பெண்கள் காண்பபடுகிறார். இவ்வாறு பெண் கள் குடும்பத்தில் பெற்றிருந்த அதிகாரமே அரசு என சிறப்பிக்கின்ற கோட்பாடாக தாய்வழிக் கோட்பாடு காணப்படுகிறது.

**பரிணாம வளர்ச்சிக் கோட்பாடு**

அரசின் தோற்றம் பற்றிய மற்றுமோர்

கோட்பாடாக பரிணாம வளர்ச்சிக் கோட்பாடு காணப்படுகின்றது. அரசு என்பது திடீரென உருவாக்கபட்ட நிறுவனம் அல்ல, மாறாக சமூக படிமுறை வளர்ச்சியின் விரிவாக்கத்தினால் உருவாக்கப்பட்டது என்பதனை இது சிறப்பாக விபரிக்கின்றது. குடும்பத்தினது விரிவாக்கமே அரசு என்று இக்கோட்பாடு குறிப்பிடுகிறது. குடும்பம், குலம், சமூகம்என்ற போக்கில் இக்கோட்பாடு வளர்ச்சியடைந்தது.

## பலவந்தக் கோட்பாடு

அரசின் தோற்றத்திற்கு அடிப்படைக் காரணியாக பலமே காணப்பட்டது என்பதனை சிறப்பாக விபரிக்கும் கோட்பாடே பலவந்தக் கோட்பாடு ஆகும். இக்கோட்பாட்டின் சராம்சம் யாதெனில் "பலமானவர்கள் பலவீனமானவர்களைக் அடிமைப்படுத்தியதன் விளைவாக தோற்றுவிக்கபட்ட நிறுவனமே அரசாகும்" அல்லது "வலியவர்கள் மெலியவர்களை அடிமைப்படுத்தியதன் விளைவாகத் தோற்றுவிக்கப்பட்ட நிறுவனமே அரசாகும்."

அரசின் தோற்றத்திற்கு பலாத்காரம், ஆக்கிரமிப்பு, கைப்பற்றுதல், கீழ்படிதல் என்பனவற்றை இக்கோட்பாடு முதன்மைப் படுத்தியுள்ளது. மனிதன் ஆரம்பத்தில் அமைதியாக வாழ்ந்தான். பின் சுயநலத்தை நோக்கமாகக் கொண்டு யுத்தங்கள் புரிந்தான். இதனால் பலசாலி ஆட்சி புரிந்தான். ஆட்சி மேலோங்கியது எனக் கூறப்பட்டது. நோர்வே, சுவீடன், டென்மார்க் போன்ற நாடுகளின் வரலாறு இக் கோட்பாடுகளை ஆதாரமாகக் கூறுகின்றது.

- பலம் சரியானது
- பலமே உன்னத உண்மை
- பலம் சரியானதை ஆக்கும்

## தாராண்மை வாதக் கோட்பாடு

தாராண்மை வாதம் என்பது தனிமனித்தத்துவத்திற்கு மிக உயர்ந்த நிலை யினைப் பெற்றுக் கொடுக்கின்ற ஒன்றாக இது காணப்படுகின்றது. இத்தாராண்மை வாதமானது வரலாற்றில் மூன்று வகையான படி நிலைகளில் தற்போது வரை நிலைத்துள்ளது.

அவையாவன:
- தலையிடா அரசு
- சமூக நலன்புரி அரசு
- குறைந்த பட்ச அரசு

தாராண்மை வாதம் தனிமனிதனின் விடுதலையைக் குறிக்கின்றது. 15ம் நூற்றாண்டு முதல் சிறிதாக அழிந்து வந்த முதலாளித்துவ முறையின் கீழ் இக்கோட்பாடு தோற்றம் பெற்றது என "கரரோல்ட் லஸ்கி" கூறுகின்றார். அரசு என்பது பொது நலன் பேணும் ஒரு அமைப்பாகும் என்று இக் கோட்பாடு கூறுகின்றது.

## சமூக ஒப்பந்தக் கோட்பாடு

அரசின் தோற்றம் பற்றிய மற்றுமோர் முக்கியமான கோட்பாடாக இது காணப் படுகின்றது. சமுதாயததில் அறிவு வளர்ச்சி ஏற்பட்டதனை தொடர்ந்து மக்கள் தமக்கிடையே செய்து கொண்ட உடன்படிக்கையே அரசாகும். இங்கு உடன்படிக்கையினை குறிப் பிடுகையில் இரு முக்கியமான உடன்படிக் கையை வலியுறுத்தி உள்ளன.

- சமூகத்தில் வாழ்ந்த தனி நபர்களுக்கு இடையிலான உடன்படிக்கை இரு சமூக ஒப்பந்தம் அல்லது அரச ஒப்பந்தம் எனப் படும்.
- ஆள்வோருக்கும் ஆளப்படுவோருக்கும் இடையிலான உடன்படிக்கை இது. அரசாங்க ஒப்பந்தம் எனப்படும்.

இக்கோட்பாடு பற்றி ரூசோ, ஜோன் லொக், தோமஸ் கொப்ஸ் ஆகியோர் குறிப்பிட்டுள்ளனர்.

## மாக்சிச கோட்பாடு

அசரின் தோற்றம் பற்றிய கோட்பாடு

களில் மற்றுமோர் முக்கியமான கோட்பாடாக மாக்சிசக் கோட்பாடு என்பது காணப்படு கின்றது. 19ம் நூற்றாண்டு கால்மாக்ஸ் அரசென்பது ஒரு வர்க்கம் பேணும் கருவி என்று குறிப்பிட்டார். கால்மாக்ஸ் 1818ல் ஜேர்மனியில் வைத்து தமது நூலாகிய (Duscapital) மூலதனம் என்ற நூலில் அரசு பற்றிய தனது கோட்பாட்டை வெளியிட்டார்.

பொருளாதாரக் காரணிகள் மட்டுமே வரலாற்று மாற்றங்களை உருவாக்குகின்றது. சொத்துடமையின் தோற்றம், வளர்ச்சி, அதன் அடிப்படையில் தோன்றிய வர்க்க முறைமை இதனால் ஏற்பட்ட வர்க்க முரண்பாடு ஆகிய வற்றினாலே அரசு தோன்றியது. வர்க்க முறையினால் அரசு தோன்றியதால் அரசை வர்க்க நலன் பெணும் கருவி என்றார். வர்க்க முரண்பாட்டை பொருளாதார அடிப் படையில் முதன் முதலில் வேறுபடுத்தியவராக இவரே காணப்பட்டார். பொருளாதார காரணியே அரசு உருவாக்கியதாக மாக்ஸ் கூறினார். பொருள் முதல் வாதம் என்று இதனை கூறுகின்றார். வரலாறு மூலம் ஐந்து கட்டங்களாக எடுத்துக் காட்டுகின்றார்.

- புராதன கம்யூனிஸ் சமூகம்
- ஆண்டான் அடிமைச் சமூகம்
- மானிய முறைச் சமூகம் .
- முதலாளித்துவச் சமூகம்
- சோசலிச சமூகம்

## பாசிஷக் கோட்பாடு

20ம் நூற்றாண்டின் மத்திய காலப் பகுதியில் தோற்றம் பெற்று மிகக் குறுகிய காலத்தில் அழிவடைந்த ஒரு கோட்பாடாக இக் கோட்பாடு காணப்படுகின்றது. பாசுஷிசம் என்பது இலத்தீன் சொல்லான (Fasces) என்பதில் இருந்து பிறந்தது. பாசுஷிசம் (Fascism) என்பதன் தமிழ் அர்த்தம் "ஒன்றாக இணைந்து கட்டப்பட்ட குச்சிகளின் கட்டு" என்பதாகும். அதாவது "ஒரு சிறந்த தலைமைத் துவத்தின் கீழ் ஒழுங்கமைக்கப்படுகின்ற அரசானது பலமும் புகழும் பெறும்" என்பதாகும். மறு வார்த்தையில் குறிப்பிட்டால் இரத்தமும் சதையும் கலந்த கோட்பாடாக விமர்சிக்கப்படும்.

இப் பாசிஷக் கோட்பாடானது 1921ம் ஆண்டு இத்தாலியை ஆட்சி செய்த இத்தாலி யின் சர்வதிகாரியான பெனிட்போ முசோலினி என்பவராலும், ஜேர்மனின் சர்வதிகாரி கிட்லர் என்பவராலும் நடைமுறைப்படுத்தப்பட்டது. இக் கோட்பாடு அரசின் அதிகாரத்தை புலப் படுத்துவதும், சட்ட ஒழுங்கை நிலைநாட்டு வதும் அரசின் கடமையாகும். அரசின்றி தேசத்திற்கு தனிப்பட்டவர்களிற்கும் இருப்பு இல்லை என்கிறது. 1919ம் ஆண்டு பாசிஷக் கட்சியை ஆரம்பித்து 1921ம் ஆண்டு தேர்தலில் வெற்றி பெற்றார். முதலாம் உலகப்போரின் தோற்றம் பெற்ற கோட்பாடு. ஆகையால் இதற்க அரசியல் கொள்கை காணப்பட வில்லை. சந்தர்ப்ப வாதமே இதன் சாயலாக உள்ளது. தேசிய பலத்தையும் இராணுவ பலத்தையும் வலியுறுத்துகிறது. ஆண்கள் பெண்களை விட உயர்வானவர்கள் என்கிறது.

போர் தனது தலைசிறந்த நண்பன் என முசோலினி கூறினார். ஆணிகளின் கடமை போர் புரிதல் பெண்களின் கடமை மகப்பேறு எனவும் நீதி நேர்மை என்பவற்றை பாசுஷிசம் வெறுக்கின்றது. நாட்டின் நலன்களுக்காக மக்கள் கட்டுப்பட வேண்டும் என்கிறது. எல்லாம் அரசிற்குள்ளேயே இருக்க வேண்டும் என இக்கோட்பாடு கூறுகின்றது. ஜனநாயகம் சுதந்திரத்தை நிராகரிக்கின்றது. இக் கோட்பாடு சர்வ வல்லமை பொருந்தியது. பல்வேறு அறிஞர்களும் இதற்கு கோப்பிட்டு வடிவத்தை வழங்கி இருந்தாலும் இதனை நடைமுறைப் படுத்திய பெருமை இரு சர்வாதிகாரிகளுக்கு மட்டும் உரியதாகும்.

**அ. தயாளினி**
கலை, 2013

# பொறுமையைப் பேணுவோம்

மனித வாழ்வில் பொறுமை பேணல் முக்கியமான சீரிய பண்புகளில் ஒன்றாகக் கருதப்படுகின்றது. மனித வாழ்வுக்கும் உயர்ச் சிக்கும் பொறுமை அடிப்படையாக அமைகின்றது. பொறுமை பேணியோர் பலர் தம் வாழ்வில் உயர்வடைந்தமையை வரலாறுகள் நமக்குச் சுட்டிக் காட்டுகின்றன. புராண இதிகாசங்களிலும் இதற்கான சான்றுகளை நாம் காண முடியும். பொறுமை யுடையோர் தம வாழ்க்கையில் எதிர் கொள்ளும் பிரச்சினைகளைச் சுமுகமாகத் தீர்த்துக் கொள்வர். அவர்களது வாழ்வும் வளம் பெறும். "பொறுத்தார் உலகாள்வார்" என்னும் முதுமொழி இதனையே எடுத்துக் காட்டுகிறது. பொறுமை யுடைமை சீரிய பண்பாகக் கருதப்படுகின்றது. இதனாலேயே சமூகத்தில் நன்மதிப்பைப் பெறுவதற்குப் பொறுமை பேணல் அவசியமென வலியுறுத்தப்படு கின்றது.

பொறுமை இழந்தோர் பெருந் துன்பங் களுக்கு இலக்காவர். "தீதும் நன்றும் பிறர் தரவாரா என்பது" சங்ககாலச் சான்றோர் வாக்கு. பெருமையும் சிறுமையும் தான் தர வருவனவே யன்றிப் பிறர் தர வருவனவல்ல என்ற உண்மையை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். பெருமையும் சிறுமையும் நம் கையிலேயே தங்கியுள்ளது. பெருமை பெறுவோர் பொறுமையுடையோராகப் பணிவுடையோராக விளங்குவர். பொறுமை என்பது அவர்தம் அணிகலமாக விளங்குவ தைக் காணலாம். பொறுமை பேணுவோர் அடக்க முடையவராகக் காணப்படுவர். மனம், மொழி, மெய் என்னும் மூன்று வகையாலும் பணிவுடைய வராக, அடக்கமுடையவராக இருப்பார். அவர்களது செயல்கள் யாவும் பொறுமையை அடிப்படையாகக் கொண்டன வாக அமைதலைக் காணலாம்.

*"ஒறுத்தார்க்கு ஒரு நாளை இன்பம் பொறுத்தார்க்குப் பொன்றும் துணையும் புகழ்"*

என்பது வள்ளுவர் வாக்கு. மேலும் பொறுமை பேணுவோரே பெருமை பெறுவர் என்பதையும் வாழ்வில் உயர்வடைவர் என் பதையும் வள்ளுவரது குறள்கள் பல வலியுறுத்து வதைக் காணலாம்.

இதிகாச புராண வரலாறுகளை நோக்கு வோமாயின் பொறுமைக் குணம் கொண்டோர் தம் வாழ்வில் வெற்றி கொண்டமையையும் பொறுமை பேணாதோர் ஈற்றில் தோல்விகளையே சந்தித்துக் கொண்டமையையும் தெரிந்து கொள்ள முடிகிறது.

பொறுமை காத்த பஞ்சபாண்டவர்கள் வெற்றி கொண்டமையையும் பொறுமைக் குணமற்ற கௌரவர்கள் தோல்வி கண்டமை யையும் மகாபாரதக் கதை நமக்கு நன்கு புலப்படுத்துகின்றது. வணங்காமுடியோன் என அழைக்கப்பட்ட துரியோதனன் தன் வாழ்வில் பொறுமை பேணாமையாலேயே அழிந்தான். பொறுமை பேணுதலே வெற்றிக்கு அடிப்படை என்பதை நன்குணர்ந்த பாண்டவர்கள் அதனை இறுதிவரை பேணியதன் மூலமே இறுதியில் வெற்றி கொண்டனர். பொறுமையே அவர்களது வெற்றிக்கு அடிப்படை என்பதை இதன் மூலம் நாம் அறிந்து கொள்ள முடிகின்றது.

மாணவர்களாகிய நாம் பாடசாலை வாழக்கையிலும் சமூக வாழ்க்கையிலும் பொறுமையைக் கடைப்பிடித்து ஒழுக வேண்டும். பொறுமை பேணுவதன் மூலமே உயர்வு காண முடியும் என்பதை உணர்ந்து செயற்பட வேண்டும். பொறுமை பொன் போன்றது. பொறுமைப் பண்பை நமது நாளாந்த வாழ்வில் சீராகக் கடைப்பிடிப் போமாயின் நமது எதிர்காலம் சிறப்படையும் என்பது திண்ணம். பொறுமையற்றவர்களைச் சமூகம் பெரிதும் மதிப்பதில்லை. பொறுமை யுடையோரையே சமூகம் மதித்துக் கௌர விக்கும். இந்த உண்மையை நாம் என்றும் மனத்திற் கொண்டு செயற்பட வேண்டும்.

சுருங்கக் கூறின் பொறுமை பொக்கிசம் போன்றது. அதனைப் பேணிப் பாதுகாப்பதன் மூலமே மக்கள் உயர்வு காண முடியும். மனித வாழ்வுக்கும் உயர்ச்சிக்கும் அடிப்படையாக அமையும் பொறுமைப் பண்பை நமது வாழ்வில் என்றும் பேணுதல் வேண்டும். இதன் மூலமே சமூக வாழ்வில் நாம் உயர்வடைய முடியும். பொறுமையைப் பேணுவோம்! வாழ்வில் உயர்வு காண முயல்வோம் என நாமனைவரும் உறுதி கொள்வோமாக!

**கு. செல்வியா**
தரம் 9B

# உலகை அச்சுறுத்தும் அணுக்குண்டுகளும் அணு ஆயுதங்களும்

1945ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 6ம் திகதி மனித குலம் அறிந்திராத அதன் இருப்பையே கேள்விக் குறியாக்கிய அழிவுச் சக்தியே அணுகுண்டு ஆகும். ஜப்பான் ஹிரோஷிமா நகரில் இது கோரத்தாண்டவம் ஆடியது. அந்நகரின் மீது ஒரு கோடி சூரியன்கள் கண நேரம் ஒளியூட்டி மறைந்தது போன்ற தோற்றம். தொடர்ந்து காரிருள் சூழ்ந்தது. கறுப்பு மழை பெய்தது. அமெரிக்கப் போர் விமானம் அந்த நகரின் மீது அணுக்குண்டு வீசிய ஒரு சில நிமிடங்களில் இவை நிகழ்ந்தன.

நகரில் ஆங்காங்கே தீப்பற்றி எரியத் தொடங்கியது. செறிவூட்டப்பட்ட யுரேனியத்தால் தயாரிக்கப்பட்ட அந்த அணுகுண்டால் ஏற்பட்ட வெடிப்பு, வெப்பம், தீப்பிழம்புகள், கதிரியக்கத்தால் உடலில் தீப்பற்றி நுரையீரல் வெடித்து மூச்சுத் திணறி அப்பாவிக் குழந்தைகள் பெண்கள் உள்ளிட்ட 90,000 பேர் உடனடியாக இறந்தனர். 1945ம் ஆண்டு இறுதியில் இந்த எண்ணிக்கை 145,000 ஆக உயர்ந்தது. ஹிரோஷிமாவைத் தொடர்ந்து நாகசாகியில் ஆகஸ்ட் 9ம் திகதி வீசப்பட்ட புளுட்டோனிடிய அணுக்குண்டால் 70,000 பேர் இறந்தனர். 1945 முதல் இன்று வரை உலகில் 128,000 அணுக்குண்டுகள் தயாரிக்கப் பட்டுள்ளன. பல்வேறு அணு ஆயுதப் படைக் கலைப்பு ஒப்பந்தங்களுக்குப் பிறகு தற்போது உலகில் ஏறத்தாழ 27,000 அணு ஆயுதங்கள் உள்ளன.

அணு ஆயுத நாடுகள் என அறிவிக்கப் பட்டவற்றில் அமெரிக்காவில் 9,938 அணு ஆயுதங்கள் உள்ளன. ரஷ்யா – 16,000, பிரிட்டன் – 200, பிரான்ஸ் – 350, சீனா – 200. அணு ஆயுத நாடுகள் என அறிவிக்கப்படாத இந்தியா, பாகிஸ் தான் நாடுகிளில் மொத்தம் 110அணுகுண்டுகள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இஸ்ரேலிடம 80 அணு ஆயுதங்கள் உள்ளன. இவற்றில் 12,000 அணு ஆயுதங்கள் ஏவுகணை உள்ளிட்ட தாங்கிகளில் பொருத்தப்பட்டு தயாராக உள்ளன. இதில் 3,500 ஆயுதங்கள் ஒரு நொடிக்குக் குறைவான நேரத்தில் செலுத்தி விடக் கூடிய தயார் நிலையில் உள்ளன. பெரும்பாலான ஆயுதங்கள் நேரில் போர் நடவடிக்கைகளில் ஈடுபடாத பொது மக்கள் அதிகளவில் வசிக்கும் பெரு நகரங்களைக் குறி வைத்து நிறுத்தப்பட்டுள்ளன. தவறான தகவல்கள் தகவல் இடைவெளிகள் காரணமாக எந்த நேரததிலும் அணு ஆயுதத் தாக்குதல் நடக்கக் கூடிய சூழலில் நாம் வாழ்கின்றோம்.

1945 முதல் இது வரை நிகழ்த்தப்பட்ட 2051 அணு வெடிப்புச் சோதனைகள் காரணமாக ஏற்பட்ட கதிரியக்கத்தால் வரும் பல நூறு ஆண்டுகளில் பல்லாயிரக் கணக்கானோர் மடிவார்கள் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. ஹிரோஷிமா நாகசாகியில் ஏற்பட்ட அணுகுண்டு போடப்பட்ட 62ஆவது ஆண்டு நினைவின் போது வரும் செய்திகள் போரற்ற உலகை விரும்பு வோருக்கு மகிழ்ச்சி அளிப்பதாக இல்லை. கதிரியக்கம், மரணம் என்ற வகையில் மனித குல அழிவுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் உள்ள அணு ஆயுதங்களை அறவே ஒழிக்க வேண்டும் என்பதே உலகம் முழுவதும் உள்ள சமாதான இயக்கங்களின் கோரிக்கையாக உள்ளது.

ஹேக் நகரில் அமைந்துள்ள சர்வதேச நீதிமன்றம் 1996 ஜீலை மாதம் 8ம் திகதி அணு ஆயுதங்கள் குறித்து தெரிவித்த கருத்து நினைவு கூரத்தக்கதாகும். அணு ஆயுதங்களைப் பயன்படுத் தல் போர்கள் குறித்த சர்வதேச சட்ட விதிகளை மீறுவதாகும். குறிப்பாக சர்வதேச மனிதாபிமான சட்ட விதிகளை மீறுவதாகும்.

அணு ஆயுதக் கலைப்புக்கு வழி கோலும் சர்வதேச பேச்சுவார்த்தைகளை முடிவுக்குக் கொண்டு வந்து அணு ஆயுதக் கலைப்பை சர்வதேச கண்காணிப்புடன் நடைமுறைப்படுத்துவது அனைத்து நாடுகளின் சட்டபூர்வ கடமை என்பதே அது. ஏற்கனவே ஐ.நா. சபையின் சுற்றுக்கு விடப்பட்டுள்ள வரைபு அணு ஆயுத உடன்படிக்கை, அணு ஆயுதங்களின் மேம்பாடு, சோதனை, உற்பத்தி, இருப்பு வைத்தல், மற்ற நாடுகளுக்கு வழங்குவது, பயன்படுத்துவது அல்லது பயன்படுத்தப்படும் என அச்சுறுத்துவது ஆகியவற்றைத் தடை செய்வதுடன் “அணு ஆயுதங்களை முற்றிலும் ஒழிப்பது” ஆகிய பிரிவுகளைக் கொண்டுள்ளது.

இந்த உடன்படிக்கைக்கு உலக நாடுகளின் அரசுகள் ஒப்புதல அளிக்க வேண்டும். அணு ஆயுதங்களை வைத்துள்ள நாடுகளின் குடிமக்களும் இவற்றைக் கைவிட வேண்டும். அன்றேல் அணுகுண்டுகளாலும், அணு ஆயுதங்களாலும் உலகிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்ட வண்ணமே இருக்கும்.

**பு. உமேஸ்வரி**
தரம் 10B

# MY PET

My pet is a dog. It is a common country dog. But it is a good looking animal. It is white in colour with brown spots on body.

It has a bushy tail and has a lot of fur on his body. It is about two feet height and long body.

I call him John. It is a nice watch dog. It eats whatever food we eat. It barks but it does not bite. It scares away all animals that come into our compound. It is always clean. I bathe it at least twice a month in a tank near our home. It tries to follow me wherever I go. Whenever I am at home, it stays close to me. At night it sleeps in the veranda

It is an excellent watch dog. It never barks unless it is necessary and urgent. I adore my dog and will not spare it for anything.

**L. Kuruparan.**
Gr. : 6L

# WORRIES

Worries worry worries
They are carried in mind
Some times we worry worries
They are ferried something of the kind.
Don't worry about your worries
So, don't worry others' worries
So, don't fail to avoid worrying yourself.
If so, nothing would worry you
If not, something might worry you
On the whole, every thing is a kind of worry
By the way, that's my worry.

**V. Thadchajini**
Gr. 13 Arts

## பாடசாலை பழைய மாணவர் சங்கம்



இருப்பவர் (இ. வலம்) : திரு. சி.அமிர்தலிங்கம், திரு. சி.பேரின்பநாதன், திரு. செ.குகதாசன், திரு. சி.லட்சுமிகாந்தன், திரு. இ.பாலகுமார் (அதிபர்), லயன் வ.பரமசிவம், திரு. க.ஏகாம்பரம், திரு. ச.சண்முகநாதன்
நிற்பவர் (இ.வலம்) : திரு. கை.சங்கரலிங்கம், திரு. ந.அமிர்தலிங்கம், திரு. க.சண்முகதாசன், திரு. சி.பத்மராஜா, திரு. ஏ.சண்முகலிங்கம், திரு. செ.செல்வகுமார், திரு. த.ஜெயகாந்தன்

## பாடசாலை அபிவிருத்தி சபை



இருப்பவர் (இ. வலம்): திரு. இ.செல்வமகேசன், திரு. சி.பேரின்பநாதன், திரு. சி.இலட்சுமிகாந்தன், திரு. செ.குகதாசன், திரு. இ.பாலகுமார் (அதிபர்), திருமதி ரூ.இராஜரட்ணம், திருமதி ஜெ.கலாதரன், திருமதி பௌ.பஞ்சலிங்கம், திருமதி பூ.சத்தியன்,
நிற்பவர் (இ. வலம்) : திரு. ஆ.குமாரசாமி, திரு. ம.சச்சிதானந்தன், திரு. சி.பத்மராஜா, திருமதி ஜெ.மேகலாதேவி, திருமதி ஜெ.விஜியந்தினி,

# ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சி

மறு மலர்ச்சி என்பது மீண்டும் மலர்தல் எனப் பொருள்படுகின்றது. இம் மறுமலர்ச்சி 19ம், 20ம் நூற்றாண்டுகளில் உலக வரலாற்றில் முக்கியமாக ஐரோப்பாவில் ஏற்பட்டு தாக்கத்தினை ஏற்படுத்தியது. இம் மறுமலர்ச்சியில் கல்வி மறுமலர்ச்சி, நவீன விஞ்ஞான கண்டு பிடிப்புகள், முக்கிய நூலாசிரியர்கள், கலைகள் முக்கியமாகக் காணப்படுகின்றது.

கல்வி மறுமலர்ச்சி இத்தாலியில் ஆரம்பித்தது. அதற்கு பங்களித்த காரணங்கள் பலவாகும். அவற்றில் முக்கியமாக பல்கலைக் கழகம் ஏற்படுத்தப்பட்டமை, கொன்ஸ்தாந்தி நேபிளில் இருந்து எடுத்துச் செல்லப்பட்ட பழம்பெரும் நூல்கள் இத்தாலியில் கிடைக்கப் பெற்றமை சிலவாகும். மறுமலர்ச்சிக் காலத்தில் முன்னேற்றமடைந்த துறைகளானவை இலக்கியம், சிற்பக்கலை, சித்திரக்கலை, கட்டடக்கலை, மானிடவியல் என்பனவாகும்.

கலைகளில் ஓவியக்கலையும் சிற்பக் கலையும் சிறந்து விளங்குகின்றன. இக்கலையில் லியனாடோடாவின்சி, மைக்கல் ஆஞ்சலோ, ராபாயேல் என்பவர்கள் சிறந்து விளங்குகின்றனர்.

### லியனாடோடாவின்சி

- லியனாடோடாவின்சி 1452ம் ஆண்டு இத்தாலியில் புளோரன்ஸ் நகரில் பிறந்தார்.
- புளோரன்ஸ் நகரில் பிரசித்தி பெற்ற ஓவியரான எவதோக்கியோவின் கீழ் ஓவியக்கலையைப் பயின்றார்.
- பின்னர் புளோரன்ஸ் நகரில் கலையகம் அமைத்து அங்கு புகழ் வாய்ந்த ஓவியராக மக்களின் மதிப்பிற்குள்ளானார்.
- இயற்கையை வெளிப்படுத்தும் ஓவியங்கள் வரைவதற்கு முயன்ற அவர் அதன் பொருட்டுப் புது முறையைக் கையாண்டார்.

### மைக்கல் ஆஞ்சலோ

- மைக்கல் ஆஞ்சலோ கி.பி. 1475ம் ஆண்டு புளோரன்ஸ் நகரில் பிறந்தார்.
- புளோரன்ஸ் நகரப் பணம் படைத்த நிர்வாகியாக விளங்கிய லோரேன்சோ மெடிசி அவருக்கு அனுசரணையாக இருந்தார்.
- இறுதி தீர்ப்பு எனும் ஓவியம் அவரது படைப்புக்களில் முக்கிய இடம் பெற்றது.

### ரபாயேல்

- மறுமலர்ச்சிக் காலத்தில் இத்தாலியில் வாழ்ந்த சிறந்த சித்திரச் சிற்பியான ரபாயேல் 1483ம் ஆண்டு ஊர்ப்பினோவில் பிறந்தார்.
- இவரது தந்தை ஒரு ஓவியர் ஆவார்.
- புளோரன்ஸ் நகர் சென்று அங்கு கலையகம் ஒன்றைத் திறந்தார்.
- அதன் சாந்தமும், அலங்காரமும் இரசிகர்களைக் கவர்வதாக உள்ளது.
- எதென்சின் பாடசாலை எனும் ஓவியம் முக்கியமானதாகும்.

சிற்பக்கலையில் மைக்கல் ஆஞ்சரோ, டொனெடெலோ என்பவர்கள் குறிப்பிடப்படுபவர்கள்.

### மைக்கல் ஆஞ்சலோ

- இவரது டேவிட் உருவச்சிலை மிகவும் சிறப்பு வாய்ந்த படைப்பாகும்.
- உரோமில் புனித பேதுரு ஆலயத்திலுள்ள இயேசுவையும் மரியாளையும் சித்தரிக்கும் பீட்டா என்ற சிற்பத்தினைச் செய்தார்.

### டொனெடெலோ

- இக் காலத்திலிருந்த மற்றுமொரு சிற்பி டொனெடெலோ என்பவராவார். புளோரன்சில் அமைக்கப்பட்டுள்ள புனித ஜோர்ஜின்

உருவம் அவரது திறமைகளை ஈடுகட்டு வதாக உள்ளது.

- இவரது மற்றைய படைப்பு டேவிட் சிலை ஆகும்.
- மானிட வரலாற்றதில் முக்கிய நூலாசிரியர்கள் பலர் காணப்படுகின்றனர். தாந்தே, பிரான்சிஸ் பெட்ராக், ஜயோவானி பொன்சாக்ஷியோ, நின்கோலாய் மாக்கியவகி தோமஸ் மூர், பிரான்சிஸ் பேகன் என்பவர்கள் உள்ளடங்குகின்றனர்.

## தாந்தே

- இத்தாலியில் பிறந்த தாந்தே கிரேக்க உரோம இலக்கியங்களில் முக்கியத்தை எடுத்து கூறினார்.
- அவரது கருத்து மத்திய காலக் கருத்துக்களுக்கு எதிரானவை.
- சிறந்த கவிஞரான தாந்தே சமயக் கருத்துக்களல்லாத கருத்துக்களை எழுதினார்.
- இலக்கியத்தின் தந்தை என இவர் இத்தாலியில் அறிமுகப் படுத்தப்பட்டார்.

## பிரான்ஸ் பெட்ராக்

- இவர் மானிடவியலின் தந்தை எனப்படுகின்றார்.
- இவர் கிரேக்க உரோம படைப்புக்கள் தொடர்பாக அனேகமானவர்களில் உத்வேகத்தை ஏற்படுத்தியவர்.
- இவர் மனித உள்ளங்களில் எழும் உணர்வுகளை சுதந்திரமாக வெளிப்படுத்தினார்.

## தோமஸ் மூர்

- ஆங்கிலேயரான இவர் எழுதிய நூல்களில் யுடோப்பியா எனும் நூல் பிரசித்தமானது.
- அக்காலத்திலிருந்த அரசியல், பொருளாதார அமைப்புகளை மறு சீரமைத்தலில் தம் கருத்தை வெளியிட்டார்.
- டெசிடேரியல் இராஸ்மஸ்
- டெசிடேரியஸ் இராஸ்மஸ் ஒல்லாந்தில் பிறந்தவராவார்.
- அவர் பாரிஸ், ஒக்ஸ்போட் ஆகிய பல்கலைக்கழகங்களில் கல்வி பயின்றார்.
- கிரேக்க உரோம பண்பாட்டின் தாக்கத்திற்கு உள்ளானார்.
- அனைத்தையும் அறிவுடனும், தர்க்க ரீதியாகவே ஏற்றுக்கொள்ள வேண்டும் என இவர் எடுத்துக் காட்டினார்.
- நவீன கண்டு பிடிப்புக்கள் மறுமலர்ச்சியிலும் காணப்பட்டன. அவையாவன புவி கோளவடிவமானது, தொலைநோக்கு ஈர்ப்புச் சக்தி, கிரகங்களின் செயற்பாடு, அச்சியந்திரம், பூமி சூரியனைச் சுற்றுகிறது, திசையறிகருவி என்பன ஐரோப்பிய மறுமலர்ச்சியில் கண்டு பிடிக்கப்பட்டனவாகும்.

## நிக்கலஸ் கொப்பணிகஸ்

- புவி கோள வடிவானது எனக் கூறியுள்ளார்
- கலிலியோ கலிலி தொலைநோக்கியைக் கண்டுபிடித்தார்.

## ஜொஹன்னஸ் கெப்லர்

- கோள்கள் உள்ளிட்ட ஏனையன அனைத்தும் நீள் வட்டப் பாதையினூடாகச் செல்கின்றது.

## ஐசக் நியூற்றன்

- ஈர்ப்பு சக்தியைக் கண்டு பிடித்தார்.

## லியனாடோ டாவின்சி

- மனித உடலின் செயற்பாடுகளைக் கண்டு பிடித்தார்.

நாடுகாண் பயணிகள் நாடு காண் பயணத்துடன் தொடர்புடைய ஐரோப்பியரின் மறுமலர்ச்சிக்கு துணை புரிந்தார்கள். அவர்களில் சிலர் வாஸ்கொடகாமா, கப்ரால், கொலம்பஸ், அமெரிக்க வெஸ்புஸ், பார்த்தலோமியஸ்டயஸ் என்போராவர்.

## பார்த்தலோமியஸ் டயஸ்

- போர்த்துக்கேயரான பார்த்தலோமியஸ்

டயஸ் 1488ம் ஆண்டு ஆபிரிக்காவின் தென்முனையை அடைந்தார்.

- புயலின் காரணமாக அதற்கு மேல் அவரால் செல்ல முடியவில்லை.
- அந்த இடத்திற்குப் புயல்முனை எனப் பெயரிட்டு மீண்டும் போர்த்துக்கலுக்குச் சென்றார்.
- இது இந்தப் பயணிகள் பெற்ற வெற்றி எனக் கண்டார்.

## வாஸ்கொட காமா

- நான்கு கப்பல்கள் அடங்கிய குழுக்களில் 1498ம் ஆண்டு வாஸ்கொடகாமா லிஸ்பன் துறைமுகத்திலிருந்து புறப்பட்டார்.
- பார்த்தலோமியஸ் டயஸ் சென்ற வழியில் கள்ளிக்கோட்டையை அடைந்தார்.
- இதன் மூலம் போர்த்துக்கேயர் கீழைத்தேய நாடுகளில் குடியேற்றங்களை அமைக்க அடித்தளம் அமைக்கப்பட்டது.
- இந்தியாவுக்கு வந்த வாஸ்தொட காமா நாங்கள் வாசைனத் திரவியங்களையும், கிறிஸ்தவர்களையும் தேடி வந்தோம் என்றார்.
- வர்த்தகத்தைக் கைப்பற்றி கிறிஸ்தவ சமயத்தை பரப்பும் நோக்கம் கொண்டார்.

## கொலம்பஸ்

- ஸ்பானிய இனத்தவரான கொலம்பஸ் அத்திலாந்திக் சமுத்திரத்தைக் கடந்து மேற்கு நோக்கிப் பிரயாணம் மேற்கொண்டார்.
- 1492ம் ஆண்டு கரீபியன் தீவுகளில் இறங்கினார்.
- இடையிலேயே மேற்கொண்ட பயணங்களின் விளைவாக அமெரிக்கா கண்டு பிடிக்கப்பட்டது.
- அமெரிக்கா எனும் கண்டத்தை கண்டு பிடித்த பெருமை கொலம்பசைச் சாரும்.

## அமெரிக்க வெஸ்புஸி

- இத்தாலி நாட்டவரான அமெரிக்கவெஸ்புஸி ஸ்பானிய ஆதரவுடன் நாடு காண் பயணத்தில் இறங்கினார்.
- கொலம்பஸ் சென்ற வழியாக அமெரிக்காவை அவரால் அடையக்கூடியதாக இருந்தது.
- இவருக்கு மதிப்பளிக்கும் பொருட்டு புதிய கண்டத்திற்கு அமெரிக்கா எனப் பெயரிட்டார்.

இம் மறுமலர்ச்சிக்கு உறு துணையாக நிற்பவை இவைகளே ஐரோப்பாவின் மறுமலர்ச்சி உலகில் முக்கிய வரலாற்றைப் பிடித்துள்ளது.

**வி. விஜயபிரசாத்**
தரம் 9A

# பாவேந்தர் பாரதிதாசன்

உலகச் செம்மொழிகளில் உயர்தனிச் சிறப்புடையது நம் தமிழ் மொழி. அமிழ்த னைய தமிழ்மொழியில் காலத்தால் அழியாத கவிதை மழை பொழிந்த கவிஞர் பலர் உள்ளனர். அவர்களுள் புதுவை தந்த புரட்சிக்குயில் பாவேந்தர் பாரதிதாசனும் ஒருவர். தமிழ் எங்கள் உயிருக்கு நேர் என்று முழக்கமிட்ட புரட்சிக் கவிஞர் அவர். அவரே நான் விரும்பும் நற்றமிழ்க் கவிஞராவார்.

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ் நாட்டைப் பெருமைப் படுத்திய பாரதியின் எண்ணங் களைத் தம் இதயத்தில் ஏற்றியவர். அதன் பேறாகத் தம் இயற்பெயரான கனகசபை சுப்புரத்தினம் என்பதை விடுத்துப் பாரதிதாச னாக மாறியவர். பாரதி மீது கொண்ட பாசமே அவர் பாரதிதாசன் எனப் பெயர் சூட்டிக் கொள்ளக் காரணமாகும்.

பாரதிதாசன் தமிழே வடிவானவர். தமிழின் உயர்வுக்குப் பாடியவர். துறைதோறும் தமிழ் வளம் பெற, நலம் பெற வழிகாட்டியவர். தமிழை உயிராய், உணர்வாய் உழைப்பின் விளைவாய்க் கண்டுணர்ந்து கவிதை பாடியவர். பாரதியின் தமிழிலும் எளிய தமிழைக் கவிதைக்குப் பயன்படுத்தியதன் மூலம் சாதாரண மக்களும் கவிதையின் சுவையறிய வழி செய்தவர். மக்கள் தமிழில் மாண்புறு கவிதை பாடியவர்.

தமிழ்ச் சொல்லின் உயர்வினை ஆட்சியில் கொணர்ந்தார். தமிழ் வழிபாடு செய்தார். வழிபடத் தமிழ் அடியார் குழு வினையும் உருவாக்கினார். வாழையடி வாழை எனத் தமிழ்க் கவிஞர் அணி இன்று பெருகுது என்றால் அப்பெருமை பாவேந்தர் பாரதிதாசனுக்கே உரியதாகும். பாவேந்தரின் சொல்லும், சொல்லாட்சியும், நடையும், உத்திகளும், உவமைகளும், உருவகங்களும் அவருக்குப்பின் தோன்றிய கவிஞர்கள் அனைவரையும் பாதித்துள்ளன என்றால் அது மிகையல்ல. பாவேந்தரின் கவிதைப்பயணம் நெடிது உயரியது அவருடைய தமிழ்ப் பணிக்கு ஈடில்லை. பாரதிதாசன் தமிழுக்குப் புதிய வழி காட்டினார், ஒளி கூட்டினார். அவர் காட்டிய வழியில் புத்தொளியும் புத்துணர்வும் பெற்றுப் புதியன படைத்து வளர்கிறது தமிழுலகம். பாரதி நாட்டு விடுதலைக்கு உரமூட்டினார். பாரதிதாசனோ சமூகவிடுதலை, பொருளாதார விடுதலை முதலியவற்றிற்கு அழுத்தம் கொடுத்துப் பாடினார். அவர் படைத்த கவிதைகள் அழியா அழகுடையன. அழகின் சிரிப்பு, குடும்ப விளக்கு, பாண்டியன் பரிசு, சேரதாண்டவம், இளைஞர் இலக்கியம், பிசிராந்தையார், தேனருவி, எதிர்பாராத முத்தம், குறிஞ்சித் திரட்டு, பாரதிதாசன் கவிதைகள் ஆதியாம் நூல்கள் அவர்தம் புகழ்பரப்பும் படைப்புக்கள்.

•

பாவேந்தர் படைப்புக்கள் அனைத்தை யும் நாட்டுடைமை ஆக்கியுள்ளது தமிழக அரசு. இதன் மூலம் பட்டி தொட்டி எங்கும் பாவேந்தரின் கவிதைகள் பரவி வருகின்றது. பதிப்பகங்கள் பல அவரது படைப்புகளைப் போட்டி போட்டுக் கொண்டு வெளியிட்டு வருகின்றன. திரைப்படங்களிலும் அவரது பாடல்கள் பல இடம்பெற்றுள்ளன. கவிதை உலகில் மட்டுமன்றித் திரையுலகிலும் அவர் பெயர் பொறித்துள்ளார்கள். பாவேந்தர் தமிழ் வளர்ச்சியே கருத்தாகக் கொண்டவர். தமிழ் மொழியின் வளர்ச்சிக்க நாம் செய்ய வேண்டிய பணிகளைக் குறிப்பிடும் போது தமிழில் நூல்கள் பல எழுதப்பட வேண்டும். எளிய நடையில் அவை அமைதல் வேண்டும்.... புதிய சிந்தனைகள் தமிழில் உருவாக வேண்டும். புதிய தமிழ் சொற்களை உருவாக்கவும் முன்வரவேண்டும் என்கிறார்.

இவையே கவிஞரின் இலட்சிய வேட்கையாக வும் மிளிர்கின்றது.

- எளிய நடையில் தமிழ் நூல் எழுதிடவும் வேண்டும்.
- இலக்கண நூல் புதிதாக இயற்றுதல் வேண்டும்.
- வெளியுலகில் சிந்தனையில் புதிது புதிதாக விளைந்துள்ள எவற்றினுக்கும் பெயர்களெ லாம் கண்டு.
- தெளிவுறுத்தும் படங்களொடு சுவடியெல் லாம் செய்து.
- செந்தமிழைச் செந்தமிழை செய்வது போன்றும்.
- எளிமையினால் ஒரு தமிழன் படிப்பில்லை யென்றால்
- இங்குள்ள எல்லோரும் நாணிடவும் வேண்டும்.

எனும் கவிதை நமது கடமையினை நன்கு வலியுறுத்துகின்றது. ஒரு தமிழனுக்கு படிப்பில்லாமல் போகுமானால் அதற்காக அனைத்து தமிழர்களும் வெட்கி தலை குனிய வேண்டும் என நமக்கு இடித்துரைக்கும் கவிஞரின் கூற்று சிந்தனைக்குரியது. மேலும் தமிழ் வளர்ச்சிக்கான செயல்றிட்டமொன்றை றைக் கொடுத்துள்ள கவிஞர் இச்செயல் திட்டத்தின் இறுதியில் அனைத்து தமிழர்களும் கல்வியறிவு படைத்தவர்களாகத் திகழ வேண்டும் என விரும்புவதையும் காண முடிகின்றது.

பத்திரிகைகளின் சிறப்பினை எடுத் துக்கூற வந்த கவிஞர் அவற்றின் கடமையினை யும் நன்கு உணர்த்துவதைப் பின்வரும் கவிதையில் காணலாம்.

*அறிஞர் தம் இனிய ஓடை*
*ஆழநீர் தன்னை மொண்டு*
*செறிதரும் மக்கள் எண்ணம்*
*செழித்திட ஊற்றி ஊற்றிக்*
*குறுகிய செயல்கள் தீர்த்துக்*
*குவலயம் ஓங்கச் செய்வாய்*
*நறுமண இதழ்ப் பெண்ணே உன்*
*நலம் காணார் ஞாலம் காணார்.*

பத்திரிகையை ஒரு பெண்ணுக்கு உவமித்துச் சொல்லுகின்ற கவிஞரின் கவித்திறன் போற்றுதற்குரியது.

கவிஞரின் படைப்பாற்றலை, படைப் புக் கூறுகளை, படைப்பு நுட்பங்களை நாம் கவிதைகள் தமிழர் தம் இதயங்கள் எங்கும் அவர்தம் இல்லங்கள் எங்கும் இடம்பெற வேண்டும்.

*ஆதி மனிதன் தமிழன்தான்*
*அவன் மொழிந்ததும் செந்தமிழ்த்தேன்*
*முதறிஞர் ஒழுக்க நெறிகள்*
*முதலிற் கண்டதும் தமிழகம் தான்*
*காதல் வாழ்வும் புகழ் வாழ்வும்*
*கட்டியதும் தமிழ் நான்மறைதான்*
*ஓதும் அந்தத் தமிழ் நான்மறை*
*உலகம் போற்றும் முத்தமிழ்தான்*

என்று முழங்கிய பாவேந்தரின் பெயர் நற்றமிழ் உள்ளவரை நானிலமெங்கும் நின்று நிலைக்கும் என்பது திண்ணம். கவிஞரின் வழி நின்று கன்னித் தமிழ் வளர தமிழினம் தலைநிமிர உழைத்திடல் நமது தலையாய கடனாகும்.

பாவேந்தர் நாமம் வாழ்க! தமிழ் வாழ்க!

**ச.சாருஜா**
தரம் 10B

# மக்கள் அரசியல் செயற்பாடுகளிலே ஈடுபடும் வழிமுறைகள்

அரசியல் என்பது அரசு எனும் சொல்லில் இருந்து தோற்றம் பெற்றசொல்லாகும். உலகிலே மனிதர்களாகப்பிறந்த அனைவரும் தெரிந்தோ தெரியாமலே அரசியல் செயற் பாட்டில் பங்குபற்றுகின்றனர். மனிதர்கள் செய்யும் எந்தவொரு செயற்பாட்டிலும் அரசியல் தொடர்புபடுவதாகவே இருக்கும். பொருட்கள் கொள்வனவு செய்வதில் இருந்து போதனை செய்வது வரை அரசியல் தாக்கம் புரிகின்றது. இந்த வகையில் மக்கள் அரசியல் செயற்பாட்டில் பங்குபற்றுவதற்கு பல்வேறு வழிமுறைகள் உள்ளன. அவைபற்றி பின்வரு மாறு நோக்கலாம்.

மக்கள் நேரடி ஜனநாயக வழிமுறைகள், அரசியல் சமுதாய மயப்படுத்தல், நல்லாட்சி, சிவில்சமூகம், தேசம், தேசியம், தேசியவாதம், தேர்தல்கள், அரசியல் உயர்குழாம், அரசியல் வன்முறை, அரசியல் கலாசாரம், அமுக்கக் குழுக்கள், ஆர்வக்குழுக்கள், அரசியல் கட்சிகள், பொதுசன அபிப்பிராயம் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். இவை பற்றி பின்வருமாறு விரிவாக நோக்கமுடியும்.

மக்கள் அரசியல் செயற்பாடுகளில் நேரடியாக பங்குபற்றுவதற்கான வாய்ப்புக் களே நேரடி ஜனநாயக வழிமுறைகளாகும். இந்த வகையிலே மக்கள் தீர்ப்பு, ஆரம்பித்து வைத்தல், திருப்பி அழைத்தல், மக்கள் மன்றம் என்பன நேரடி ஜனநாயக வழிமுறைகள் ஆகும். சட்டம் தொடர்பான விடயங்களுக் காகவும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களுக்குத் தீர்வினைப் பெற்றுக்கொள் வதற்காகவும், மக்கள் தீர்ப்பு பயன்படுகின்றது. இந்த விடயங்களை மேற்கொள்ளுவதற்கு மக்களுடைய நேரடியாக விருப்பங்களை பெற்றுக்கொள்ளுகின்ற வழிமுறையே மக்கள் தீர்ப்பு ஆகும். இலங்கை, அமெரிக்கா, சுவிஸ்லாந்து, பிரான்ஸ், கனடா, நோர்வே ஆகிய நாடுகளிலே இம்முறை நடைமுறை யிலுள்ள சட்டங்களை ஆக்குதல், திருத்தல், அரசியல் அமைப்புத்திருத்தங்களை ஆரம்பித்து வைத்தல் ஆகியவிடயங்கள் சார்ந்து மக்களின் அதிகாரத்திற்கு வாய்ப் பளிக்கின்ற வழிமுறை ஆரம்பித்து வைத்த லாகும். மீளழைத்தலென்பது மக்கள் தாம் தெரிவு செய்த அரசியல் தலைவர்களையும் அரசாங்க அதிகாரிகளையும் அவர்கள் தவறு செய்கின்ற போது அவர்களை பதவியிலிருந்து விலக்கிவிடுகின்ற முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் தொடர்பாக தமது கருத்துக்களை வெளிப்படுத்த வாய்ப்பு வழங்குவதன் மூலம் அவர்களை அரசியல் செயற்பாட்டில் பங்கு பெற வைப்பதே இந்த வழிமுறை ஆகும். இந்த வழிமுறை மூலம் மக்களால் வெளிப்படுத்தப் படுகின்ற அபிப்பிராயங்கள் கவனத்தில் எடுக்கப்பட்டுஅதனடிப்படையிலே அரசியல் முடிவுகள் பெறப்படுகின்றன. மக்கள் அமைப்பு முறைமைகளை நிறுவி அந்த அமைப்பு முறைமைகளுக்கடாக தமது அரசியல் எதிர்ப்புக்களையும், அபிப்பிராயங்களையும் அரசியலரங்கிலே முன் வைப்பதற்க்கான ஒரு வழி முறையே மக்கள் மன்றமாகும். அத்துடன் மக்களை அரசியலுடன் நெருங்க வைக்கும் செயற்பாடே அரசியல் சமூதாயப்படுத்த லாகும். கிறீன் ஸ்ரீன் எனும் அறிஞர் "அரசியல் ரீதியாக பொருந்தும் மனித மனப்பாங்குகள் நடததைப் பாங்குகள் என்பவற்றை ஒழுங்குபடுத்துவதில் தாக்கம் செலுத்தும் சகல வகையான அரசியல் படிப்பினைகளும் அரசியல் சமுதாயப்படுத் தலாகும்" எனக்குறிப்பிடுகின்றார். அரசியல் சமுதாயப்படுத்தலை தீர்மானிக்கும் காரணி கள் கல்வி நிறுவனங்கள், குடும்பம், ஊடகங்கள் என்பனவாகும். ஜனநாயக அரசாங்கமுறையை அர்த்தமுடையதாக்கிறது மேலும் ஆட்சியாளர்கள் தம் மனம் போன போக்கில் ஆட்சி நடாத்துவதைத் தடுப்பதற் காகவும் சமுதாயத்தின் நலன்களை அரசியல் தலைமைத்துவத்திற் கூடாக நிறைவேற்றவும் அரசியல் சமுதாயப்படுத்தல் அவசியம் ஆகின்றது

1980களில் நல்லாட்சி U.N.D.P நிறுவனத்தினால் முன்வைக்கப்பட்ட ஒரு

எண்ணக்கருவாகும். ௩ம் மண்டல நாடுகளின் பொருளாதார அபிவிருத்திக்காக U.N.D.P நிறுவனம் கலந்துரையாடல் மேற்கொண்டு அபிவிருத்திக்கான தீர்வுகளையும் முன்வைத்தது. ஆரம்ப கிரேக்க சிந்தனையாளரனான பிளாட்டோ தனது அரசாங்கம் பற்றிய வகைப் படுத்தலின் போது முன் வைத்த இலட்சிய அரசாங்கம் நல்லாட்சி என்ற எண்ணக்கருவையே அடிப்படையாகக் கொண்டுள்ளது. எனவே நல்லாட்சி பற்றி எண்ணக்கரு கிரேக்காலத்துக்குரிய பழமைவாய்ந்ததாகும். நாட்டில் நல்லாட்சி நடைபெறும் போது மக்கள் அரசியல் செயற்பாட்டிலே தடையின்றி அமைதியாக பங்குபற்ற முடியும்.

நிறுவனம் கலந்துரையாடல் மேற்கொண்டு அபிவிருத்திக்கான தீர்வுகளையும் முன்வைத்து. ஆரம்ப கிரேக்க சிந்தனையாளரனான பிளாட்டோ தனது அரசாங்கம் பற்றிய வகைப்படுத்தலின்போது முன்வைத்த இரட்சிய அரசாங்கம் நல்லாட்சி என்ற எண்ணக்கருவையே அடிப்படையாகக் கொண்டுள்ளது. எனவே நல்லாட்சி பற்றி எண்ணக்கரு கிரேக்காலத்துக்குரிய பழமைவாய்ந்ததாகும். நாட்டில் நல்லாட்சி நடைபெறும் போது மக்கள் அரசியல் செயற்பாட்டிலே தடையின்றி அமைதியாக பங்குபற்ற முடியும்.

அரசியல் சமுதாயத்திலே காணப்படுகின்ற குடும்பம், சந்தை ஸ்தாபனங்கள், அரசாங்கம் ஆகிய ௩ அமைப்புக்கள் தவிர்ந்த சமூகத்தில் செயற்படும் ஏனைய அனைத்து ஸ்தாபனங்களின் கூட்டுமொத்தமே சிவில் சமூகம் என வரையறை செய்யப்படுகின்றது. இவை சிவில் சமூகத்தின் பொது நோக்கங்களைத் தம்மிடையே பங்கீடு செய்து பரஸ்பரம், புரிந்துணர்வுடன் கூட்டாகச் செயற்பட்டு அதிகாரப் பிரயோகமின்றி தமது இலக்குகளை அடைய முயற்சிக்கின்ற ஸ்தாபனங்களாகும். கூட்டுச்செயற்பாடு, அதிகாரப்பிரயோகமின்மை, தெளிவான அடையாளம், ஆள்புலத்தினைக் கொண்டிருக்காமை என்பனவே சிவில் சமூகத்தின் பிரதான பண்புகளாகும்.

ஒரு வரையறுக்கப்பட்ட நிலப் பிரதேசத்திலே இன, மத, மொழி, கலாசாரம், அரசியலுணர்வு போன்ற பண்புகளையும் தேசியகொடி, தேசியகீதம் நமக்குரித்தான வரலாறு என்பவற்றையும் கொண்ட மக்கள் ஒன்றுசேர்ந்து வாழ்வார்களாயின் அதனைத் தேசமென வரையறை செய்யலாம். இத் தேசத்தின் நாட்டுமக்கள் மத்தியிலே இன, மத, மொழி, பிரதேச வேறுபாடுகளுக்கப்பால் ஒற்றுமை உணர்வினை தேசியம் கட்டியெழுப்புகின்றது. அடிமைப்படுத்துதல் என்பதற்கு எதிராக ஏற்படும். அரசியல் முனைப்பே தேசியவாதம் எனப்படும்.அதாவது குறிப்பிட்ட பிரதேசத்திலோ அல்லது தேசத்திலோ வாழ்கின்ற மக்கள் தமது அரசியல் கருத்தை அரசியல் சுதந்திரத்தினை நிலைநிறுத்துவதற்கான முனைப்பே தேசியவாதம் ஆகும். இதன் மூலம் நாடுகள் தம்மை அடிமை நிலையிலிருந்து விடுவிக்கமுடியும்.

பிரதிநிதித்துவ ஆட்சி முறைமை அறிமுகப் படுத்தப்பட்டபோது அதன் தவிர்க்க முடியாத தேவை காரணமாக செய்யப்பட்ட ஏற்பாடே தேர்தலாகும். ஆரம்பகாலங்களிலே அரசியலிலே தேர்தல் என்ற நடைமுறை காணப்படவில்லை. ஏனெனில் ஆரம்ப காலங்களில் மக்கள் அனைவரும் அரசியலிலே நேரடியாக பங்குபற்றுகின்ற நிலை காணப்பட்டமையே காரணமாகும் ஆகும். அரசியலுரிமையான வாக்குரிமை மூலம் ஒரு அரசாங்கத்தை தெரிவு செய்ய நடைபெறும் வாக்குக்கணிப்பே தேர்தல் ஏனப்படும். தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படுகின்ற பிரதிநிதிகளே அரசபங்கத்தை அமைத்து மக்களை ஆட்சியில் பங்கெடுக்க வைக்கின்றனர். ஜனநாயகத்தைப் பலப்படுத்தவும், புதிதாக அரசியல் கட்சிகள் தோற்றம் பெறவும் தேர்தல் உதவுகிறது தேர்தலே மக்கள் அரசியல் செயற்பாட்டில் ஈடுபடுவதற்கான முக்கிய வழிமுறை ஆகும்.

மக்களுக்கு அரசியல் ரீதியாகத் தலைமைதாங்குகின்ற மக்கள் குழுவே அரசியல் உயர்குழாம் ஆகும். ஓர் அரசியல் சமுதாயத்திலே வாழுகிள்ற மக்கள் அனைவரும் சமமான சமூக அந்தஸ்தினைப்

பெறுவதில்லை. ஓவ்வொரு சமுதாயத்திலும் குறிப்பிட்ட சிலரே அச்சமுதாயத்தின் அரசியல் தலைவர்களாக செயற்படுகின்றனர். இவ்வாறு செயற்படும் தலைவர்களே அரசியல் உயர் குழாமினர். என வரையறை செய்யப் படுகின்றனர். அரசியல் செயற்பாடுகளிலே இம்முறை மூலம் பங்குபற்ற முடியும் மற்றும் அரசியல் செயற்பாட்டிலே பங்குபற்றும் மற்றொரு வழிமுறை அரசியல் வன்முறை யாகும். மனிதனிடம் இயல்பாக இருக்கின்ற ஒரு உணர்வு வன்முறை ஆகும். இதனால் சர்வசாதாரணமாக சமூகவாழ்வின் அனைத்து விடயங்களிலும் வன்முறை செயற்பாடுகள் வெளிப்படுத்தப்படுகின்றன. வன்முறை அரசியலை உலகிற்கு அறிமுகப்படுத்தியவர் கால்மார்க்ஸ் ஆவார்.

மக்கள் அரசியல் கலாசாரத்திற் கூடாகவும் அரசியல் செயற்பாடுகளில் பங்குபற்றுகின்றனர் அரசியல் ரீதியாக ஒமுங்கமைந்திருக்கின்ற சமூகத்திலே அரசியல் பிராணிகளின் அரசியலொமுக் கங்கள் விழுமியங்கள் அரசியல் கலாசாரம் எனப்படும்.அரசியல் முறைமை மீது மக்கள் கொண்டிருக்கின்ற நம்பிக்கை, புரிந்துணர்வு, அரசாங்கத்தின் செயற்பாடுகளை மதிப்பீடு செய்யும் திறன் என்பனவே .அரசியல கலாசாரத்தை நிர்ணயிக்கின்ற காரணிகள் என "சிட்னி வெபர்" குறிப்பிடுகின்றார்.

மக்கள் அரசியல் வழிமுறைகளில் பங்கெடுக்கும் முக்கிய வழிமுறைகளில் பங்கெடுக்கும் அமுக்கக் குழு ஒன்றாகும். அரசியலதிகாரத்தை கைப்பற்றுவதை நோக்கமாக கொள்ளாது அதிகாரத்தில் இருப்பவர்கள் மீது அழுத்தங்களை பிரயோ கிப்பதன் மூலம் நமது தனிப்பட்ட நலன்களை அடைய முயற்சிக்கின்ற மக்கள் அமைப்புக் களே அமுக்கக் குழுக்களாகும். அமுக்கக் குழுக்கள் ஜனநாயகத்தின் பாதுகாவல னாகவும் தொழிற்படுகின்றது. அதாவது ஜனநாயகம் மக்களாட்சி என்பதை அர்த்தமுடைய தாக்குவதில் அமுக்கக்குழுக் களின் பணி முக்கியமானதாக அமைகின்றது. அமுக்கக்குழுக்கள் எந்தளவிற்கு செயற் படுகின்றனவோ அந்தளவிற்கு ஜனநாயகமும் பலமடையும் அமுக்கக் குழுக்களுக்கு எடுத்துக் காட்டாக தொழிற்சங்க அமைப்பபுக்கள், ஊடகங்கள், சமூகநலன்புரி ஸ்தாபனங்கள், என்பவற்றைக் குறிப்பிடலாம்.

அரசியல் சமதாயமொன்றிலே மக்களது அரசியல் ஆர்வத்தினை ஊக்குவித்து அவர் களது அரசியல் பங்கேற்பினை உயர்த்து வதற்காக செயற்படுகின்ற ஸ்தாபனங்கள் ஆர்வக்குழுக்கள் என வரையறை செய்யப் படுகின்றன. மக்களுக்கு தமக்குள்ள அரசிய லுரிமைகள் பற்றி அறிவூட்டல், அரசியல் செயற்பாடுகளிலே பங்குபற்ற ஆர்வமாக இருப்பவர்களுக்கு ஊக்குவிப்புக்களையும் உதவிகளையும் வழங்கல் அரசியல் பயிற்சிப்பட்டறை, கருத்தரங்குகளை நடாத் தல், தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் போன்ற பணிகளின் மூலம் மக்களுக்கு அரசியல் ஆர்வத்தைத் தூண்ட இவ்வமைப்புக்கள் செயற்படுகின்றன.

மக்கள் அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான முக்கிய வழிமுறை அரசியல் கட்சிகளாகும். அரசியல் அதிகாரத்தை கைப்பற்றுகின்ற நோக்கோடு செயற்படும் அமைப்புக்களே இவையாகும். மக்களுக்கு அரசியல் ரீதியாகத் தலைமைதாங்கி அரசியல் வழிகாட்டுதல்களைச் செய்கின்ற ஸ்தாபனமாகவும் அரசியல்கட்சி மிளிர்கின்றது பொதுசன அபிப்பிராயத்தை ஒன்று சேர்த்தல், வாக்காளர்களுக்கு அரசியல் ரீதியாக அறிவூட்டல், நல்லாட்சி இடம்பெறுவதனை உறுதிப்படுத்தல், மனித உரிமைகளைப் பாதுகாத்தல் போன்ற பணிகளை அரசியல் கட்சிகள் முன்னெடுக்கின்றன. மேற்குறிப்பிட்ட வழிமுறைகளனைத்தினூடாகவும் மக்கள் அரசியல் செயற்பாட்டில் ஈடுபடுகின்றனர். அவர்கள் விரும்பியோ,விரும்பாமலோ இவ்வழிமுறைகளின் மூலம் அரசியல் செயற்பாடுகளிலீடுபடுவது கண்கூடு. மக்கள் அரசியல் செயற்பாடுகளிலே ஈடுபடுவதென்பது அரசியலிலே முக்கியமான ஒரு அம்சமாக விளங்குகின்றது.

ர. ரஜினா
Arts A/L (2012)



2011 புதிய செயற்பாட்டறை கட்டடத்திறப்புவிழாவின்போது
விருந்தினர்கள் அழைத்துவரப்படுகின்றனர்.



2009 பவளவிழாவின்போது விருந்தினர்கள் அழைத்துவரப்படுகின்றனர்.

# முயற்சியாண்மை
# (Entrepreneurship)

## முயற்சியாண்மையும் முயற்சியாளரும்

- மனிதத் தேவைகள் விருப்பங்களை திருப்திப்படுத்துவதற்காக புதிய கண்டு பிடிப்புக்களுடாக புதிய வணிக பொருளா தார வாய்ப்புக்களை இனங்கண்டு ஆபத்துக் களையும், நிச்சயமற்ற தன்மைகளையும் எதிர் நோக்கி உற்பத்திக்கான பல்வேறு வளங்களை வினைத்திறனாகப் பயன் படுத்தி நடைமுறையிலுள்ள பொருளாதார முறைமைகளினை மாற்றியமைப்பதன் மூலம் நவீன உற்பத்திகளை அறிமுகப் படுத்தி தேசிய உற்பத்தியின் பெறுமதியை அதிகரித்தல் முயற்சியாண்மை எனப்படும்.


- வியாபார சந்தர்ப்ப சூழ்நிலைகளை இனங்கண்டு நிச்சயமற்ற தன்மைகளையும் இடர்களையும் எதிர்கொண்டு வளங்களை வினைத்திறனாகப் பயன்படுத்தி புதியன புனைதல் மூலம் மாற்றங்களை கொண்டு செயற்படும் நபர் முயற்சியாளர் எனப் படுவதார்.

**முகாமையாளர்:**

நிறுவனக் குறிக்கோளை உச்சளவு அடைந்து கொள்ள வளங்கள் செயற்றினாகப் பயன்படுத்தி வணிகத்தை செயறபடுத்துபவர் முகாமையாளர் ஆவார்.

முயற்சியாண்மை தொடர்பான அடிப்படை எண்ணக்கருக்கள்

1. முயற்சியாளர் (Enterpreneur)
2. தொழில் முயற்சி (Enterprise)
3. முயற்சியாண்மை (Emterpreneurship)




## முயற்சியாண்மையின் வகைகள்

a) நோக்கம்
   - இலாபநோக்கம்
   - இலாபநோக்கங்கள்

b) உடைமை
   - தனியார் உடைமை
   - பொது உடைமை

c) அளவு
   - சிற்றளவு
   - நடுத்தர அளவு
   - பேரளவு

d) சந்தை
   - உள்நாட்டுச் சந்தை
   - வெளிநாட்டுச் சந்தை

**அமைப்பு வகை**

| | |
|---|---|
| தனி வியாபாரம் | – தனி வியாபாரி |
| பங்குடமை | – பங்காளர் |
| கம்பனி | – பங்குதாரர் |
| கூட்டுறவு | – அங்கத்தவர் |
| கூட்டுத்தாபனம் | – அரசு |
| உள்ளுராட்சிச் சபை | – அரசு |
| திணைக்களம் | – அரசு |

**அண்மைக்காலங்களில் முயற்சியாண்மை யின் முக்கியத்துவம் உயர்ந்துள்ளமைக் கான காரணம்**

1. உலகமயமாக்கல் காரணமாக நவீன நுட்பப் பயன்பாட்டினால் வணிக நடவ டிக்கை மாற்றமடைதல்.
2. வேலை வாய்ப்புக்களை உருவாக்கல்.
3. மக்களின் வாழ்க்கை முறையை உயர்த் துதல்
4. நாட்டின்பொருளாதாரத்தை உயர்த்துதல்
5. அருமையான மூல வளங்களை சிறந்த முறையில் பயன்படுத்த பல்வேறு முறைகள் அவசியம்.

**எண்ணங்களுக்கும் வாய்ப்புகளுக்கும் இடையிலான தொடர்பு**

- சந்தையில் காணப்படும் தேவை, விருப்பம் காரணமாக வாய்ப்பு ஏற்படுகின்றது. இவ்வாய்ப்புக்குத் தீர்வாக எண்ணங்கள் காணப்படும்.

பிரச்சினை
↓
வாய்ப்பு
↓
எண்ணம்

- சந்தையில் தேவை, விருப்பம் காணப்படுகின்றது. இதனை அடிப்படையாகக் கொண்டு முயற்சியாளருக்கு எண்ணங்கள் உருவாகின்றது. இதன் ஊடாக வியாபார வாய்படை உருவாக்கிக் கொள்ளலாம்.

பிரச்சினை
↓
வாய்ப்பு
↓
எண்ணம்

**முயற்சியாளரின் சிறந்த பண்புகள்.**

1. கனவு காண்பவர் (Dreamers)
2. செயற்படுத்துபவர் (Doers)
3. தீர்மானம் எடுக்கும்ஆற்றல் (Decisiveness)
4. தகவல் செயற்பாடு (Details)
5. விதம் (Destin)
6. கடின உழைப்பு (Hard work)
7. நெகிழும் பண்பு (Flexible)

**முயற்சியாளர் ஒருவருக்கு இருக்க வேண்டிய முகாமைத்துவப் பண்பு** (10D)

1. பங்கீடு (Distribute)
2. பணம் (Dollars)
3. விதி தெய்வச் செயல் (Destin)
4. விபரம் (Details)
5. பற்றும் ஈடுபாடும் (Devotion)
6. அர்ப்பணிப்பு (Dedication)
7. திடசங்கற்பம் (Determination)
8. துரித செயற்பாடு (Doers)
9. தீர்மானம் எடுக்கும் ஆற்றல் Decisiveness)
10. கனவு (Dream)

**முயற்சியாண்மைச் செயன்முறையின் படிமுறைகள்**

1. புத்தாக்கம்
2. செயற்பாட்டு அவசியமான பின்னணி
3. செயற்படுத்தல்
4. வளர்ச்சி

**முயற்சியாண்மையும் தரவிருத்தியும்**

01. முயற்சியாண்மைத் திறன் விருத்தியில் செல்வாக்குச் செலுத்தும் பிரதான சக்திகள்.

**சந்தர்ப்பம் :** வணிக சந்தர்ப்பங்கள் பொருட்கள் சேவைகள் தொடர்பானவை. இப்பொருட்கள் சேவைகள் மூலம் வாடிக்கையாளர் தேவை பூர்த்தி செய்யப்பட வேண்டும். இச் சந்தர்ப்பம் பின்வரும் பண்புகளைக் கொண்டு காணப்பட வேண்டும்.

1. கவர்ச்சித் தன்மை
2. நெடுவாழ்வு
3. காலத்திற்குரிய தன்மை
4. செயற்படுத்தக்கூடியது

**முகாமைக்குழு:** முயற்சியாண்மை திறன் போல முயற்சியாண்மைக்கு முகாமை அறிவு காணப்பட வேண்டும். முயற்சியாளர் ஒருவருக்கு பின்வரும் முகாமைத்துவ அறிவு காணப்பட வேண்டும்.

1. நிதி முகாமைத்துவம்
2. உபாய முகாமைத்துவம்
3. வள முகாமைத்துவம்
4. மனித வள முகாமைத்துவம்

**வளம்:** முயற்சியாண்மையின் வெற்றிக்குத் தேவையான வளங்களை கொண்டிருத்தல் முக்கிய அம்சமாகும். வளங்களை உச்சமாகப்

பயன்படுத்தி பயன்களை பெற்றுக் கொள்ளப் பின்வரும் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

1. வளங்களைச் சிக்கனமாகப்பயன்படுத்துதல்
2. கிரயத்தைக் குறைத்தல்
3. முறையான வணிகத் திட்டத்தைக் கொண்டிருத்தல்

முயற்சியாளராக வருவதற்கு ஒருவரைத் தூண்டும் ஊக்கலின் மீது செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்

1. தனது இலட்சியத்தை அடைய வேண்டும் என்ற தனிப்பட்ட விருப்பு
2. தனது வணிகத்தின் உரிமையாளராக தானே இருக்கவேண்டும் என்ற விருப்பு.
3. பல்வேறுபட்ட ஆச்சரியமூட்டும் பணிகளில் ஈடுபட வேண்டும் என்ற விருப்பு
4. தன்னுடைய எண்ணப்படி செயல் புரிவதற்கான சுதந்திரம்.

முயற்சியாண்மை வெற்றிக்குத் தேவையான திறன்கள்

1. அமைப்பாளர் (Founder)
2. குறித்துரைத்தல் (Focused)
3. விரைவு (Fast)
4. நெகிழ்வுத்தன்மை (Flexible)
5. கிடையான (Flat)
6. சிக்கனம் (Frugal)
7. நட்பு (Friendly)
8. மகிழ்ச்சி (Fun)
9. எப்போதும் புத்தாக்கத்தில் ஈடுபடல் (Forever innovating)

**உற்பத்திச் செயற்பாடு**

01. உற்பத்திச் செயற்பாட்டில் உற்பத்தி சேவை உள்ளடக்கங்களை

முயற்சியாண்மையின் P 6 எவை

1. உற்பத்தி செய்தல்( Production)
2. ஊழியர்கள் (People)
3. விளைதிறன் (Productivity)
4. விலை (Price)
5. மேம்படுத்தல் (Promotion)
6. இலாபம் (Profit)

02. முயற்சியாண்மையின் தலைமைத்துவப் பண்புகள்

1. ஜனநாயக தலைமைத்துவம்
2. சர்வாதிகார தலைமைத்துவம்
3. சமத்துவ தலைமைத்துவம்
4. தடையில்லாத தலைமைத்துவம்
5. தந்தை அடிப்படையான தலைமைத்துவம்

**முயற்சியாண்மையின் பிணக்கு முகாமைத்துவம்**

இது ஐந்து வகைப்படும். அவையாவன

1. சுறாத்தன்மை முறை (The Shark) : முயற்சியாளர் தனது அதிகாரத்தை பாவித்து பிணக்கைத் தீர்த்தல்.
2. ஆமை முறை (The Turtle) பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்காது அதிலிருந்து நழுவிக் கொள்வதன் மூலம் தீர்வு காணுதல்.
3. சமாதானப்படுத்தல் முறை (The Teddy Bear) பிரச்சனைக்குரிய நபர்களிடம் தொடர்பை ஏற்படுத்தி சுமூகமாகத் தீர்வு காணல்.
4. நரி முறை (The Fox) பிணக்குகளுடன் தொடர்புடைய நபர்களிடம் தொடர்பை ஏற்படுத்தி சுமுகமான தீர்வு காணல்
5. ஆந்தை முறை (The Owl)பிரச்சனைக் குரிய இரு தரப்பினரதும் தேவைகளையும் நிறைவு செய்யும் அடிப்படையில் பிணக்குகளுக்கு தீர்வு காணும் முறை.

**அக முயற்சியாண்மை**

- மாற்றமடையும் வணிகச் சூழலுக்கு ஏற்ப செயற்படவும் புதிய சந்தர்ப்பங்களை உருவாக்கவும் விளைதிறன் வினைத்திறனை அதிகரித்த போட்டிச் சூழலில் சிறப்பாக செயற்படுத்துவதற்கு நிறுவனத்திற்குள் மேற்கொள்ளும் முயற்சியாண்மை அக முயற்சியாண்மை எனப்படும்.

- முயற்சியாண்மை ஒன்று வெற்றிகரமாக அமைய இன்றியமையாத காரணிகள்

1. வாய்ப்புக்கள்
2. வளங்கள்
3. சிறந்த முகாமை
4. அடையக் கூடிய எண்ணம்

- முயற்சியாண்மையின் சமூக பொாருளாதார நன்மைகள்

1. பொருளாதார வளர்ச்சி அபிவிருத்தி வேகமாக அதிகரித்தல்
2. உற்பத்தியின் அளவு அதிகரித்து தேசிய உற்பத்தி அதிகரிக்கும்
3. வேலை வாய்ப்பு அதிகரிக்கும்
4. நவீன தொழில் நுட்பங்கள் உருவாகும்

**முயற்சியாண்மைக்கான தடைகள்**

1. முகாமைத்துவப் பிரச்சினை
2. சந்தைப்படுத்தல் பிரச்சினை
3. மூலதனப் பற்றாக்குறை
4. சட்டக் கட்டுப்பாடு

**பெண் முயற்சியாண்மை**

இன்று முயற்சியாண்மை செயற்பாடுகளில் பெண்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்க அளவில் வளர்ச்சி கண்டு வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. முயற்சியாளராக செயற்பட்டு வருவதற்கான காரணம்.

1. பெண்களின் கல்வி அறிவு வளர்ச்சி.
2. குடும்பங்களின் அதிகரித்த பொருளாதாரத் தேவை.
3. சமூக மனப்பாங்கு மாற்றம்.

**பெண் முயற்சியாண்மையின் அனுகூலம்**

1. குடும்பங்களின் வருமானம் உயர்வடைதல்
2. பெண்களின் சமூக மயமாக்கம் அதிகரித்தல்.
3. பெண்கள் தங்கி வாழும் தன்மை குறைவடைதல்.

**பெண் முயற்சியாண்மை அதிகரிப்பதன் பாதகமான விளைவு**

1. குடும்பக் கடமைகள் புறக்கணிக்கப் படலாம்
2. கலாசார பாதிப்புக்கள்.
3. சமய சம்பிரதாயங்களை மீற வேண்டிய நிலை.
4. குடும்ப உறவுகளில் விரிசல் ஏற்படல.

**யோ. சங்கீதா**
2012, வர்த்தகம்.

---

*" You can discover more about a person in an hour of play than in a years of conversation "*

- Plato

*" winning is n't every thing . It's the only things "*

- Henry Sanders

*A teacher affects eternity;*
*be can never tell*
*where his influence stops*

- Henry Brooks Adams

# பெண்ணின் பெருமை

"பெண்ணிற்குள் ஞானத்தை வைத்தான் புவி பேணி வளர்த்திடும் ஈசன்" என்றான் ஒரு கவிஞன் இந்த ஒரு கூற்றிலிருந்தே தெரிகின்றது அல்லவா பெண்ணின் பெருமை "மங்கையராய்ப் பிறந்திட நல்ல மாதவம் செய்திட வேண்டும்" என்றான் பாரதி ஆம் அவன் மட்டுமல்ல இலக்கியங்களை எழுதிய பல்வேறு கவிஞர்களும் பெண்களின் பெருமைகளை வெவ்வேறு விதத்தில் எடுத்துக்காட்டி உள்ளனர். பெண் என்ற வார்த்தையை கேட்கும் போதே அடக்கம். பொறுமை, திறமை, தாய்மை, மென்மை என்ற உணர்வுகளே நம் மனக்கண் முன்னே தோன்றுகின்றன சில தொழில்களுக்கு குறிப்பாக பெண்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுகிறது. தாதியத் தொழில், ஆசிரியத்தொழில் போன்றவை இதற்கு உதாரணங்களாகும் பெண்களின் மனோவலிமையும் பொறுமையும் ஆணினது வெற்றிக்கு தூண்டுகோலாக அமைகிறது.

சங்ககாலப் புலவர் ஒளவையார் முதல் 21ம் நூற்றாண்டில் சாதனையாளர்கள் வரை நோக்குவோமானால் பெண்களுடைய பாதச்சுவடுகள் எங்கும் பதிந்து காணப்படுவதை அவதானிக்க முடிகிறது. அன்றைய காலத்தில் பெண்களின் பெருமை அரசோச்சியமையைக் காணமுடிகிறது. மேலும் நம் முன்னோர்கள் விட்டு சென்ற வரலாறுகள் எடுத்தும் காட்டுகின்றன தசரதனின் மனைவியான கைகேயி போர்க்களத்தில் தேருக்கு சாரதியாக இருந்தமையும் அனுலாதேவி இலங்கையை ஆண்டமையும், கற்புக்கரசியாகிய கண்ணகி பாண்டியனுடன் வழக்காடியமையும் உதாரணங்களாகக் கூறலாம். இவ்வாறான நிகழ்வுகள் பெண்களின் வீரம் துணிவு புத்திசாலித்தனம் ஆகியவற்றை விளக்குகின்றன. அன்றைய பெண்களுக்கு முற்றிலும் தாங்கள் சளைத்தவர்கள் அல்ல என்ற வகையில் இன்றைய பெண்கள் புரிந்து வருகின்ற செயல்கள் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டியமை அன்றோ? இன்றைய காலத்தில் விண்வெளிக்குச் சென்று வீரச்சாவடைந்த கல்பனாசௌலா மற்றும் அனாதைகளுக்காகவே தன்னை அர்ப்பணித்த அன்னை தெரேசா இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க, பிரித்தானியாவின் முன்னாள் பிரதமர் மாக்கிறட் தட்சர். ஓட்ட வீராங்கனையான சுசந்திகா ஆகியோரின் சாதனைகள் பெண்களின் பெருமையை நிலைநிறுத்துகின்றன.

ஆணாதிக்கம், சீதனக்கொடுமைகள், பெண்களை மிகவும் துன்புறுத்தி வருகின்றன பெண்களின் நலனுக்காக குரல் கொடுத்து விழிப்புணர்வை ஏற்படுத்தியவர் பாரதியார் அவர் ஒரு தீர்க்கதரிசியும் கூட "புதுமைப் பெண்" கவிதை மூலம எதிர்காலப் பெண்கள் அடைய விருக்கும் சாதனைகளை கூறியுள்ளார். "நிமிர்ந்த நன்னடையும், நேர் கொண்ட பார்வையும் அஞ்சாநெஞ்சும், அவர்களுக்கு வேண்டும். என்று கனவு கண்டார். அவரது கனவு நனவானது பெண்கள் எவ்வளவு சாதனை படைத்தாலும் அடக்கம், பணிவு, தாய்மை என்பனவற்றின் உறைவிட மாக இருக்க வேண்டும். அவர்களே உலகின் உயிரோட்டத்தை நிலைபெறச்செய்பவர்கள். அவர்கள் வீட்டிற்கும் தேசத்திற்கும் நறுமணத்தையும் நல்லெழிலையும் கொடுக்கவேண்டியவர்களாக வாழவேண்டும்.

இ. சோபனா,
தரம் 13, கலை.



# பாடசாலை அபிவிருத்திச் சங்க அறிக்கை (SDS)

| | | |
|---|---|---|
| தலைவர் | : | திரு. இ. பாலகுமார் (அதிபர்) |
| செயலாளர் | : | திரு. ம. சச்சிதானந்தம். |
| பொருளாளர் | : | திரு. சி. சசீலன் |
| நிர்வாகசபை உறுப்பினர்கள் | : | |
| | | திரு. இ. செல்வமகேசன் |
| | | திருமதி. ஜெ. மேகலாதேவி |
| | | திரு. கு. இராசமாணிக்கம் |
| | | திரு. ஆ. குமாரசாமி |
| | | திருமதி. பூ. சத்தியன். |
| | | திருமதி. ஜெ. கலாதரன் |
| | | திருமதி. கௌ. செந்தில்குமரன் |
| நலன் விரும்பிகள் | : | திரு. சி. தியாகராசா |
| | | திரு. சு. சேமானந்தன். |


எமது சங்கத்தின் கடந்தகால அறிக்கையை உங்கள் முன் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். கல்லூரியின் பௌதிக வள அபிவிருத்திக்கும், கல்வி, அபிவிருத்திக்கும் எம்மாலான பங்களிப்பைச் செலுத்தி வருகின்றோம்.

கல்லூரியின் புதிய கட்டடத்தேவைக்காக பழைய கட்டடத்தை இடிப்பதற்கு நிதியுதவி புரிந்தோம் மேல்மாடி திருத்த வேலையுடன் புதிய சமயலறையையும் அமைத்துக்கொடுத்தோம். மேல்மாடிச் சுவரில் நீர்க்கசிவு காணப்பட்டமையால் அதனைத் திருத்தியமைத்து உதவியுள்ளோம். இவ்வாறாக பௌதிக வள அபிவிருத்தியினை மேற்கொள்வதன் மூலம் கல்வி அபிவிருத்திக்கு உதவுகின்றோம். இனிவரும் காலத்திலும் பாடசாலையின் அபிவிருத்திக்கு எம்மாலான உதவிகளைச் செய்ய ஆவலாக உள்ளோம். பரிசுத்தினம் சிறப்புறவும், சுடரொளி தொடர்ந்து மலரவும் எமது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

**ம. சச்சிதானந்தம்**

செயலாளர்


RE-LOAD
COM-E-LOAD
at your finger tips
දැන් හරි ලේසියි
இப்போது மிகவும் சுலபம்
கொமர்ஷல் வங்கியின் ஷொப்பிங்
டெபிட் அட்டையை பணம் செலுத்தும்
சகல நேரங்களிலும் பாவியுங்கள்...
பொருட்கொள்வனவு
பலசரக்கு கொள்வனவு
பிரயாணம்
உணவு
மருத்துவம்
பில் கொடுப்பனவுகள்
எரிபொருள்
VISA
ATM
COMMERCIAL BANK


COMMERCIAL BANK
Our Interest is in You
COMBANK
INTERNATIONAL
COMMERCIAL BANK
VISA


Hatton National Bank
A quoted public company incorporated in Sri Lanka in March 1970, with limited liability
HNBயின் சிறுவர்களிற்கான சிறப்பு
சேமிப்புத் திட்டம் "சிங்கிதி"
மேற்படி சேமிப்புக் கணக்கை ஆரம்பிப்
பதன் மூலம் உங்கள்
மழலைகளின் எதிர்காலத்தேவைகளுக்கு
அடித்தளமிடுவதுடன் கவர்ச்சியான
பரிசில்களையும் வெல்லுங்கள்
PATHUM VIMANA
அடகு சேவை
இப்போது சனிக்கிழமைகளிலும்
காலதாமதமற்ற துரித சேவை
HNB
Personal
LOANS
A loan as personal asyour needs
மாதாந்த சம்பளம் பெறும்
அரச/அரச சார்பற்ற / தனியார்
ஊழியர்களுக்கு அவர்களின்
தேவைகளுக்கு முற்றிலும்
கணணி மயப்படுத்தப்பட்ட
இலகு கடன் வசதி
HNB
ஹற்றன் நஷனல் வங்கி திருநெல்வேலி கிளை
HNB Your Partner in Progress

# வினோ நகைப்பூங்கா

**தங்க, வைர நகை வியாபாரம்**

22 கரட் தங்க நகைகள் குறித்த தவணையில்
உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.

Phone: 021 222 5394 Fax: 021 222 2824

நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்கு
சிறந்த ஸ்தாபனம்!

**185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

# NEW Power World

## SPORTS CENTER

THIRUNELVELY
T.P.: 077 336 7458
021 222 7013

அனைத்து விதமான விளையாட்டு உபகரணங்களும்,
மற்றும் சீருடைகள், உடற்பயிற்சி சாதனங்கள்
உடனுக்குடன் பெற்றுக்கொள்ளலாம்.

**உனை நாடி வருபவர்களுக்கு நல்லருள் காட்டிவிடு!**

# ராம்கோ சீமெந்து

# RAMCO CEMENT

**ஆசியாவின் முதலாம் தர(நம்பர்-1) தொழிற்சாலையாக தெரிவு செய்யப்பட்ட RAMCO சீமெந்து (கோபுரமார்க்) என்பதை மக்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.**

MADRAS CEMENTS LTD RAMCO CEMENT

- இலங்கையின் **SLS 107** தரச்சான்றிதழ் பெற்றுக்கொண்ட சீமெந்து
- 50 ஆண்டுகள் நிறைவைக் கொண்டாடும் சீமெந்து
- மிகமிக உயர்தரம் கொண்ட சீமெந்து
- **ISO 99001** உலகத்தர சான்றிதழ் பெற்றுக்கொண்ட சீமெந்து

**ராம்கோ சீமெந்தை பயன்படுத்துங்கள்!**
**உங்கள் பணத்தை மீதப்படுத்துங்கள்!**

**ராம்கோ சீமெந்தின் ஏக இறக்குமதியாளர்கள்**

# ஈஸ்வரபகவான் அன் கம்பனி

**தொ.பே: 021 222 2122**
**021 222 2350**

**91, ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

# யசோ மோட்டோர்ஸ் & ஹாட்வெயர்ஸ்

# YASO TVS





TVS

**தலைமை நிறுவனம்:**

இல.163, ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்.

T.P: 021 222 2544

021 222 7566



**கிளை நிறுவனம்**

A9 றோட்,

சாவகச்சேரி,

(வைத்தியசாலை முன்பாக)

T.P: 021 7200950

# City Medicals

## 487, Hospital Road, Jaffna.
## Tel: 021 222 2198
## Fax: 021 222 3880


**DISTRIBUTORS FOR**


**Astron Limited**
**Sanofi - Aventis Lanka Ltd**
**Mega Pharma (Pvt) Ltd**
**Kamazu (Pvt) Ltd**
**Nawakrama (Pvt) Ltd**

**Swiss Biogenics Limited**
**Glaxo Wellcome Ceylon Limited**
**Smithkline Beecham (Private) Ltd**
**SMM Halcyon (Pvt) Ltd**
**J.L.Morisin Son & Jones (Ceylon) PLC**

**State Pharmaceuticals Corporation of Sri Lanka**
**Emerchemie NB (Ceylon) Limited**
**Chemical Industries (Colombo) PLC & Orthopaedic Items**
**Lizzy & Canada (Pvt) LTD**


Say goodbye to all the worries of living under someone else's roof.
You have a friend
Build, buy, extend or renovate your home with a People's Bank Jaya Nivasa Housing Loan. For details contact the head office or your nearest branch.
JAYA NIVASA
PEOPLE'S BANK


PEOPLE'S BANK
"...a source of strength that will never let me down"



ARE YOU READY FOR THE "PARINATHA" PILGRIMAGE?
People's Bank offers Parinatha account holders 25 chances to win pilgrimages to India or cash prizes of Rs. 100,000/-.
Save in a Parinatha account before 31st December 2008 and maintain a balance of Rs. 50,000/- or more till 31st March 2009 to be a winner.
PEOPLE'S BANK
PARINATHA
Senior Citizens Account
Life begins at 55
*Conditions Apply
PEOPLE'S BANK


PEOPLE'S BANK
THE PULSE OF THE PEOPLE
1961 2011
50
ANNIVERSARY


GREEN GRASS Hotel and Restaurant
No. 33, Aseervatham Lane, Hospital Road, Jaffna
Every one has a great Holiday story of Green Grass Hotel,
Jaffna, situated in the Heart of the city of Jaffna in Northern
Sri Lanka.
Jaffna Library, Jaffna Fort, Nallur Temple,
Karainagar Sivan Kovil, Casuarina Beach,
Temple and Nagatheepa Vihara are
easily accessible.
Comfortable Rooms with Air conditioning
Double Bed Room 07 Nos
Triple Bed Room 10 Nos
10 Nos
Facilities & Services Available
Eastern & Western Cuisine
& well stocked Bar
Swimming Pool
Ample Parking Facilities
Vehicle for Hire
24 hours Room Service
Same day Laundry Service

# எமது மண்ணிற்கு உரித்தான பாரம்பரியமிக்க தொழில்நுட்ப உரிமை

TAFE




அன்று MF 240 தொழில்நுட்பத்தில் இலங்கை மண்ணில் விளைச்சலைப் பெருக்கியதோடு, இன்றும் அதே 240 தொழில்நுட்பத்துன் "டஃபே" (TAFE) டிரெக்டர், எமது வம்சத்தினரின் பரம்பரை நம்பிக்கையைக் கொண்டு உங்கள் வாழ்க்கையையும் செழிபாக்கிடுங்கள். அசல் "டஃபே" (TAFE) டிரெக்டரை பிறவுண்ஸ் இடமிருந்துப் பெற்றுக் கொள்ளுங்கள்.

## ஏக விநியோகிஸ்தர்கள்

**சிவகுரு மோட்டோர்ஸ்**
A9 சாலை
கரடிப்போக்கு சந்தி,
கிளிநெச்சி
தொ.பே: 0777722305 (யசோ)
0772298896 (நிஷா)

**மாவடியான் ரேடர்ஸ்**
சந்தை அருகாமை
சுன்னாகம், யாழ்ப்பாணம்
தொ.பே: 0777722305 (யசோ)
0779216878 (தவம்)

- ☑ விற்பனைக்கு பின் விசேட சேவை
- ☑ பிறவுண்ஸ் உத்தரவாதம்
- ☑ குறைவான எரிபொருள் பாவனை
- ☑ நீடித்த பாவனை

Browns Agriculture

Browns
பிறவுண்ஸ் அண்ட் கம்பனி பீ.எல்.சி
481, டி.பி ஜயா மாவத்தை,
கொழும்பு 10

Peninsula Printers